
www.tamilanangam.net

# எரிமலை

ஏப்ரல் 2001



## அமைதிக்குப் பின்னான புயல்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net




# அக்கறைப்பூக்கள்

எரிமலை இதழின் மூலம் தமிழீழ மக்களின் உண்மையான உணர்வுபூர்வமான விடுதலைப் போராட்டத்தினை என் கண்முன்னால் தரிசிக்கக்கூடியதாக உள்ளது. எரிமலை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழன் விழித்தெழுந்துவிட்டான் என்பதைச் சுட்டுகின்ற இதழியற் பொக்கிசம். எனது நண்பர்களும் நானும் எமது சகோதரர்களின் போராட்டத் தர்மத்தை எரிமலை வாயிலாக உணர்கிறோம்.

**கே.சி.மணி**
**ஈரோடு- தமிழ்நாடு**

✉ ✉ ✉

டிசம்பர் 2000 இதழ் கண்டேன். கண்களில் விழும், பெருகும் நீர் ஆனந்தமா? அழுகையா? என் நிலை எனக்கே புரியவில்லை. மண்ணில் வாழ வீழ்ந்திட்ட நமக்குச் சொந்த மண்ணில்லை. தொடர்பு முகவரியோ தொலைதூர நாடுகளில்! என் சகோதரனுக்கு என் மண்ணில் தொடர்பில்லை. அச்சு மட்டும் தொடர்புபடுத்தும் நிலை. என்னே விநோதம்! உலகமயமாக்கல் முகமூடியில் தனிமனித தொடர்புகள் நேருக்கு நேர் கரம் குலுக்கிப் பேசுதல், தேவையற்றது தான் அவர்கள் பார்வையில். ஆனால் தமிழராகப் பிறந்திட்ட நமக்கு புறாவிடு தூதும், ஓலைச்சுவடிகளும், மணியடித்து அறிவித்தல் தருவதும், உறவினரோடு நன்னாளில் பொருந்தி மகிழ்வதும் நமது பாரம்பரியம். அந்தோ அனைத்தும் பறிபோனதே!
இல்லை எமது நெஞ்சம் புதுப்புனலாய் வெடிக்கிறது. எங்கும் பாயும் புதுவெள்ளம் எமது புதிய பூமியைச் செதுக்கும். அக்கரையில் வார்த்தெடுப்போம் புது நாகரிகம். எரிமலை வெடித்திடின் ஆக்கிரமிப்பாளர் அழிந்து போவார்.
தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் எம் தமிழர் வரலாற்றின் ஒரே நாயகன். யாம் இனி எமது பண்டை வரலாற்றைக் கூறப்போவதில்லை. எமது தமிழீழ மாவீரர் தம் பெயர் சொல்லி எம் தமிழர் வரலாறு எழுதுவோம்.
எரிமலையை பார்வையில் பதித்து உள்வாங்கியதில் எனது உள்ளம் எரிமலையானது. தொடர்ந்து படிக்க, சுவைக்க, உணர எமது உள்ளக்குமுறலுக்கு வடிகாலாய் எரிமலை அமைந்திடும்.

**கருவை சு.புகழேந்தி**
**சேலம்- தமிழ்நாடு**

✉ ✉ ✉

எனக்கு அண்மையில் தைமாத எரிமலை இதழ் கிடைத்தது. தன்மானச் சின்னமான தளபதி கேணல் கிட்டுவினது திருவுருவை ஓவிய வடிவில் தாங்கி வந்தது நெஞ்சினில் உரத்தினை எட்டியது. உள்வந்த அனைத்து விடயங்களும் பொருத்தப்பாடாய் வெகுசிறப்பாய் அமைந்தன.

**சிறீனிவாசன்**
**மதுரை- தமிழ்நாடு**

✉ ✉ ✉

நான் தையலகம் ஒன்றில் பணியாற்றும் சாதாரண தொழிலாளி. அண்மையில் எனது நண்பர் ஒருவரின் வீட்டில் எரிமலை இதழைப் பார்த்தேன். உண்மைக் கருவூலமாய் மாயத்திரையினை விலக்கும் அற்புத சஞ்சிகையாய் எரிமலை விளங்குகின்றது. இதுவரை ஈழ விடுதலை குறித்த பொய்மைச் செய்திகளை என்னுள் அகற்றி ஈழ விடுதலை அவசியத்தை என்னுள் ஊட்டிவிட்டது எரிமலை. சில செய்திகள் என்னை ஆவேசப்படவைக்கின்றன. ஆக்கிரமிப்பாளரின் அடக்குமுறையை உடைத்தெறியும் போராளிகளின் வெற்றிச்சங்காக விளங்கும் எரிமலைக்கு வாழ்த்துக்கள்.

**எஸ்.பி. நாகராஜன்**
**திருவண்ணாமலை- தமிழ்நாடு**

நான் ஒரு பொதுவுடமைவாதி. தேசிய இனங்கள் உலகம் முழுவதும் நடத்தும் போராட்டங்களை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வருகின்றேன். அந்த முறையில் என் அயல்நாடான ஈழத்தில் என் சகோதரர்களும் சகோதரிகளும் நடத்தும் தேசிய இன எழுச்சி மிகு போராட்டத்தை நான் ஒரு தமிழன் என்ற வகையில் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.
எங்களின் காலக்கண்ணாடியாக விளங்கும் எரிமலைக்கு எனது வாழ்த்துக்கள்.

**ப.பழனிகுமார்**
**திருவாரூர்- தமிழ்நாடு**

✉ ✉ ✉

ஓயாத அலைகள்-3 நிழற்படத் தொகுப்பைப் பார்த்தோம். ஒவ்வொரு படத்திலும் விடுதலைப் புலிகளின் தியாகத்தையும், வீரத்தையும் பார்த்தோம். தமிழீழ விடுதலைக்கு எம்மால் இயன்றளவு தோள் கொடுப்போம். கருத்துப் பெட்டகமாம் எரிமலை எங்கும் பரவி விடுதலைக்கு உரம் சேர்க்க எமது வாழ்த்துக்கள்.

**மு.ஆறுமுகபாண்டியன்**
**சென்னை- தமிழ்நாடு**

✉ ✉ ✉

எரிமலையின் பெப்ரவரி இதழ் பார்த்தேன். தன்னம்பிக்கையின் வடிவாய் கடலோடும் தோணி கரைசேர்ந்து ஊரும் விதம் கண்டு மனதில் ஒரு புத்தெழுச்சி பரவியது. கைதடியின் கதை கண்ணீரை வரவழைத்தது. தாயகத்தில் அந்நியரை அகற்ற வேண்டிய தேவையை ஆழமாக வலியுறுத்தியது. மாவீரன் மேஜர் கேடில்சின் அணையாத தீபம் ஆழமான வீரத்தை நெஞ்சில் ஏற்படுத்திற்று.

**சுரேஸ்**
**தூர்- பிரான்ஸ்**

✉ ✉ ✉

நான் சார்ந்த தமிழ்தேசப் பொதுவுடமைக் கட்சியின் தோழர் மூலம் தைமாத எரிமலை இதழ் கிடைக்கப் பெற்றேன். எரிமலை மாத இதழ் ஏதேச்சதிகாரிகளின் மனதில்கூட ஒரு இரக்க மனப்பான்மையை ஏற்படுத்த வல்லது. எரிமலையின் ஒவ்வொரு பக்கமும் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்து வருகின்றது. எரிமலையின் ஒவ்வொரு வரிகளும், சிங்கள வெறியர்களின் கோரத்தனத்தை சுட்டுவனவாக உள்ளன. எண்ணற்ற இன்னல்களோடு திணறிக் கொண்டு தனது உரிமைக்கான போரைத் தொடர்ந்து நடத்தும் தமிழினம் மீது கொஞ்சம்கூட மனிதாபிமானமில்லாமல் இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட வல்லரசு நாடுகள் சிறீலங்கா அரசிற்கு துணைபோவது போக்கிரித்தனமானது.
இந்நிலையில் தமிழர்களின் மீட்பர் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனுக்கு ஆதரவாக ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் கைகொடுக்க வேண்டும். இதுவே தமிழர்களாகிய நாங்கள் செய்யக்கூடிய ஒரேயொரு உரிமைப் பணி. மலரட்டும் தமிழீழம்!.

**நா.ஞானசேகரன்**
**திருந்துறைப்பூண்டி- தமிழ்நாடு**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

ஏப்ரல் 2001

# உள்ளே...

## கட்டுரை


| | |
|---|---|
| தமிழ்ப்பெண்கள் மீது கைவைத்தால்... | பக்கம் - 08 |
| பிரித்தானியத் தடையும் பேரினவாதச் சக்தியும் | பக்கம் - 10 |
| எல்லைகாக்கும் இல்லங்கள் | பக்கம் - 12 |
| அக்கராயனில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள வரலாற்றுமையம் | பக்கம் - 18 |
| உண்மைக்களிப்பு | பக்கம் - 20 |
| சனநாயகம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க... | பக்கம் - 26 |
| அறப்போர் தொடுத்த அன்னை | பக்கம் - 28 |
| அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும் | பக்கம் - 38 |
| இடர்நடுவே எழும் கலைகள் | பக்கம் - 42 |


## செவ்வி


| | |
|---|---|
| வன்னயின் மருத்துவத் தேவையை அரசு பூர்த்தி செய்து தருவதாயில்லை வைத்திய கலாநிதி சி.சிவமோகன் | பக்கம் - 44 |


## அணையாத தீபங்கள்


| | |
|---|---|
| லெப்.கேணல் கிறேசி | பக்கம் - 50 |


## சிறுகதை


| | |
|---|---|
| இரண்டாவது காலம்– கோணேஸ் | பக்கம் - 30 |
| மரம்– கருணைரவி | பக்கம் - 36 |
| தெருவெல்லாம் சுடுகாடாய் | பக்கம் - 40 |


## கவிதை


| | |
|---|---|
| போராளிகளின் படைப்புக்கள் | பக்கம் - 11 |
| சிட்டுக்குருவிகளுக்கு சிறகுமுறியாது.. உலைக்களம்- வியாசன் | பக்கம் - 16 |
| வரியெழுதிச் சாகும் வரம் தா – புதுவை இரத்தினதுரை | பக்கம் - 22 |
| பாலியம்மன் பள்ளு... –நிலாந்தன் | பக்கம் - 24 |


## தொகுப்பு


| | |
|---|---|
| தமிழர் விடுதலை வரலாற்றில் ஏப்ரல் | பக்கம் - 23 |
| பதிவுகள் | பக்கம் - 48 |
| மீள்பார்வை மார்ச் 2001 | பக்கம் - 51 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 52 |



**06** இராணுவ வரலாற்றை மாற்றி எழுத வைத்த ஆனையிறவிற்கான....







**14** பொங்குதமிழ்...





**32** சிறீலங்காவின் பிடியிலிருந்து உயிர்தப்பிய பத்திரிகையாளர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net





# சிங்கள அரசு இராணுவத் தீர்வையே விரும்புகிறது

தமிழீழத் தனியரசே தீர்வாக இருக்கும் என்பதை தமிழீழத்தில் நடைபெற்ற சம்பவங்கள் காட்டுகின்றன. இனக்கொலையை இலக்காகக் கொண்ட எத்தனையோ தாக்குதல்களை எதிர்கொண்ட தமிழ் மக்கள் தாம் சமாதானமாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டுமாயின் தமிழீழத்தைத் தவிர வேறு தீர்வு எதுவும் இருக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்துள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கம் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்க்கப் போனால் பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. யுத்தநிறுத்த காலத்தில் அவர்கள் பெருந்தொகையில் ஆயுதங்களை வாங்கிக் குவித்திருக்கிறார்கள். இதிலிருந்து அவர்கள் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது புலனாகிறது. பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களை அவர்கள் தாய் மண்ணிலிருந்து விரட்டியடித்து அகதிகளாக்கியிருக்கின்றார்கள். தமிழீழத்திற்கான போராட்டம் வளர்ந்து நாளுக்கு நாள் உக்கிரம் அடைந்து வருகிறது. தமிழீழத் தனியரசு அமைவது திண்ணம். இந்த வரலாற்று நிகழ்ச்சியை எந்தவொரு சக்தியாலும், அது எத்தனை வலிமை வாய்ந்ததாக இருந்தாலும், தடுத்து நிறுத்தவே முடியாது. இதற்கு மாறாக ஏதாவது நிகழுமானால் அது தமிழ் மக்கள் இப்போராட்டத்தில் அழிவதாகத்தான் இருக்கும். நாம் எல்லோரும் அழிந்து தமிழினமே இத்தீவிலிருந்து சங்காரம் செய்யப்படலாம்.

சிங்களத் தலைமைப்பீடத்தில் மாற்றம் ஏற்பட்டாற்போல இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமென நாம் நினைக்கவில்லை. மாறிமாறி பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எம்மை ஏமாற்றித் துரோக மிழைத்தமையை எமது வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தமிழர்களாகிய நாம் எமது விடுதலைக்காக உயிரை அர்ப்பணிக்கவும் தயாராக இருக்கிறோம்.

ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித காலவரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும். இது மக்கள் யுத்தம். மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைதான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன. எமது விடுதலைப் போராட்டத்தின் பழுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை. எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். எமது வாழ்நாளில் எமது இலட்சியம் நிறைவேறாது போகலாம். அப்படியாயின் அடுத்த தலைமுறைக்கு போராட்டத்தைக் கையளிக்கும் தெளிந்த பார்வை எமக்குண்டு.

**— தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.**

1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பிரபல இந்திய ஆங்கில ஏடான சண்டேயிற்கு வழங்கிய பேட்டியிலிருந்து...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# தலைவாசல்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

இருபதாம் ஆண்டு
ஏப்ரல்
2001

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

★


**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு



C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com


## புலிகளின் பலமே தமிழர்களின் கவசம்



சிறீலங்கா அரசின் இராணுவக் கனவிற்கு புலிகள் "மரணஅடி" கொடுத்துள்ளனர். புலிகளின் போர்நிறுத்த அறிவிப்புக்களை உதாசீனம் செய்து, அதனை பலவீனத் தின் அறிகுறி என உலகெங்கும் பரப்புரை செய்து தமது இராணுவப் பலப்படுத்தல் களில் தீவிரம் காட்டிய சிறீலங்காவிற்கு "அக்னி கீல" நடவடிக்கை ஏற்படுத்தியது வெறும் இராணுவ பேரழிவு மட்டுமல்ல அரசியல் - இராஜதந்திரத் தோல்வியுமாகும்.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்புக்கள் ஏற்படுத்திய இணக்கச் சூழ்நிலையை பெரிதும் மதித்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்கெய்ம் அவர்கள் சிறீலங்கா ஆரம்பித்த "அக்னி கீல" நடவடிக்கை உண்மையில் ஒரு பெரும் பின்ன டைவை தமது முயற்சிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது எனப் பகிரங்கமாக வெளியிட்ட அதிருப்தியானது சிறீலங்காவிற்கு ஏற்பட்டுள்ள இராஜதந்திரத் தோல்வியே யாகும். "அக்னி கீல" பற்றிய தனது மறைமுகமான ஆழ்ந்த கவலையை இந்தியா வெளியிட்டிருந்தது. இத் தோல்வியின் பின்னர் வாசிங்டனில் தன்னைச் சந்தித்த சிறீலங்கா வெளியுறவு அமைச்சரிடம் போரை நிறுத்தி பேச்சுக்களை நடாத்துமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கேட்டுக்கொண்டதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. வன்னி சென்ற கனடா தூதுவர் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளரைச் சந்தித்து உரையாடியதுடன், போர் நிறுத்தப்பட வேண்டும் என இரு தரப்பையும் கேட்பதாக அறிவித்தார். போரை நடாத்தியவாறு பேச்சுக்களை நடாத்தலாம் என்கின்ற சிறீலங்கா சனாதிபதியின் விசித்திரமான நிலைப்பாட்டுடன் பகிரங்கமாக முரண்படும் நிலையை உலக சமூகத்திற்கு கிளாலி - எழுது மட்டுவாள் - நாகர்கோவில் களமுனைத் தோல்வி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பு நான்கு மாதகாலத்திற்குத் தொடர்ந்தபோது இதற்கு உடன்படுமாறு சிறீலங்காமீது பகிரங்க அழுத்தத்தைக் கொடுக்க இந்தியா உட்பட உலகின் முக்கிய சக்திகள் தவறிவிட்டன. சிறீலங்காவின் இராணுவக் கனவுக்கும், பேரினவாதத் திமிருக்கும் உரமிடும் விதத்தில் புலிகள் இயக்கம் மீது பயங்கரவாத முத்திரையை பிரித்தானியா பிரயோகித்தது. புலிகள் தவிர்க்கமுடியாத கட்டத்தில் தமது போர்நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த சில மணிநேரங்களில் 15,000 சிங்களப் படையினர் பெரும் ஆயுததளபாடங்களின் உதவியுடன் போரை ஆரம்பித்து தோல்விகண்டபோதுதான், ஓயாத அலைகள் நடவடிக்கை ஏற்படுத்திய இராணுவச் சமநிலை மாற்றமானது வெறும் பிரமையல்ல ஒரு நிதர்சனமான உண்மை என்பதை பல தரப்பினரும் உணர்ந்து கொண்டதை தமிழர்களினால் அறிய முடிகின்றது. புலிகளின் பலமே சிங்களத் தின் இராணுவ - அரசியல் - இராஜதந்திர சதித்தனத்தை மற்றுமொரு தோல்விக்குள் தள்ளியுள்ளது.

எனினும், சிறீலங்கா தனது இத்தோல்வியை மறைப்பதற்கும், அடுத்து போர்த் தயாரிப்புக்கு ஆயத்தங்களை மேற்கொள்ளவும் தயாராகிவிட்டமையை அதனது வழமையான இனவெறி கக்கும் அறிக்கைகள் மூலம் வெளிக்காட்டியுள்ளது. சந்திரிகாவின் இரட்டை நாக்குகள் மீள தனது வழமையான நச்சுத்தனத்தைக் கக்குகின்றது. யாழ். மக்களுக்கு உரையாற்றுவதாக நடாகமாடியும், 18 பக்கங்களில் பொய்களால் புனையப்பட்ட அறிக்கைகளை வெளியிட்டும் திருத்தமுடியாத அல்லது திருந்தமுடியாத நிலையில் தான் நிற்பதை சந்திரிகா உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தக் களநிலவரமானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலிகளின் பலம் தொடர்ச்சியாக பலப்படுத்தப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றது. சிங்கள அரசும், இராணுவமும் தமது போர்த்திட்டத்தில் மேற்கொள்ளும் விட்டுக் கொடுப்பற்ற இறுக்கப் போக்கை முறியடித்து நியாயமான தீர்வு எமது மக்களுக்குக் கிட்டவேண்டுமாயின் அது பலமான தமிழர் தலைமையினால் மட்டுமே சாத்தியமாகும். சிங்களத்தின் எத்தகைய "அக்னி கீல"க்களையும் அணைக்கும் புலிகளின் பலம் மட்டுமே தமிழர்களின் உண்மையான பாதுகாப்புக் கவசங்களாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# அமைதிக்குப் பின்

## 'தீச்சுவாலை'யும், அதன் முறியடிப்பும்

- மொறிஸ் தர்மபாலன்

நான்கு மாதகால இடைவெளிக்குப்பின்னரும் புலிகள் வழமைபோல் பலமாகத்தான் இருக்கின்றார்கள், அவர்கள் என்றுமே பலசாலிகள் தான் எனத் தாமாக முன்வந்து மீண்டுமொரு சந்தர்ப்பத்தை வழங்கி நிரூபித்திருக்கின்றன சந்திரிகா அரசும் அதன் படைகளும்.

நன்கு திட்டமிடப்பட்ட, தயார்ப்படுத்தப்பட்ட, பயிற்றுவிக்கப்பட்ட பூரண ஏற்பாடுகளோடு 'தீச்சுவாலை' என்கிற குறியீட்டுப் பெயர் கொண்டு, சிங்களப் படைத்தலைமை பெருமெடுப்பில் ஆரம்பித்த படைநகர்வு, சிறிதளவு வெற்றியைத் தானும் பெற்றுத்தராத நிலையில் பாரிய அவமானத்தைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றது. இதுவே பல ஆய்வாளர்களினதும் கருத்து.

கடந்த நான்கு மாதகாலமாக, இலங்கையின் இனப்பிணக்கிற்கு ஓர் தீர்க்கமான அரசியல் தீர்வு காணவேண்டியதன் அவசியம் கருதி விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தமொன்றைச் சுயமாக தாமே முன்வந்து கடைப்பிடித்ததுடன், சிறீலங்கா அரசைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு அழைப்பு விடுத்து, அதற்காகப் பல நல்லெண்ண சமிக்ஞைகளையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தனர். ஆனால், சிறீலங்கா அரசோ அவற்றைப் புறந்தள்ளியதுடன், அதனை ஒரு மாயை என்றும் வெளிநாடுகளுக்குப் பிரசங்கித்தது. அது மட்டுமன்றி யுத்தம் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு எனக்கூறிப் பல நாடுகளிலிருந்தும் நவீன போராயுதங்களையும், விமானங்களையும் வாங்கிக் குவித்து பாரிய தாக்குதல் நடவடிக்கைக்குத் தன்னைத் தயார்ப்படுத்தியது. விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம், இத்தயார்ப்படுத்தலுக்கு மிகப்பெரும் உறுதுணையாகவும் இருந்தது. வருடக்கணக்காக ஓய்வின்றிய யுத்தத்தால் களைத்துப் போயிருந்த படையினருக்கு, இக்காலப்பகுதி மிகப்பெரிய ஓய்வாகவும் ஆறுதலாகவும், உளவியல்ரீதியிலான தேறுதலாகவும் இருந்தது. மேலும் ஆயுத தளபாடங்களையும், படையினரையும் விரும்பிய இடங்களுக்கு நகர்த்துவதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம் சாதகமாக அமைந்தது. இவ்வாறு இவையெல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்து, வெற்றி எம்பக்கமே என்கின்ற மமதையோடு சிங்களப்படைத் தலைமை தீச்சுவாலைக்கு வித்திட்டது.

விடுதலைப் புலிகள் தாம் யுத்தநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்தபின்னர், அவர்கள் முந்திக்கொள்ள முதல் தாமே முந்திக்கொண்டு மிகவேகமாக முன்னேறி, ஆனையிறவைக் கைப்பற்றிவிடவேண்டும் என்கிற அவசரத்தில் முப்படைகளின் மிகுந்த சூட்டாதரவுடன், செறிந்த படையினரின் ஒருமித்த தாக்குதலுடன் 25ஆம் திகதி அதிகாலை 3.00 மணிக்கு 'தீச்சுவாலை -1 ' நடவடிக்கையை ஆரம்பித்தன சிறீலங்காப்படைகள். வழமைபோன்று நகர்வை ஆரம்பிப்பதற்கு முன்னதாக புலிகளின் முன்னரங்க நிலைகள் நோக்கியதாக, நாகர்கோயில் தொடங்கி கிளாலி வரையான 15.5 கி.மீ. நீளத்துக்கு, ஒரே தடவையில் (1.5 செக்கனுக்கு ஒரு எறிகணை வீதம்) 40 எறிகணைகளை வீசி 30 சதுர கி.மீ. வரையான பகுதிகளை இடைவெளியின்றித் தாக்கவல்ல பல்குழல் எறிகணை செலுத்திகள் (16 மல்ரி பரல்கள் என்று சொல்லப்படுகின்றது எனின் நிமிடத்திற்கு 640 எறிகணைகள்) மற்றும் ஆட்லறிகளைப் பாவித்து ஒரு 'செல்' மழை பொழியப்பட்ட பின்னர் மேலதிகமாக, புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட விமானப் படையின் புதிய நவீன யுத்த விமானங்களான மிக், கிபீர் போன்ற 10ற்கும் மேற்பட்ட விமானங்கள் மாறிமாறி புலிகளின் நிலைகள் மீது குண்டுகளைப் பொழிந்தபின் தனது மும்முனைகளினூடான பாரிய நகர்வை படைத்தரப்பு ஆரம்பித்தது.

சிறீலங்காப் படைகள் ஆனையிறவை நோக்கியதான பாரிய நகர்வொன்றை எந்நேரமும் மேற்கொள்வார்கள் என்று புலிகள் ஏற்கனவே நன்கு உணர்ந்திருந்தனர். ஏனெனில், ஆனையிறவை இழந்தது சிங்கள அரசுக்கும் அதன்படைகளுக்கும் ஒரு தன்மானப்பிரச்சினை. இதைவிட அதன் கேந்திர முக்கியத்துவமே யாழ்ப்பாணப் படைகளின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பிரதான காரணி என்றும் சொல்லலாம். இவற்றோடு 'புலிகள் பலவீனமடைந்துவிட்டதாலேயே தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுக்கின்றார்கள்' என்று வெளிநாடுகளில் செய்யப்பட்ட பிரச்சாரத்துக்கு வலுச்சேர்க்க புலிகளிடம் இருந்து ஏதாவது பகுதியை தாம் கைப்பற்ற வேண்டும் என்றும் சிங்களத் தலைமை எண்ணியிருக்கலாம். அந்தப் பகுதி எந்த இடம் எனப் புலிகள் நன்கே ஊகித்திருந்தனர். இந்த வகையில் முன்னேறிய படையினர்மீது கிட்டு பீரங்கிப் படையணியின் சூட்டாதரவுடன் பெரும் பதில்த்தாக்குதலைப் புலிகள் மேற்கொள்ளத் தொடங்கினர்.


ஜெயசிக்குறு படை நகர்வின்போது, தாம் அகன்று பரந்து முன்னேறியதாலேயே காலதாமதமும், வெற்றியும் கிட்டாது போனது என்பதை உணர்ந்து, மிக ஒடுங்கலான பகுதியினூடே படையினரின் தொகையை அதிகரித்து, சூட்டுச்செறிவைப் பன்மடங்காக்கி, புலிகளின் அரண்களை உடைத்து வேகமான முன்னேற்றத்தை மேற்கொள்வது என்கிற புதிய தந்திரோபாயத்தில் களஅரங்கை அமைத்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




திருந்த படையினருக்கு, புலிகளின் இலக்குப்பிசகாத துல்லியமான எறிகணைத்தாக்குதல்கள் பாரிய, எதிர்பார்த்ததைவிட அதிகமான சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் முகமாலை நோக்கி முன்னேறிய படையணி மீண்டும் எழுதுமட்டுவாளுக்குப் பின்வாங்கிக்கொண்டதுடன், ஏனைய பகுதிகளிலும் தற்காலிகமாக சண்டையை ஒய்வுக்குக் கொண்டுவந்தன படைகள்.

பலாலிப் பெரும் படைத்தளத்தில் இருந்துகொண்டு தீச்சுவாலையை நெறிப்படுத்திக் கொண்டிருந்த கூட்டுப்படைகளின் தளபதியான ஜெனரல் றோகான் தளுவத்த, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்திரகிரி, விமானப்படைத் தளபதி எயர்மார்சல் ஜெயலத் வீரக்கொடி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அன்ரன் விஜேந்திரா மற்றும் பிரதிப் பாதுகாப் பமைச்சர் அநுருத்த ரத்வத்தவும் இணைந்து கள நிலவரத்தை அவதானித்து கட்டளையிடுதலில் மூழ்கியிருந்தனர். இவர்களின் கட்டளையின் பிரகாரம், புலிகளின் நிலைகள் மீது மீண்டுமொரு மூர்க்கமான விமான, கடற்படை, மற்றும் எறிகணைத் தாக்குதல் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னதாக புலிகளிடம் இருந்து எந்தவொரு எறிகணைகளும் ஏவப்படவில்லை. தமது விமானப்படையின் தாக்குதலால் புலிகளின் பீரங்கிகளுக்கும் மற்றும் கனரக ஆயுதங்களுக்கும் கணிசமான சேதம் ஏற்பட்டுள்ளதாலேயே புலிகள் பின்வாங்கியிருக்கக்கூடும் என்கிற எண்ணத்தில் மீண்டும் படைகள் முன்னேறத் தொடங்கின. இதன்போது புலிகள் எந்தவித எதிர்ப்பையும் வெளிக்காட்டாததால் சுமார் 2.5 கி.மீ வரை முன்னேறிய படைகள் தாம் 8 சதுர கி.மீ. பகுதியை கைப்பற்றிவிட்டதாகவும் இத்துடன் 'தீச்சுவாலை- 1' நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளதாகவும் தமது தரப்பில் குறைந்தளவு படையினரே இறந்தும், காயப்பட்டும் உள்ளார்கள் என்று அறிக்கை விட்டது. ஆனால், மறுதினமே புலிகளின் விசேட படையணிகள் தொடுத்த மின்னல்வேக அதிரடிகளால் படைத்தரப்பு சிந்தித்தேபார்த்திராத இழப்புக்கள் ஏற்படத்தொடங்கின. நிலைகுலைந்து ஓடிய படைச்

# னான புயல்

சிப்பாய்கள் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கி காலை இழந்தார்கள். இவ்வாறு கால்களை இழந்தவர்கள் மட்டுமே 600 பேர் என படைத்தரப்பே ஒப்புக்கொள்கின்றது. இவ்வாறு படைத்தரப்பின் சேதங்கள் மிக வேகமாக ஏறுவரிசையில் செல்ல, களநிலவரம் படுபாதகமாக மாறத் தொடங்கியது சிங்களப் படைத்தலைமைக்கு. புலிகள் பாவித்த தந்திரோபாயத்தைப் புரிந்து கொள்ளாது, தாம் எதிர்ப்பின்றி முன்னேறுவதாக எண்ணிப் புலிகளின் கண்ணி வயலுக்குள் இறங்கிய சிங்களப் படையணிகள் புலிகள் எதிர்பார்த்த தாக்குதல் வியூகத்திற்குள் வந்து சிக்கிக்கொண்டன. இதன் பின் அங்கு நடந்தது சங்காரம்.

30 மணிநேரமே இடம்பெற்ற சமரில் படைத்தரப்பு அல்லோலகல்லோலப்பட்டது. விமான நிலையங்களில் சிப்பாய்களின் சடலங்களும், காயப்பட்டவர்களும் சாரி சாரியாகக் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். இவ்வாறு இரத்மலானை விமான நிலையத்தில் 60 படையினரின் சடலங்கள் இறக்கப்பட்டுக்கொண்டிருக்க, இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரத்னாவோ தமது தரப்பில் இதுவரை 32 படையினர் மட்டுமே கொல்லப்பட்டுள்ளதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்துக்கொண்டிருந்தார். தலைநகர் எங்கனும் 'அம்புலன்ஸ்' வண்டிகள் அலறியடித்து ஓடித்திரிய, இரத்ததானம் செய்ய பொதுமக்களை முன்வரவேண்டிப் பல்வேறு அரச ஊடகங்களும் தகவல் பரப்பிக்கொண்டிருந்தன.

இவ்வாறு களத்திலும், களப்பின்னரங்கிலும் தோன்றிய சிக்கல்களால் படைத்தரப்பு தனது நடவடிக்கையைக் கைவிடவேண்டிய தேவை எழுந்தது. ஏனெனில், களத்தில் 400ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு 2000ற்கும் மேற்பட்ட படையினர் காயமடைய மொத்தத்தில் 5 பட்டாலியன் படையணியை களத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய தேவையை கள நிலவரம் தோற்றுவித்தது. அத்துடன், புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட பல யுத்த டாங்கிகள், பவள் கவச வாகனங்கள் என்பவற்றுடன் ஒரு எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியும் சேதமாக்கப்பட்டது. தாம் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான சேதத்தை தமது படைகள் சந்தித்ததாக இராணுவ வட்டாரமே ஒப்புக்கொண்டது. கள நிலவரம் இவ்வாறாய் அமைய, கட்டளைத் தலைமையின் உத்தரவுக்கும் காத்திராது சுருட்டிக்கட்டிய தீச்சுவாலையுடன் முன்பு இருந்ததைவிடவும் சற்றுப் பின்வாங்கி நிலைகொண்டன சிங்களப் படைகள், சாண் ஏற முழம் சறுக்கும் கதையாய்.

சிறீலங்காப் படைகளின் புதிய கொள்வனவான யுத்த தளபாடங்களோ அன்றி படையினருக்கு இதுவரை கிடைத்த ஓய்வினால் ஏற்பட்ட புதிய தென்பு என்பனவோ புலிகளுடனான போரில் எந்தவொரு கள நிலவர மாற்றத்தையும் தராது, பாரிய ஏமாற்றத்தையே சிங்களத் தலைமைகளுக்கு பரிசாகக் கொடுத்திருக்கின்றது. பல பட்டாலியன்களை ஈடுபடுத்தி 4 நாளில் 30 மணிநேரமே இடம்பெற்ற சமரில் 2 பட்டாலியன் படை முற்றாகச் சிதைந்துபோனதென்பது ஒப்பீட்டு ரீதியில் படைத்தரப்புக்கு ஜெயசிக்குறுவில் ஏற்பட்ட இழப்பைவிட அதிகமானது. இந் நான்கு நாள் சமரில் விடுதலைப் புலிகளின் தரப்பில் 75 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் யாழ். நோக்கி முன்னேறிய போது, குடாநாட்டில் சிக்கிக்கொண்ட தனது படைக்கு பல்வேறு நாட்டு உதவிகளைக் கோரிய சந்திரிகா அவர்கள், அதே படையினரைப் பலிக்கடாவாக்கி மூட்டிய தீச்சுவாலையினால் பெற்றுக்கொண்ட பயன் என்ன? பெருத்த அவமானமும் பாரிய தோல்வியுமே. சமாதானத்துக்கான எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்தபோதும், அவற்றை உதாசீனம் செய்து யுத்தம் மூலமே தீர்வென்ற அபத்தமான போர்க் கொள்கையினால் தனது நாட்டுக்கும், நாட்டுமக்களுக்கும் நன்மை செய்வதாகவும் பெருமைதேடித் தருவதாகவும் கூறிக்கொண்டு, நாட்டின் இளைஞர்களையும், நாட்டின் பொருளாதாரத்தையும் படுகுழியில் தள்ளி வருகின்றன சிங்களப் பேரினவாதத் தலைமைகள்.

அண்மையில் வெளியிடப்பட்ட மத்திய வங்கி ஆண்டறிக்கையில் கடந்தவருடம் 6வீதமாக இருந்த பொருளாதாரம் இவ்வருடம் 4.5 வீதமாகக் குறைவடையும் எனத் தெரிவித்து, இதற்கு யுத்தமே காரணம் என்றும், யுத்தத்திற்கு உடனடித்தீர்வு காணப்படவேண்டுமெனவும் கூறப்பட்டிருக்கின்றது.

சமாதான நல்லெண்ண சூழலுக்கு அமைவாய் யுத்தநிறுத்தம் செய்யாத சந்திரிகா அரசு, சிங்கள புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக 5 நாட்களுடன் தமது யுத்தநிறுத்தத்தை நிறைவு செய்து கொண்டது. ஆனால், 'அக்கினி கீல'வுக்கு மட்டும், களத்தில் விழும் படையினரின் தொகையையும் கணக்கிலெடுக்காது, 4 நாட்களுக்கு இந்த அழிவு யுத்தத்தை நீடித்திருந்தது. இதனை வைத்துக் கொண்டே சிங்கள அரசின் வரட்டுக் கௌரவத்தையும், அதன்பால் கொண்டுள்ள யுத்த மோகத்தையும் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். எதுஎப்படியோ சிங்களத் தலைமைகள் விரும்புவது சமாதானமல்ல, போர்தான் என்பதை புலிகளின் யுத்தநிறுத்தம் முடிந்த கையோடு வெளிப்படுத்தியிருக்கின்றது ஆட்சிப்பீடம்.

ஆறு கட்டங்களில் ஆனையிறவு எனத் தான் ஆரம்பித்த தீச்சுவாலையில் தானே வெந்து உருக்குலைந்துபோனது என்கிற மற்றுமோர் புதிய வரலாற்றுப் பாடத்தை சிங்களப் படைத்தலைமை தனது போரியல் வரலாற்றுத் தோல்விப் புத்தகத்தில் பதிவாக்கிக் கொண்டுள்ளது. சண்டைக்கான சுபமுகூர்த்தம் கணித்த படைத் தலைமை காற்று யார் பக்கமிருந்து வீசுகிறதென்பதை கணிப்பிடத் தவறியதே இம்மாபெரும் அழிவுக்கு காரணம். அதுவே மீண்டுமோர் யுத்தநிறுத்தம் பற்றி அரசைச் சிந்திக்கவும் வைத்துள்ளது எனலாம். ●



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

ஆனையிறவுப் பெருந்தளம் புலிகளிடம் வீழ்ந்து ஓராண்டு



ஆனையிறவு
தமிழர் கையில் 240 ஆண்டுகளுக்கு பிறகு
22.04.2000 இல் வந்தது.

# இராணுவ வரலாற்றை மாற்றி எழுதவைத்த ஆனையிறவிற்கான பெரும்சமர்

-ஜெயராஜ்

சிறீலங்கா இராணுவத்தின் ஆனையிறவுப் பெரும்படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டதென்பது ஒரு கனவு போன்றே இருந்தது. ஏனெனில் அப்படைத்தளத்தை வெற்றிகாண்பது ஒரு கனவிற்கு ஒப்பான செயலாகவே பலராலும் பார்க்கப்பட்டது. சிறீலங்கா இராணுவமும்சரி அதன் வெளிநாட்டு ஆலோசகர்களும்சரி, பயிற்சியாளர்களும்சரி அதனை ஒரு வெற்றிகொள்ளமுடியாத கோட்டையாகவே கருதியிருந்தனர், கூறியும் வந்தனர்.

சிறீலங்காவின் தற்போதைய பிரதிச் சபாநாயகரும், முன்னாள் இராணுவப் பேச்சாளரும் 1999ம் ஆண்டின் முற்பகுதியில் ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தின் தளபதியுமாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் முனசிங்கா அவ்வாண்டின் நடுப்பகுதியில் கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில், 'விடுதலைப் புலிகள் ஆனையிறவைத் தாக்குவார்கள் என்பது எமக்குத் தெரியும். அதற்கு நாமும் தயாராக உள்ளோம்' எனத் தெரிவித்தார்.

அதாவது ஓயாத அலைகள்-3 நடவடிக்கை வன்னிப்பெருநிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட முன்பே ஆனையிறவுப்படைத்தளம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்டே இருந்தது. அதிலும், வன்னிப்பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்ட பின்னர், ஆனையிறவே அடுத்த இலக்கு என்பது உறுதியாக நம்பப்பட்டது.

இந்நிலையில், ஆனையிறவுப் படைத்தளமானது, முற்றுமுழுதாக விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளத் தயாராகவே இருந்தது. ஆரம்பத்தில் முழு அளவிலான ஒரு டிவிசன் துருப்புக்கள் (54வது டிவிசன்) நிலைநிறுத்தி வைக்கப்பட்டதோடு, அவற்றிற்கு இணையாக ஆட்லறி பீரங்கிப்பிரிவும், கவசப்படைப்பிரிவும் சேர்க்கப்பட்டிருந்தன.

இதற்கும் அப்பால், சிறீலங்கா விமானப்படையும், கடற்படையும் ஆனையிறவில் நிலைகொண்டுள்ள இராணுவத்திற்கு உதவுவதற்குத் தயார்நிலையில் இருந்தன. இதனைத்தவிர, தென்மராட்சியில் நிலைகொண்டிருந்த, 52வது டிவிசன் துருப்புக்களும், அதற்கு அப்பால் யாழ். குடாநாடு முழுவதும் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரும், அதாவது ஆனையிறவிற்கு வெளியில் நிலைகொண்டிருந்த மேலும் இரண்டு டிவிசன் துருப்புக்களும், ஆனையிறவுத் தளத்திற்கு பின்புலமாக இருந்தன.

இதற்கும் அப்பால் சிறீலங்கா இராணுவத்தின் சிறப்புப்படையணியான 53வது டிவிசன் துருப்புக்கள் வழமையாகவே பெரும்மோதல் ஏற்படும் இடங்களுக்கு நகர்த்தப்படுவது போன்று இங்கும் சமர் தொடங்கியதும் ஆனையிறவின் வடக்கு மற்றும் வடமேற்குப்பகுதிகளில் நிலைநிறுத்தப்பட்டன.

இவையாவற்றிற்கும் மேலாக, ஆனையிறவுப் படைத்தளத்தின் கேந்திர முக்கியத்துவம் கருதி, அது பாதுகாக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றும் சிறீலங்கா இராணுவத்திற்கு இருந்தது. அதாவது, ஆனையிறவுத்தளம் ஒருபுறம் யாழ். குடாநாட்டிற்கான பிரதான நுழைவாயில் என்றரீதியில் அதன் வீழ்ச்சி யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவதற்கான அன்றி அங்கு தாக்குதல்களைத் தொடுப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரிப்பவையாக இருக்கும்.

அடுத்ததாக, யாழ். குடாநாட்டில் நிலைகொண்டிருந்த 30,000 வரையிலான சிறீலங்கா இராணுவத்தினரின் இருப்பும், எதிர்காலமும் குறித்த விடயமாகும். இந்நிலையில் ஆனையிறவைத் தக்கவைத்தல் என்பது யாழ். குடாநாட்டை தக்கவைப்பதற்கு ஒப்பானது என்றே இராணுவ வட்டாரங்களில் மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஆனையிறவுச் சமரானது கௌரவத்திற்கான போராகவும் பார்க்கப்பட்டது.

இந்நிலையில் ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ச்சிகாணும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஆனால், அது கனவல்ல. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி ஆனையிறவுப் பெருந்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சிகண்டது. சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது, இறந்தவர்கள் போக ஏனையவர்கள் அப்பெருந்தளத்தைவிட்டுத் தப்பிஓடினர். இதன் காரணமாகச் சிறீலங்காவின் இராணுவ வரலாறு மீண்டும் ஒருதடவை மாற்றி எழுதப்பட்டது.

ஆனையிறவுப் பெருந்தளத்திற்கான சமர் 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி அதிகாலையில், அதாவது கட்டைக்காடு வெற்றிலைக்கேணியில் ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள்-3 இன் மூன்றாம் கட்டத்தில் தொடங்கி, 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வரையில் இடம்பெற்றது. இரண்டு கட்டங்களில் மூன்று பெரும்நகர்வு முயற்சிகள் மூலம் இப்பெரும்படைத்தளம் விடுதலைப் புலிகளினால் வெற்றிகொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இப்படைத்தளத்தின் மீதான தாக்குதல்களில் பல்வேறு அதிர்ச்சியூட்டும் நகர்வுகள், தாக்குதல்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

சம்பவங்கள் என்பனவற்றுடன் பல மயிர்க்கூச்செறியும் சம்பவங்களும் வீரம்செறிந்த நிகழ்வுகளும் களத்தில் இடம்பெற்றன.

இச்சமரில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி மீதான தாக்குதல் பரந்தன் பிரதேசத்திற்கென பகல்வேளையில் நடந்த உக்கிரமான சண்டை, குடாரப்பில் இடம்பெற்ற தரையிறக்கம், அவ்வேளையில் நடந்த பெரும் கடற்சமர், கரும்புலிகளின் தாக்குதல்களால் இரு தளங்களில் இருந்த 15 ஆட்லறிகள் அழிக்கப்பட்டமை, தாளையடிக் காக நடந்த கடும் சண்டை, தாக்குதல் ஒன்றில் டோறாக்கள் இரண்டு அழிக்கப்பட்டமை, கடல் நீரேரி ஊடாக கடற்புலிகள் நடத்திய தாக்குதல் கள், எம்.ஐ. 1-24 உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டமை, அதன் பின்னர் இத்தாவில் பகுதியில் நடந்த மிகக் கடுமையான நேரடிச் சமர் எனப் பல வடிவங்களிலும், பரிமாணங்களிலும் ஆனையிறவுச்சமர் இடம்பெற்றது.

ஆனையிறவிற்கான இச்சமரில், இத்தாவிலுக்கும் முகமாலைக்கும் இடையில் இடம்பெற்ற மோதலானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே மிகக் கடுமையான மோதலாக இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவ்வாறானதொரு மோதல் இடம் பெறவில்லை என்றே கூறப்படுகிறது. அங்கு இரத்தம் சிந்தப்பட்டது எனக் கூறுவதைவிட இரத்தத்தில் ஊறி அப்பூமி சிவந்தது என்று கூறுதலே பொருத்தப்பாடானதாகும்.

இத்தளத்தின் வீழ்ச்சியை இராணுவ ஆய்வாளர்கள், விற்பன்னர் கள் 1954ஆம் ஆண்டு பிரெஞ்சுப்படைகள் வியட்நாமில் தியன்-பியன்-பூவில் சந்தித்த பெரும் தோல்வியுடன் ஒப்பிடுகின்றனர். தியன்-பியன்-பூவின் வீழ்ச்சியே வியட்நாமில் இருந்து பிரெஞ்சுப் படைகளை வெளியேற்றுவதற்கும், வியட்நாமின் வடபகுதியில் கம்யூனிசம் சார்ந்த விடுதலைப் போராளிகளின் அரசு ஒன்று அமைவதற்கும் காரணமாகியது.




ஆனையிறவில் புலிகள் பெற்ற வெற்றியானது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனது இராணுவ மதிநுட்பத்தையும், ஆற்றலையும் உலகநாடுகள் புரிந்துகொள்ளவும், இலங்கை இனப்பிரச்சினை விவ காரத்தில் தமது நிலைப்பாட்டைத் தீர்மானிக்க வேண்டியவையாகவும் இருந்தன.

ஆனால், சிறீலங்கா இராணுவமும், அரசாங்கமும் இப்பெரும் தோல்வியை மூடிமறைத்துவிட முனைந்தது. இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியா தந்திரோபாயரீதியிலான பின் வாங்கல் எனத் தெரிவித்தார். ஆனால், இது எவராலுமே ஒப்புக்கொள்ளப் பட்டதாக இருக்கவில்லை. இராணுவத் தளபதியின் இக் கூற்றுக்களை கேலிசெய்த முன்னாள் இராணுவத் தளபதியும், கூட்டுப்படை நடவடிக் கைத் தளபதியுமான ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா, இதனை 'கேற் றைத் திறந்துவிட்டு விட்டு, வீட்டைப் பாதுகாப்பதற்கென வீட்டுப் படிக்கட்டில் நிற்பது போன்றதாகும்' எனச்சாடினார்.

சிறீலங்கா இராணுவத் தளபதியை இத்தோல்விக்குப் பொறுப் பேற்று நீங்கள் ஏன் பதவி விலகவில்லையென ஒரு பத்திரிகையாளர் கேட்டதற்கு, நான் பதவி விலகுவதால் பிரச்சினை தீர்ந்துவிடப்போவ தில்லை என்று கூறினார். அவரின் கூற்றும் ஒரு வகையில் ஏற்புடையது தான். ஏனெனில், அவர் பதவிவிலகினால் மட்டும் என்ன ஆனையிறவு மீளப்பெறப்பட்டு விடப்போகின்றதா?

ஆனால், இராணுவத் தளபதி பதவி விலகினாரோ இல்லையோ, ஆனையிறவுத் தோல்வியானது பல இராணுவ அரசியல் மாற்றங் களுக்கு வித்திட்டது. இதில் முக்கியமாக சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடனான சமநிலையை இழந்தது. இதனைத் தொடர்ந்து சிறீலங்கா அரசு நட்பு நாடுகளிடம் இருந்து பகிரங்கமாக இராணுவ உதவிகோரியது. இதனைத் தொடர்ந்து சிறீலங்காவின் நெருங்கிய நட்பு நாடுகள் சிலவும், ஆயுத விற்பனையை நோக்க மாகக் கொண்ட நாடுகள் சிலவும் உதவி, அன்பளிப்பு என்ற ரீதியில் சிறீலங்காவிற்கு ஆயுத விநியோகங்களைச் செய்ய முன்வந்தன.

இந்தவகையில் பாகிஸ்தான், இஸ்ரேல், செக்குடியரசு, ரஷ்யா என்பன பிரதான ஆயுத விநியோகஸ்தர்கள் ஆயின. இதில் நவீன குண்டுவீச்சு விமானங்கள், டாங்கிகள், கவசவாகனங்கள், பல்குழல் எறிகணை செலுத்திகள் எனப்பல நவீன ஆயுதங்கள் உள்ளடங்கி யிருந்தன.

இதேவேளை, சிறீலங்கா அரசாங்கமோ சுமார் 3000 கோடி ரூபாக் களை இராணுவச் செலவீட்டிற்கென மேலதிகமாக ஒதுக்கீடு செய்தது. இவ்வாறு பெரும் எடுப்பில் இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்கீடு செய்யமுன்வந்தது. ஏனெனில், ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சி யைத் தொடர்ந்து யாழ். குடாநாடும் முழுமையாக விடுதலைப் புலி களிடம் வீழ்ந்துவிடுமோ என்ற அச்சத்தை ஆனையிறவின் வீழ்ச்சி ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை, இவ் அச்சமானது சிறீலங்கா ஆட்சியாளருக்கு மட்டுமல்ல, உலகை இன்று தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவிழையும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத் தவருக்கும், இப்பிராந்தியத்தின் எஜமானாகத் தன்னை ஆக்கிக் கொள்ள விரும்பும் இந்தியாவிற்கும் ஏற்பட்டது.

இந்நிலையில், சிறீலங்கா அரசிற்கு பல்வேறு உதவிகளை வழங்கியதன் மூலம் யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் கை களில் விழவிடாது தடுத்து நிறுத்துவதில் பலநாடுகள் அக்கறை காட்டின. அத்தோடு இந்திய அரசும் சிறீலங்கா அரசிற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் அக்கறை கொண்டிருந்தது. இதனால், பிரெஞ்சுப் படைகளுக்கோ அன்றி அமெரிக்கப்படைகளுக்கோ வியட்நாமில் ஏற்பட்டது போன்றதொரு பெரும் அவலம் இதுவரையில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்படாது தடுக்கப்பட்டதெனலாம்.

ஆயினும் இராணுவரீதியில் சிறீலங்காவிற்கு முண்டுகொடுக்க முனைந்தது போன்று அரசியல்ரீதியில் ஆட்சியாளர்களுக்கு இவர் களால் முண்டுகொடுக்க முடியாதுபோனது என்றே கூறுதல் வேண்டும். ஆனையிறவின் வீழ்ச்சியானது, விடுதலைப் புலிகளை இல்லாது ஒழிக்கவோ அன்றி ஒரு பலவீனமான சக்தி ஆக்கிவிடு வதோ சாத்தியமாகப் போவதில்லை என்பதை நிரூபணம் செய்வ தாக இருந்தது. இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை மூலமே சாத்தியமாகும் என்பதை உலகம் புரிந்துகொண்டது.

இதேவேளை, ஆனையிறவுத் தோல்வியை அடுத்து சிறீலங்கா அரசு அதிகரிப்புச் செய்த யுத்தச்செலவீட்டின் காரணமாக சிறீலங் காவின் பொருளாதாரம் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியது. இதனால் கடந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்க வேண்டிய வரவு-செலவுத்திட்டத்தை இவ்வாண்டு மார்ச் மாதம் வரையில் இழுத் தடிக்க வேண்டிய நிலையை சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஏற்படுத் தியது. சிறீலங்கா அரசு யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்துகொண்ட உலக நாடுகள், பொருளாதார உதவிகளுக்கு நிபந்தனை போடவிளைந்தன.

இந்தவகையில், ஆனையிறவுத் தோல்வியானது சிறீலங்கா அரசிற்கு ஒரு பெரும் இராணுவத் தோல்வியாக மட்டுமல்ல, பெரும் அரசியல் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே இன்று உருவெடுத்துள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# தமிழ்ப்பெண்
# கை வைத்த
# ஓராயிரம் கு
# கரங்களும் இ



கடந்த மூன்று வாரங்களாக தமிழீழ மண்ணை மட்டுமன்றி சர்வதேசச் செய்தி ஊடகங்களின் முழுக் கவனத்தையுமே தனதாக்கிக் கொண்டிருக்கும் விடயமாக மாறியிருக்கின்றது மன்னார் கடற்படை மற்றும் நாசகார தடுப்புப் பிரிவினரின் நாசகாரத்தனங்கள், இவர்களின் காமவெறிக்கு தம்மைப் பலிகொடுத்தது மட்டுமல்லாமல் அவர்கள் வெளிக்காட்டிய மனித வக்கிரங்களின் உச்சக்கட்டக் கொடுமைகளையும் அனுபவித்த இரு இளம் தமிழ்த் தாய்மார்களின், நெஞ்சை உறையவைக்கும் வாக்குமூலம் உலகை ஓர் உலுப்பு உலுப்பியிருக்கின்றது.

பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குள் அதிகூடிய உடல் உளத்தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வன்முறை வடிவம் பாலியல் வல்லுறவுதான். வெறும் உடற்பசிக்கு பெண்ணை இரையாக்குவது ஒருவகை, உடற்பசியுடன் மனித வக்கிர உணர்வும் இணைந்துவிட்டால் கொடுமைத்தனமே கோரத்தாண்டவமாடும் என்பதற்கு அண்மைக்காலங்களில் இராணுவத்தால் தமிழ்ப் பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் மிருகத்தனமான செயற்பாடுகள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக மாறியிருக்கின்றன.

சுதந்திரம் வேண்டிப் போராடும் தமிழ் இனத்தின் மீது மிலேச்சத்தனமானமுறையில் சிங்கள அரசால் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோதெல்லாம் சிங்களக் காடையர்களதும், அரச படைகளதும் காமவெறிக்குப் பலியாகி இறந்த தமிழ்ப்பெண்கள் அநேகம்பேர் குற்றுயிரும் குலையுயிருமாய் தப்பியபோதும் தமக்கு நடந்ததை வெளியே சொல்லும் வலுவின்றி, வாய் மூடி மௌனம் காத்தவர்களும் ஏராளம். சமாதானம் பேணவென்று வந்து குதித்த அந்நிய நாட்டு இராணுவம்கூட அப்பாவித் தமிழ்ப்பெண்ணைக் குறிபார்க்கத் தவறவில்லை. தமக்கு நடந்ததை வெளியே சொன்னால் குடும்பத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் புறக்கணிக்கப்பட்டு விடுவோமென்ற நிதர்சனமான உண்மைக்குப் பயந்து பெண்கள் வாய்மூடி மௌனம் காக்கும் வசதியொன்றையே தமக்குரிய வாய்ப்பாகக் கருதிய ஆணாதிக்கத்தின் காமவெறிக்குப் பெண்கள் பலியாகிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் உலகம் முழுவதும் தொடர்கதையாக இருப்பது ஒருபுறம் இருக்க, காமவெறியைத் தீர்ப்பதற்கும் தமிழர் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குமுரிய ஆயுதமாக இந்த வாய்ப்பை சிங்கள அரசும், அதன் படைகளும் பின் பற்றுவது அண்மைக்காலங்களில் மிகவும் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. தங்கி வாழ்ப வளாக பெண் இருக்கும் சமூகத்தில், பெண்ணை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்துவதன் மூலம் அவளை குடும்ப அமைப்பில் இருந்து ஓரம்கட்டுவதும், ஆண்களை கைதுசெய்து கொலைசெய்வதன் மூலம் குடும்பக் கட்டமைப்பை சீர்குலைத்து போராடும் வல்லமையைக் குறைப்பதும் அரசின் திட்டமிட்ட சதிகளாகும்.

மூன்றாம்கட்ட ஈழப்போர்க் காலத்தில் கிருசாந்தி என்ற பள்ளி மாணவியுடன் தொடங்கி கோணேஸ்வரி, ரஜனி, சாரதாம்பாள், விஜிதா என்று நீண்டு இன்று இந்த இரு குடும்பப் பெண்களில் வந்து நிற்கின்ற இராணுவத்தின் மிருகவதைகள் சந்திக்கு வந்த சங்கதிகள் என்றால் வராதவர்களின் பட்டியலோ நீண்டுகொண்டே செல்கின்றது. பாலியல் வல்லுறவு என்ற கொடுமைக்கும் அப்பால் போய் மனித வக்கிரங்களின் உச்சக்கட்ட வெளிப்பாடுகளை இந்தப் பெண்கள் அனுபவித்தமையே இங்கு கூடுதலாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். உடல் இச்சை தீர்ந்ததும் அதை வெளித்தெரியாத வண்ணம், அவர்களை கொலை செய்த ஒருகாலத்தில் இருந்து இன்று வெளிப்படையான தடயங்களை எவ்வித அச்சமுமின்றி விட்டுச் செல்லும் நிலைக்கு இராணுவம் வளர்ந்திருக்கின்றது என்றால் அதற்கு அரசின் ஒத்துழைப்பு எந்தளவு தூரம் இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதிலும் கடந்த ஆண்டு யூன்மாதம் நீர்கொழும்பு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நிர்வாணமாக்கி, அந்தப் பெண்ணின் பெண் உறுப்பில் மிளகாய்த்தூள் பூசி வாழைப்பூவை செருகி சித்திரவதை செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகேந்திரன் விஜித்தா இராணுவத்தின் மிருக வதையை அம்பலப்படுத்திய உயிருள்ள ஒரு சாட்சியென்றால், இன்று பெற்ற பிள்ளைக்கு முன்னாலேயே ஆடை களைந்து, கர்ப்பிணி என்றும் பாராமல் பாலியல் வல்லுறவிற்கு உட்பட்ட சிவமதி அருச்சுனன், விஜிகலா நற்குணம் இருவரும் வாய்திறந்து தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கேட்கும் இன்னொரு எடுத்துக்காட்டு.

19-03-2001 மன்னார் உப்புக்குளத்தில் தங்கியிருந்த இரு குடும்பப் பெண்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காமஇச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

1. திருமதி. சிவமதி அர்ச்சுனன்
2. திருமதி. விஜிகலா நற்குணம்

விஜிகலாவை ஆடைகளைக் களையுமாறு வற்புறுத்தினர். அப்பெண் மறுக்கவே 5பேர் பலவந்தமாக ஆடைகளைக் களைந்தனர். கறுப்புநிற சொக்ஸ் ஒன்றினால் கண்களைக் கட்டிவிட்டு பலர் இப்பெண்மீது பாலியல் வல்லுறவு கொண்டனர். அதன்பின்னர் கட்டித் தூக்கி தொங்கவிட்டனர். புலி என்று ஒத்துக்கொண்டு கையொப்பம் இட்டாலே விடுவோம் எனக்கூறினர். வானில் இருந்த சிவமதியையும் கடற்படையினர் நீ புலிதானே எனக்கூறி பாலியல் வல்லுறவில் ஈடுபட்டனர். பின்னர் 20ஆம் திகதி அதிகாலை 5 மணியளவில் வானில் இருந்து இறங்கிக்கொண்டு சென்ற சிவமதியை தனி அறைக்குள் கூட்டிச்சென்று ஆடைகளைக் களையுமாறு வற்புறுத்தியுள்ளனர். நிர்வாணமாக நின்ற விஜியகலாவினால் இராணுவத்தின் வற்புறுத்தலின் பேரில் சிவமதியும் நிர்வாணமாக்கப்பட்டுள்ளார். இவ்வாறு நடைபெற்ற சித்திரவதையினால் இருவரும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தாங்கள் என ஒத்துக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

கொண்டு கையொப்பம் இட்டுள்ளதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பிடமும், செல்வம் அடைக்கலநாதன், எஸ். ரவீந்திரன் ஆகியோரிடமும் இருபெண்களும் வாக்குமூலம் அளித்தனர்.

இந்தத் தமிழ்த்தாய்மார்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக சர்வதேசச் செய்தி ஊடகங்கள் மூச்சுவிடாமல் குரல் கொடுத்துக் கொண்டிருக்க சிங்கள தேசமோ எதுவும் நடவாததுபோல் அசட்டையாக இருக்கின்றது. இதற்கு முன்பு நடந்த எத்தனையோ படையினரின் பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவோம் என்று உலகை ஏமாற்றிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி இப்போதும்கூட அரிச்சந்திரன் பாணியில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என வசனம் பேசிக் கொண்டிருக்க வாக்குமூலங்கள், மருத்துவ அறிக்கைகள் என்பன வலுவுள்ளவையாக இருந்தபோதும்கூட அப்படி எதுவுமே நடக்கவில்லை என மறுப்புத் தெரிவிக்கின்றது பாதுகாப்பு அமைச்சு.

பெண்கள் அதிலும் எதிரியினத்துப் பெண்கள்

# கள்மீது
# ல்....
# ல்களும்,
# ங்கு எழும்

மீது கட்டவிழ்த்துவிடும் கொடுமைகளை தட்டிக் கேட்கும் உணர்வு அரச செய்தி ஊடகங்களுக்கு இல்லாமலிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அதுபோல் இன, மத, சாதி வேறுபாடுகளுக்கும் அப்பால் போய் பெண் என்ற ஒரு அடையாளத்தினடிப்படையில் ஒட்டுமொத்தப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக ஒன்றுதிரண்டு போராடுவோம் என்று கதை அளக்கும் கொழும்பு வாழ் பெண்கள் அமைப்புகளும் மௌனம் சாதிப்பதற்கு இனமுரண்பாடு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனாலும், முற்போக்கு பெண்ணியவாதிகள் என தமக்குத் தாமே மகுடம் சூடிக்கொண்டு அதிகார வர்க்கங்களுக்கு குடைபிடிக்கும் எங்கள் தமிழ்ப் பெண்ணியவாதிகளும் அங்கு பேசாமடந்தையாக இருப்பது தமிழினமே வெட்கப்பட வேண்டியதொன்று. மனித உரிமை விழுமியங்கள் பாதுகாக்கப்படவேண்டும், பிணக்குகள் யாவும் வன்முறையின்றி தீர்க்கப்பட வேண்டும், சகிப்புத்தன்மை, மனிதாபிமானம் போன்ற மானிடப் பெறுமானங்கள் அழிக்கப்படக் கூடாதென்று ஐ.நா. வரை சென்று பெண்களின் வன்முறைக்கு எதிராக குரல்கொடுக்கும் அளவிற்கு வாய்ப்புப் பெற்ற தமிழ்ப் பெண்ணியவாதிகளும்கூட அதிகார வர்க்கத்தின் அற்ப சொற்ப சலுகைக்காக பேரினவாதத்திற்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமே எமது உதடுகள் அசையும் என்று இருக்கின்றார்களோ என்றும் எண்ணுமளவிற்குத்தான் அவர்களின் செயற்பாடுகள் அமைகின்றன.

அதிலும் உச்சக்கட்டமாக தமிழ்ப் பிரதேசம் முழுவதுமே இந்தச் சம்பவம் தொடர்பாக ஆர்ப்பாட்ட ஊர்வலம், கண்டனப்பேரணி, கறுப்புப்பட்டிப் போராட்டம் என்று கொந்தளித்துக்கொண்டிருக்க, மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த நேரம், அங்கிருந்த தமிழ்ப் பெண்ணியவாதிகள் நாடகவிழா பார்த்துக் கொண்டிருந்த வெட்கக்கேட்டை உலகிற்கு அம்பலப்படுத்தியிருக்கின்றன சர்வதேச செய்தி ஊடகங்கள்.

சிங்கள தேசமே! ஒன்றை விளங்கிக்கொள். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் மேலோங்கி பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று மனிதநேயம், மனித உரிமை விழுமியங்களை தமது நாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பாதுகாக்கவென சட்டங்களும், அமைப்புகளும் போட்டும்கூட பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் முதன்மைப் பதிவுகளை தமதாக்கிக்கொண்டிருக்கின்ற சில தேசங்களைப் போன்றதல்ல இந்தமண். அதுபோல் களவு, கொலை, கலவரம் போன்று பாலியல் வல்லுறவையும் ஒரு குற்றமாகக் கருதமுடியாது எனக் கூறுகின்ற காவல்துறையினரும் எம்மிடமில்லை. ஆண்களால் உடைக்கப்பட்ட பெண்களின் எலும்புகளைப் பொருத்துவதையும், காயங்களைத் தைப்பதையும் தவிர எமக்கேன் வீண்சோலி என்று வாய்திறக்க விரும்பாத மருத்துவர்களையும் இந்தமண் கொண்டிருக்கவில்லை. அனைத்திற்கும்மேலாக பத்துவயது நிரம்பாத பச்சைப் பாலகரை பயிற்சி வகுப்புகள் மூலம் பாலியல் பண்டமாக்கி உல்லாசிகளின் பணத்திற்கு பரிசளிக்கும் சீர்கேட்டில் உலகப் புகழ்பெற்ற சிங்கள தேசத்திற்கு பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால், பாலியல் வல்லுறவை பயங்கரக்குற்றமாகக் கருதி அதற்கு உச்ச தண்டனை வழங்கும் மாண்புமிகு மண் இது.

யுத்தத்தின் பாதிப்புக்கள் இன்றி மக்கள் அமைதியாக வாழ்ந்த காலத்திலும்சரி யுத்தத்தின் கொடுமைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் அனுபவித்து இடப்பெயர்வு, பொருளாதாரத்தடை போன்றவற்றால் நலிந்து போய் இருக்கும் இன்றைய காலங்களிலும்சரி இந்த மண்ணில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை விரல்விட்டு எண்ணி விடலாம் என்பது எல்லோருக்குமே தெரிந்ததொன்று. ஏனைய சமூகங்களிலிருந்து வேறுபட்டு மனைவி, பிள்ளை, தாய், சகோதரி என்ற வேறுபட்ட நிலைகளில் வீடு, குடும்பம் என்ற வட்டத்துள் தமது வாழ்வின் கணிசமான பகுதியைக் கழிக்கும் தமிழ்ப்பெண்ணுக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகள் பாரதூரமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும் என்பதை உலகம் இன்று நிதர்சனமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அதன் வெளிப்பாடுகளில் முதலாவது, செத்தை மறைவிற்குள் நின்று தெருவெளிச் செய்தி கேட்டவர்கள் இன்று துணிவும், வீரமும், கட்டுக்கோப்பும் மிக்க மகளிர் அமைப்பாக மாறி தாயக மண்மீட்கும்பொருட்டு, உலகம் வியக்கும் அளவிற்கு ஏற்படுத்தும் சாதனைகள். இன்னொரு வெளிப்பாடு, மானம் போய் விடும் என்று வாய்மூடி மௌனம்காத்த பெண்கள் இன்று வாய்திறந்து கொடுமை செய்தவனைத் தட்டிக்கேட்கும் அளவிற்கு பரவியிருக்கின்ற விழிப்புணர்வு, சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்ளும் வலுவைப் பெற்று, தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக எழும் தமிழ்ப்பெண்களின் குரல்கள் அதிகரித்துக்கொண்டு செல்வதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாக மாறியிருக்கின்றன. விஜித்தாவின் மனித உரிமை மீறலுக்கான மனுத்தாக்கலும் மன்னாரில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட இரு குடும்பப் பெண்களின் வாக்குமூலமும்;

சிங்கள தேசமே!

வெட்கக்கேட்டை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்ற மெத்தனத்தில் இனியும் தமிழ்ப் பெண்களின் மீது உனது வக்கிரங்களைக் காட்டலாம் என்று எண்ணாதே. 'ஒரு பெண்ணில் கைவைத்தால் ஓராயிரம் குரல்களும், கரங்களும் இங்கு எழும்' அநீதிகளைத் தட்டிக்கேட்கும். மனித உரிமை விழுமியங்களைப் பேணுபவர்களுக்கு சரியான தரவுகளை தந்துநிற்கும் தன்னினத்தைப் பாதுகாக்கும் மன உணர்வையும் மனோதிடத்தையும் தமிழ்ப்பெண்ணிடம் மட்டுமின்றி இந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு சமூகப் பிரஜையிடமும் கட்டியெழுப்பும் அடக்குமுறைகளும் அராஜகங்களும் அதிக காலம் அரசாட்சி செய்ததாக எந்த ஒரு வரலாறும் இல்லை.

இதுவரை காலமும் சிங்களப் பேரினவாதம் தமிழ்ப்பெண்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட பாலியல் வன்முறைகளைக் கண்டித்து வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் கண்டனக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. இதில் இங்குள்ள அனைத்து வெகுஜன அமைப்புகளும் பங்கெடுத்து எங்களின் ஒருமித்த எதிர்ப்பையும் எழுச்சியையும் வெளிக்காட்டுவோம்.

சிறீலங்கா ஆயுதப்படைகள் தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொண்டுவரும் பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள் குறித்து வன்னிப் பெருநிலப்பரப்புப் பெண்கள் மேம்பாட்டுப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# பிரித்தானியாவின் தடையும் பேரினவாதத்தின் சதியும்

www.tamilarangam.net

பிரித்தானிய அரசு வெளியிட இருந்த பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தை உள்ளடக்கக்கூடாதென ஈழத் தமிழர்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு, ஒரே குரலில் உரத்துக் கூறியிருந்தும் பிரித்தானிய அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை.

நீதியானதும், வீரம் செறிந்ததுமான ஒரு விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடாத்திவரும் புலிகள் இயக்கத்தை, ஒரு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தியதன் மூலம், பிரித்தானிய அரசு ஈழத்தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியுள்ளது.

சிங்கள அரசின் அடக்குமுறைக்கு எதிராக அர்ப்பண உணர்வுடன் போராடியபடி, கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழீழ மக்களின் பாதுகாப்புக் கவசமாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்துவரும் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாதக் குழுவாக பிரிட்டன் சித்தரித்திருப்பது தமிழீழமக்களை கடுமையாக வேதனைப்படுத்தியுள்ளது.

அரச அடக்குமுறைக்கெதிராகப் போராடும் புலிகளை பயங்கரவாதிகள் எனக்குற்றம் சாட்டியதன் மூலம் ஒடுக்குமுறையாளர்களான சிங்கள அரசு உலகளாவியரீதியில் நியாயப் படுத்தப்பட்ட சிறுமைகண்டு, உலகத்தமிழர்கள் பிரித்தானிய அரசு மீது விசனம் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் போராட்டங்களையும், மக்கள் புரட்சிகளையும் மனுக்குலத்தின் உன்னதமான அரசியல் நிகழ்ச்சிகளாகவே வரலாறு பதிந்துவைத்திருக்கின்றது. இத்தகைய போராட்டங்களை நசுக்க முயன்றோரை சர்வாதிகாரிகளாகவும், இரத்தவெறிபிடித்த ஆட்சியாளர்களாகவும் வரலாறு இனங்காட்டியுள்ளது.

ஆனால், புனிதமான இந்த வரலாற்றுப் போக்கை தலைகீழாக மாற்றியமைக்கும் முயற்சியாகவே பிரித்தானிய அரசின் செயல் அமைந்துள்ளது.

இலங்கைத்தீவில் தமிழர்க்கெதிரான ஒடுக்குமுறை வரலாறு அரசபயங்கரவாதத்துடனேயே ஒன்றறக்கலந்துள்ளது.

தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போர் என்ற பரிணாமத்தைப் பெற முன்னரே நிராயுதபாணிகளாக நின்ற தமிழினம் மீது அரச பயங்கரவாதம் ஏவி விடப்பட்டது.

தமிழீழத் தேசியத்தைக் கருவிலேயே அழிக்கும் நீண்டகாலத்திட்டத்துடன் தேசிய இனக்கட்டுமானத்தின் அடிப்படைகள் அனைத்தின்மீதும் அரச பயங்கரவாதம் பாய்ந்தது.

தமிழரின் மொழி, நிலம், பண்பாடு, பொருளாதாரம் தாக்குதலுக்குள்ளானது. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அரச ஒடுக்குமுறைக்கெதிராக அமைதிவழிகளில் தொடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் இராணுவப் பலம்கொண்டு நசுக்கப்பட்டபோது வேறுவழிகளின்றி ஆயுதப்போராட்டம் பிறப்பெடுத்திருந்தது.

இந்த ஆயுதப்போராட்டத்திற்குத் தலைமை

## புலிகளின் குரல்

கொடுத்த புலிகள் இயக்கம் விடுதலைப் போரை வீறுடன் நடாத்தியது.

தமிழரின் இராணுவமாக, தமிழினத்தின் பாதுகாப்பு அரணாக புலிகள் இயக்கம் வளர்ச்சி பெற்ற பின்னரே அரச பயங்கரவாதத்துடன் போர்புரிந்தபடி தமிழினம் வாழும் யதார்த்தத்தை உருவாக்கியது.

இலங்கைத்தீவின் வரலாற்றுடன் நன்கு பரிட்சயமான பிரிட்டன் இந்த அரச பயங்கர வாதத்தின் வரலாற்றைப் புறந்தள்ளிவிட்டு அதற்குப் பதிலாக இனப்படுகொலைக்கெதிரான சில பதிலடி நடவடிக்கைகளை ‘பயங்கரவாதம்’ என வரையறுத்து, எமது விடுதலை இயக்கத்திற்குச் சேறு பூசி ஒரு வரலாற்றுத்தவறிழைத்துள்ளது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தமிழரின் அரசியல் விடுதலைக்காகப் போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கமாகிய எமது விடுதலை அமைப்பிற்கு பிரித்தானிய அரசு பயங்கரவாதப்பட்டம் சூட்டியிருப்பது வேதனை தரும் விடயமாகவுள்ளது.

இந்த முத்திரை குத்தலால் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பிரித்தானிய அரசு கொச்சைப்படுத்தியுள்ளது.

இந்தத் தடை நடவடிக்கைமூலம் பிரித்தானிய அரசு சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கே துணைபுரிந்துள்ளது. சிங்களத்தின் போர் வெறிக் கொள்கைக்கு, இராணுவ மமதைக்கு இத்தடை அறிவிப்பு உரமூட்டி உற்சாகப்படுத்தியுள்ளது.

அத்துடன், ‘இனப்பிரச்சினை இங்கில்லை, இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான்’ என்ற பேரினவாதிகளின் நீண்டகால நிலைப்பாட்டை பிரித்தானிய அரசும் ஆமோதித்ததாக அமைந்து விட்டது. இவை காரணமாக எமது மக்களது விடுதலைப் போராட்டத்தின் அரசியல் நியாயப்பாடு, உலக அரங்கில் பலவீனப்படுத்தப்படும் ஏதுநிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை அபாயத்தை எதிர்கொண்டபடியுள்ள எமது மக்களை இதுமேலும் சிக்கலானதொரு நிலைமைக்கே தள்ளியுள்ளது.

உலக அரங்கில் புலிகள் இயக்கத்திற்கு அவப்பெயரை உண்டுபண்ணவேண்டும் என்பது பேரினவாதத்தின் சதித்திட்டம். அதன் மூலம் புலிகளின் அதாவது ஈழத்தமிழர்களின் அரசியல் இலட்சியத்தை நியாயமற்றதொன்றாகத் திரித்துக்காட்டி, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு தீவிரமாகச் செயற்படுகின்றது.

தமிழரான அமைச்சர் கதிர்காமரை இந்தப் பணிக்கு நியமித்த பேரினவாதத்தின் சாணக்கியம் பிரிட்டனிடம் வெற்றிகண்டுள்ளது.

நோர்வே அரசு முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தை முயற்சியில் சிங்கள அரசு காட்டும் அக்கறையைவிட பல்மடங்கு அக்கறையை மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் புலிகள் தடை செய்யப்படவேண்டுமென்று பரப்புரை செய்வதிலேயே காட்டுகின்றது.

பேச்சு அனுசரணையாளர் எரிக்சொல்கெயிமை சந்திக்க ஒதுக்கும் நேரத்தைவிட அதிக நேரத்தை அரசாங்கத் தலைவர்கள், ஆயுத வியாபாரிகளையும் இராணுவ ஆலோசகர்களையும் சந்திப்பதிலேயே செலவிடுகின்றனர்.

புலிகளைத் தடைசெய்வதன்மூலம் இலங்கைத்தீவில் போரைநிறுத்தலாம், இரத்தக்களறியைத் தடுக்கலாம் என்றவாறான சிங்கள அரசின் கருத்துடன் பிரிட்டனும் உடன்பட விரும்பினால் அதுவொரு கேலிக்குரிய விடயமாக இருக்கும்.

இனப்போரின் மூலகாரணி சிங்கள, பௌத்த பேரினவாதம், தமிழ் இனப்படுகொலைக்குத் தூபமிட்டு, அரசியல் தீர்வு முயற்சிகளைக் குழப்பியடித்து, இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித்தீர்வை திணித்தபடி உள்ளதும், பேரினவாத சக்திகள்தான். இந்தப் பேரினவாத சக்திகளின் அதிகாரபீடம்தான் சிங்கள அரசு.

எனவே, போரைத் தொடர்வதா, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதா, என்று தீர்மானம் எடுப்பது முற்றுமுழுதாகச் சிங்கள அரசின் கைகளிலேயே உள்ளது.

அண்மைக்காலமாக போரில் சில பின்னடைவுகளைச் சந்தித்த சிங்கள அரசுக்கு பிரித்தானிய அரசின் தடை அறிவிப்பு அதனது இராணுவத் தீர்வு முயற்சிக்கு புத்தூக்கம் அளித்திருக்கின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சியை ஏற்பது போலவும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண ஆவலாய் உள்ளது போலவும் உலக நாடுகளிடம் சிங்கள அரசு கூறிவருகின்றது.

ஆனால், மறுபுறத்தில் ஆயுதங்களை வாங்கும் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகின்றது. இராணுவ ஆலோசகர்களையும், கூலிக்கு விமானங்களையும் இறக்குமதி செய்கின்றது. பிரதமரைப் பொறுப்பாக நியமித்து படைக்கு ஆட்களையும் சேர்க்கின்றது. இவ்விதமாக தனது படைபலத்தையும் சிங்கள அரசு பலப்படுத்துகின்றது.

உண்மையில் உலகசமூகத்தை தந்திரமாக ஏமாற்றிக்கொண்டு ஒரு பெரும் போருக்காக தனது இராணுவ இயந்திரத்தை பலப்படுத்துகின்றது என்பதே உண்மையாகும்.



“விடுதலைப்புலிகள்” பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம். (மாசி, பங்குனி -2001)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# போராளிகளின் படைப்புக்கள்

## அனலின் தகிப்பு

கடுங்கோடை காலம்
உப்பு வெளிக்காற்று வந்து
மேனி உரசிச்செல்லும் நேரம்
கந்தை உடையுடன்
காவலரண் மேட்டினிலே
காலை, மாலையென கண்ணயர
நேரமின்றி - எம்
கடமைதனை உணர்ந்து நின்ற தருணத்தில்
என் பாசமிகு அம்மாவிற்கு
மடல் ஒன்று வரைகின்றேன்.

உடலில்லா பேனாவால்
உணவு வந்ததாளின்
ஒரு பகுதி வெற்றிடத்தில் - என்
உறவிற்கு எழுதும் முதற் கடிதம்
அது தான்.

'பகையுடன் விளையாடும்
உன் பிள்ளை நான் அம்மா' - என்று
பத்துவரி எழுதி முடித்திருப்பேன்.
திடுமென வேட்டொலிகள்
கேட்டதிசை பார்க்குமுன்னே
என்னோடு களமாடும்
இன்னுயிர்த்தோழன்
மடிந்து விட்டான்.
மீண்டும் காவலரண் சண்டை
தொடர்கிறது.
சற்றுச் சில நாளில் மீண்டும்
எழுதுகிறேன்!
வார்த்தைகளில் வருவது தான்
வரிவடிவமாகிறது - என்
தோழனின் நினைவும் கூட .....

-நா. கானகன்

## வசந்தம் வரும்

அந்த மரங்கள்
இன்னும் பட்டுப்போகவில்லை
இப்போதும் அதன் வேர்கள்
பச்சையாகவே உள்ளது
இப்போது அதற்கு
இலையுதிர் காலம்.
தளிர்களை இழந்து
தனிமரமாயே நிற்கிறது
ஆனாலும் அது
பட்டுப்போகவில்லை
நாளையொரு வேளை
காலம் மாறும்
இலையுதிர்ந்த மரங்களில்
துளிர் பிறக்கும்
ஆனந்தமாய்க் கூத்தாடி
காற்றில் மலர் சிந்தும்,
அந்த மரங்கள் இன்னும்
பட்டுவிடவில்லை
இப்போது அவைக்கு
இலையுதிர்காலம்

-சரத்தீ

## எழுக தமிழா எழுக!

அடிமைத் தளையினுள்
அடங்காத் தமிழனே!
சுதந்திரத்தின் சுவையை
சுகித்து இன்புற வருக!
புதியசரிதம் படைக்கும்
உன் விரக்கரங்களை
இனியும் புறக்கணிக்காதே!
கோழைச்சேற்றில் புதையுண்ட
உன் காளைக்கால்களின்
வேகத்தைக் கூட்டு

விரைவாக
மிகவிரைவாக
விடியும் திசைநோக்கி; உன்
பயணத்தைத் தொடக்கு.

நீ! கோழைக்குப் பிள்ளையல்ல
விரப்பரம்பரையின் விழுது.
வெற்றிக்கொடி பல தாங்கிய
வீரமறவர்கள் தவழ்ந்த
மண்ணில் துளிர்த்த கொழுந்து.
இனியும் தணியாது
எழுக தமிழா எழுக!
இதுதான் உன் விடிவுகாலம்.

-க. வாமக்காந்

## நல்வாழ்வு

இதுவரை காலமும்
நான் நீரேதுமற்ற
பாலைவனத்திலே உலவிவந்தேன்
கொடிய வெப்பம் என்னுடலை
வருத்தி வந்தது - அங்கு
களைப்பாற நிழலில்லை
தாகம் தீர்க்க நீரில்லை
எங்கும் பரந்த வெட்டைவெளி - அதில்
வாழ்ந்த எனக்கு
அந்த வாழ்க்கை சலிப்பூட்டியது.
அதைவிட்டு வெளிவர எண்ணி
சுற்றும் முற்றும் பார்த்தேன்.
தூரத்தே பச்சைப் பசேலென்ற
புல்வெளி தெரிந்தது.
அதைநோக்கி என்கால்கள்
விரைந்து சென்றன.
மெத்த மகிழ்ச்சி
நன்றாக நீரருந்தி தாகம் தீர்த்தேன்.
இப்போ
பாலைவன வாழ்க்கை கழிந்துவிட்டது
பசுமையான வெளியிலே
என் வாழ்க்கை கழிகிறது.

யோ.புரட்சி

## சாகடிக்கப்படும் மனிதம்

மனிதத்தை வணங்காதே
கழுகுகளின் அரங்கில்
கோரப் பற்களால்
குதறப்படுகிறது மனிதம்
பூப்போன்ற மென்மையான
இதயங்கொண்ட
அந்தப் பூவுடல்கள்
வேல்கொண்டு பாய்ச்சி
கிழித் தெறியப்படுகிறது
நீசர்களால்!
பிண்டங்களாக சிதறிய
தசைத் துண்டங்களை
காவிய கழுகொன்று
வாசலில் நின்று
எக்காளம் இடுகிறது
ஏ (வல்) பிசாசே
கூரையைப் பிடுங்கி வாயிலிடும்
உன் பழக்க தோசத்தால்
கபடமற்ற இதயங்களைக்
கசக்கிப் பிழிகின்றாய்
மானிட வாழ்வியலுக்காகத்
துடிக்கும்
தீர்க்க தரிசிகளின்
நேரிய தேடல்களுக்கு
ஆப்பு வைக்கின்றாய்
அகரத்தை அறியமுற்படும்
ஏழைகளுக்கு அவர்கள்
வரப்பிரசாதம்
ஆனால்...!
ஏவல் பிசாசுகளுக்கோ
நாராசம்.

-அருள்செம்பூரணன்

www.tamilanangam.net

# எல்லை காக்கும் இல்லங்கள்



தமிழவள்

## அமுதூட்டிய மாவீரன்

அவை மயிர்க்கூச்செறியும் நிமிடப் பொழுதுகள். வித்துடலாகி களத்தில் இருந்து தன்வீடு திரும்பிய ஒரு மாவீரனின் கரம் தன் ஆறு மாதங்களேயான மகளுக்கு சோறூட்டிய நிமிடங்கள்.

அதிசயமா? அதிசயமும் இல்லை, அற்புதமும் இல்லை, நிஜம்.

எங்கள் மண்ணில் எங்கள் கண்களுக்கு முன்னாலேயே நடந்து முடிந்துவிட்ட நிஜம்.

வன்னி மண்ணில் அமைதியாக எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் ஓராயிரம் காவியங்களில் இதுவும் ஒன்று.

களத்திற்குச் சென்று தன் பணி முடித்துவந்து மகளுக்குச் சோறூட்டுவதாகச் சொல்லிச்சென்ற கணவன் வித்துடலாகி வந்தபோது தன் கணவனின் கைகளாலேயே மகளுக்குச் சோறூட்டிவிட வேண்டும் என்ற ஆசையுடன் உணவைத் தன் கணவனின் கையால் எடுத்துத் தானே தன் மகளுக்குச் சோறூட்டிவிட்டு, யதார்த்தம் ஆளை உலுப்ப கணவனை இறுதி விடைகொடுத்து துயிலும் இல்லம் அனுப்பத் தயாராகி நின்ற ஜோதியின் வாழ்வு இது.

வில்லவன், ஜோதி இருவரும் ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள். இருவருமே ஒரே ஆண்டு, ஒரே மாதம், ஒரே திகதியில் பிறந்தவர்கள் என்பது தெரிந்ததில் ஆரம்பித்த நட்பு காதலாகி பின்னர் திருமணத்தில் முடிந்தது மட்டுமல்ல அடுத்த ஆச்சரியமாக அவர்களது மகளும் அதே மாதம் திகதியிலேயே பிறந்ததும் அவர்களது மகிழ்ச்சி எல்லை கடந்திருந்தது.

ஆறுமாதங்கள், தம் குழந்தையுடனான அவர்களது மகிழ்ச்சியான பொழுதுகள், தம் பெண்ணின் எதிர்காலம் பற்றிய கற்பனைகள்... கனவுகள்....

தான் தன்னுடைய வாழ்வு குடும்பம் என்று மட்டும் ஒருவன் அல்லது ஒருத்தி இருந்துவிடமுடியாத தேசம் அல்லவா? குடும்பக் கடமை என்பதைத் தாண்டி அதற்கும் அப்பால் தேசத்திற்காற்ற வேண்டிய கடமையும் அடிக்கடி அவனை அழைக்கும்.

மறுப்பவனல்ல அவன். தேசத்தையும் உயிராக நேசித்த அவனால் மறுத்து ஒதுங்குதல் என்பது முடியாத காரியம். விளைவு:

அடிக்கடி களம் போவான். தனது பணி நாட்களைச் செவ்வனே முடித்துத் திரும்பி வருவான். அன்றும் அப்படித்தான், அவனுக்கு பணிக்கான அழைப்பு வந்திருந்தது. அன்றுவரையும் மறுப்பேதும் தெரிவிக்காத ஜோதி 'இந்தமுறை போகவேண்டாம் பிள்ளைக்கு சோறு தீத்திமுடிய பிறகு ஒருதரம் வாறன் என்று சொல்லிவிடுங்கோ' என்று மறித்தபோது, 'மறுக்கிறது சரியில்லை. நாங்கள் போகாட்டி யார் போறது. போயிட்டு வந்து சோறு தீத்துவம்' சொன்னதைச் செய்துமுடிக்க வில்லவன் வரவில்லை. அவன் வித்துடல் மட்டும் ஜோதியைத் தேடி...

நிரந்தர சோகத்தை, துயரத்தை கண்களில் தேக்கி வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராகிவிட்ட ஜோதியின் கண்களில் ஜோதியைக் காண்பதுதான் அரிதாக உள்ளது. மகள் பற்றிய பேச்சுகள் ஏதாவது தொடங்கினால் மட்டும் ஒளிரும் அந்தக் கண்கள் மற்றபடி...

'பிள்ளையின் எதிர்காலம்தான் இப்ப எனக்குள்ள இருக்கு. தகப்பனின் ஆசைப்படி நன்றாகப் படிப்பித்துவிட வேண்டியது தான்' என்று கூறும் ஜோதியும்,

"அப்பா... வர்ணிக்குட்டியை நல்லா வளர்த்து விடுங்கப்பா' என்று தந்தையின் படத்திற்கு முன் கைகூப்பிக்கேட்கும் அந்த மழலையும், இந்த மண்ணின் மைந்தர்களுக்கு எதையோ சொல்ல நினைப்பது புரிகிறதா?

## றொசாண் குட்டி

'அம்மா! கொஞ்...ச...ம்... தேத்தா தாங்கோ'

ஒரு பூங்கொத்தாய் ஓடிவந்து தன் பிஞ்சு விரல்களைக் குவித்து தாயிடம் கேட்கும் றொசானியின் செல்ல வார்த்தைகள் அவளை அள்ளி முத்தமிடத் தோன்றும்.

அழகான வண்ணப்பொம்மை ஒன்று ஆளை மயக்குவது புதிதா என்ன? றொசானியும் அப்படித்தான். ஆனால், அவள் உயிருள்ள மழலை. வார்த்தைகளால் தேன் சொரியும் மழலை.

அவள் தந்தைக்கும் அவள் பொம்மை போலத்தான் தெரிந்தாளோ என்னவோ, கைதேர்ந்த சித்திரக் கலைஞனான அந்த வீரன் இரண்டு கோப்பு மட்டைகளை ஒன்றாக்கி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

ஒட்டி அதில் தான் வரைந்த அழகுப் பொம்மைக்கு வண்ணங்கள் தீட்டி, 'இதுதான் றொசான்குட்டி' என்று எழுதி வீட்டில் மாட்டி வைத்திருக்கச் செய்த அழகான ஓவியம் அவன். அவன் வரைந்த சித்திரம் காற்றிலாடிச் சிரித்து வந்தவர்களை வரவேற்றாலும் அந்தச் சித்திரக்காரன் மட்டும்,

கந்தர்மடத்தைச் சொந்த இடமாகக் கொண்ட சிற்பங்கள், தேர்கள் செய்யும் குடும்பத்திற்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த கடற்தொழில் செய்யும் குடும்பத்திற்குமிடையில் ஒரு திருமணப் பேச்சுவார்த்தை.

'எங்களிடம் சீதனம் என்று தர எதுவுமே இல்லை'

'அதெல்லாம் என்னத்துக்கு? என்ர மகனை அன்பா ஆதரவா பார்க்க ஒரு உறவு கிடைச்சாச் சரி'

இப்படித்தான் அந்த திருமணப் பேச்சுவார்த்தை சுருக்கமாக முடிந்துவிட சந்திரனுக்கும் ரஜனிக்கும் திருமணம் விரைவாகவே நடந்தேறியது.

கடலையே பார்த்தறியாத சந்திரன் தன் மைத்துனனுடன் கடல் சென்று கடற்தொழில் பழகியதும், பழக்கமற்ற கடலின் சூழ்நிலையால் சத்தி எடுத்து, சத்தி எடுத்து துவண்ட போதும் தன்னை ஒரு கடற்தொழிலாளியாக மாற்றிக்கொண்டதும், தனக்கெனத் தனித் தொழில் எடுக்க முடிவெடுத்ததும் தன் அன்பு மனைவி ரஜனிக்காகத்தான்.

ரஜனி, இருபத்தியொரு வயதுக் குழந்தை. தோற்றம், பேச்சு எல்லாமே குழந்தைத்தனம் நிறைந்ததுதான். அந்தக் குட்டிக் குடும்பத்திற்குக் கிடைத்த குட்டித் தேவதை றொசானி. தான் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் மகளை தன் சாறத்திற்குள்ளே தான் வைத்திருப்பான். மண்படவிடாமல் எப்போதும் மகளை 'பளிச்' என்று வைத்திருப்பதுதான் அவனது வேலை. மகளின் படிப்பு, மனைவிக்கு அழகான வருங்காலம் என்பதுதான் அவனது நித்திய கனவுகளாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் மேற்கொண்ட முயற்சிகள் ஒவ்வொன்றும் அதையொட்டித்தான் அமைந்திருந்தன.



மைத்துனனோடு சென்று தொழில் பழகி முடிந்து தான் தனியே தொழில் செய்யவென முடிவெடுத்து இரு குடும்பப் பெரியவர்களுடனும் ஆலோசித்துக் கொண்டிருந்த போதுதான் சந்திரனுக்கும் தேசப்பணிக்கான அழைப்பு வந்தது.

மறுத்துவிட முடியாத, யாருமே விலகி நின்றுவிட முடியாத பணி அது. ஆயிரமாயிரம் றொசான் குட்டிகளின் வருங்கால வாழ்க்கை ஒளிமயமாகுவதற்கான பணி. இந்த மண்ணின் விடுதலைக்கான பணி.

மனைவியையும் குழந்தையையும் பிரிவதென்பது தாங்கமுடியாத ஒன்று என்ற போதும் கடமையையும் அவனால் உதறித் தள்ள முடியவில்லை. எடுத்த புதுத் தொழிலை எல்லைக்குப்போய்வந்து செய்யத் தொடங்குவம் என்றுவிட்டு தான் வரும் வரை மனைவியையும் மகளையும் கவனமாகப் பார்க்கும்படி அவளது குடும்பத்தினரிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டுப் போன சந்திரன் திரும்பவும் வந்து அவர்களைப் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாத தூரத்துக்கு....

'பணி முடித்து நாளை திரும்புகிறார்கள்' என்று தகவல் சொன்னவர்களே மறுநாள் அவனின் இறுதிச் செய்தியைச் சொன்ன போது சுயநினைவிழந்து விழுந்த ரஜனியை அந்தக் குடும்பம் தாங்கிக்கொண்டது.

'ஈடுவைச்சு ஈடுவைச்சு நந்தலாலா" ஆடிக்காட்டும் அந்த மழலையின் அழகில், பேச்சில், சிரிப்பில் அந்த இளம் தாய் சிரித்துக் கொண்டிருந்தாலும் விடிவிற்கான பொழுதுகளை அந்த விழிகள் தேடாமல் இல்லை.

**விரைவாய்**

அவர்களுக்கு ஆயிரம் கனவுகள் தமது செல்ல மகள் பற்றி. நிறையப்படிக்க வேணும். நல்ல உத்தியோகம் பார்க்க வேணும், தாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் விதமாய் அவள் வாழவேண்டும். இப்படி ஏராளம் கற்பனைகள். ஆனால், அவர்களது செல்ல மகள் பவா தம் கனவுகளையும் நொருக்கி எறிந்துவிட்டுத் தான் விரும்பியவனுடன் திருமண வாழ்வில் இணைந்து கொண்டபோது அவளுக்கு வயது பதினேழுகூட இல்லை.

எதிர்பாராது விழுந்த இந்த அடியால் அக்குடும்பம் சற்றே ஆடிப்போனாலும் மகள் மீதிருந்த பாசமும் அன்பும் மீண்டும் அவளை அணைத்துக் கொண்டதே தவிர புறந்தள்ளி விடவில்லை.

**வேண்டும் விடுதலை**

எட்வேட் லோறன்ஸ். அவன் பவாவின் கணவனாக அந்தக் குடும்பத்தின் மருமகனாக மட்டுமே இருந்துவிடாது இந்தத் தேசத்தை நேசிப்பவனாகவும் இருந்ததால் அக் குடும்பமே பவாவையும் அவனது குழந்தைகளையும் சேர்த்துச் சுமக்க வேண்டிய நிலை.

விரும்பும்போது போவதும் போராளிகளுடனேயே நிற்பதும் அவர்களுக்கான பணிகளைச் செய்வதும் நேரம் கிடைத்தால் மட்டும் மனைவியைப் பார்க்கவருவதுமாக அவனது வாழ்வு.

மனைவி மீதான பிரியமும் மூன்று வயதே ஆன மகள் மீதான பாசமும் அவனிடம் நிறையவே காணப்பட்டாலும்கூட போராட்ட வாழ்வு என்பது எப்போதும் அவனுள் முதன்மையானதாகவே முகாமிட்டிருந்தது.

'நீங்கள் இப்படித் திரிந்தால் எனக்கும் பிள்ளைகளுக்கும் என்ன கதி' என்று பவா கேட்டுவிட்டால் 'நாட்டுக்காகச் செய்ய வேற யாருமே வருவினம்?' என்று பதில் கிடைக்கும். வேறு ஏதேனும் கேட்டுவிட்டால் உடனே வெளிக்கிட்டுப் போய்விடுவாரோ என்ற பயத்தில் பவாவும் அப்படியே விட்டுவிடுவாள்.

அதோடு இந்த மண் தொடர்பாக அவன் சொல்லும் வார்த்தைகளில் இருக்கும் நியாயப்பாடும் அவளது வாயைக் கட்டிப் போட்டு விடும்.

இரண்டாவது குழந்தையாக மகன் யூட் நிரஞ்சன் பிறந்தபோதும் இப்படியேதான். குழந்தையைப் பார்த்துவிட்டுப் புறப்பட்டவனை பவா மறித்தபோது 'போயிட்டு கெதியில் வந்திடுவன்' என்ற வழமையான வார்த்தைகளுடனேயே புறப்பட்டுப் போனவன் வீடுவந்தது மாவீரனாகி புகைப்படமாக.

'என்ன செய்யிறதென்றே தெரியேல்ல எனக்கு' என்று மகனிடம் பார்வையைப் பதித்தபடி பதில் சொல்லும் இருபத்தியொரு வயதேயான பவா என்ற பெற்றீசியா நிரோஜினி... 'அப்பா எங்கே' எனக்கேட்டால் படத்தைக் காட்டும் மகள் டல்சியா....

இப்படி இன்னும் எத்தனை எத்தனை இளம் மொட்டுக்கள்?

இத்தனை துயரச் சுமைகளைத் தாங்கியும் நிமிர்ந்து நிற்கும் தேசமாக தமிழீழம் நிற்பது பெருமைக்குரியதே. எனினும், இன்றைய இளையதலைமுறை ஒன்று இன்னும் ஒதுங்கி வாழ முற்படுவது தேசத்தின் விடுதலையைச் சற்றே காலந்தாழ்த்திவிட்டுவிடும் என்பதை அவர்கள் எப்போது புரிந்துகொள்வார்கள்?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# பொங்கு த



17.01.2001 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில்

சலுகைகள் வழங்கி மக்கள் இனமொன்றின் அரசியல் உரிமைகளைப் பறிக்கலாம், என்று கருதுவது நவீன கால ஆக்கிரமிப்பாளர்களின் பொதுவான நம்பிக்கை.

இந்த அரசியல் நப்பாசை பலித்ததாக வரலாறு இல்லை. ஆயினும், இதை முயற்சித்துப் பார்ப்பதில் அடக்குமுறை அரசுகள் சலிப்படைவது மில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட குடாநாட்டிற்கு, மின்சாரவசதிகளை வழங்கி, சொகுசுப்பேரூந்துகளை ஓடவிட்டு, தொலைக்காட்சி, சினிமா பார்த்து மகிழ வாய்ப்புக்களைக் கொடுத்து, கோயில் திருவிழாக்களையும், இன்னபல களியாட்டங்களையும் நடாத்த அனுமதிப்பதன் வாயிலாக குடாநாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வை மழுங்கடித்து, ஒரு தேசியப்பற்றற்ற மக்கள் கூட்டமாக அவர்களை மாற்றமுடியும் என சிங்கள அரசு நம்பிச்செயற்பட்டது.

தம்மைத் தேடிவந்த வசதிகளை மக்கள் பயன்படுத்திக் கொண்டனர். இவற்றை அவதானித்த சிங்கள அரசு "குடாநாட்டு மக்களது மனங்களை தமது சலுகைத்திட்டத்தால் வென்று வருவதாக" எண்ணத் தலைப்பட்டது.

அரசதரப்பின் நம்பிக்கை, அதிகநாட்கள் நீடிக்கவில்லை. சிங்களத்தின் நம்பிக்கையைச் சிதறிடிக்கும் வகையில், தருணம் பார்த்து குடாநாட்டின் கல்விச்சமூகம் பல்கலைக்கழகத்தின் தலைமையில் தனது சுதந்திர உணர்வைப் புலப்படுத்தத் தொடங்கியது.



26.02.2001 அன்று மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில்

ஜனவரி, 17ல் "பொங்குதமிழ்" என்ற பெயரில் யாழ்ப்பாணச் சமூகம் தனது அரசியல் விழிப்புணர்வை வெளிப்படுத்தி, தமிழரின் விடுதலைப் போராட்ட அரசியலுக்கு வலுச்சேர்த்துள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வாழ்ந்தபடி, அதன் அச்சுறுத்தல்களுக்கும், எச்சரிக்கைகளுக்கும் அடிபணியாது தமிழரின் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து, எழுச்சிப்போராட்டத்தைத் தலைமையேற்று நடாத்திய யாழ் பல்கலைக்கழகம் காலமறிந்து தனது வரலாற்றுக் கடமையை ஆற்றியுள்ளது.

சலுகைகளை வழங்கி உரிமைபறிக்கச் சதிசெய்த சிங்களஅரசின் பேராசைக்கு, பொங்குதமிழ் சாவுமணி அடித்துள்ளது.

இந்த எழுச்சி நிகழ்வில் சிங்கள அரசின் முகத்தில் அறைவது போல ஒரு காட்சிப் பொருளொன்றை பல்கலைக்கழக மாணவர்கள் அமைத்திருந்தனர்.

முட்கம்பிச்சுருள்களால் சுற்றி அடைக்கப்பட்ட ஒரு கூட்டிற்குள் தொலைக்காட்சிப்பெட்டி, குளிரூட்டி போன்று சிங்களம் அனுமதித்த சலுகைப் பொருட்களின் வகை மாதிரிகைள் வைக்கப்பட்டிருந்தன.

"ஒருசில வசதிகளுடன்கூடிய ஒரு சிறைச்சாலைதான் குடாநாடு" என்ற படிமத்தை இந்தக் காட்சிப் பொருள் மூலம், மாணவர்கள் சிறப்பாக அம்பலப்படுத்தியிருந்தனர்.

குடாநாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வை, மழுங்கடிக்க தாம், தந்திரோபாயமாகச் செயற்படுவதாக நினைத்துக் கொண்டிருந்த சிங்கள அரசுக்கு சிறைக்கூண்டுப் படிமத்தை வெளிப்படுத்தும் ஒரே ஒரு காட்சிப்பொருள் மூலம் பதிலடி கொடுத்து அதைவிட புத்திபூர்வமானவகையில் பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்டுள்ளனர்.

அந்த எழுச்சி நிகழ்வின் மூலம் தமிழரின் அரசியல் கோரிக்கைக்கான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை மீண்டும் ஒருமுறை உரத்து எழுப்பி எமது மக்களின் அரசியல் நிலைப்பாட்டை உலகிற்கு உணர்த்தி உள்ளனர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# ஈழத்தமிழரின் எழுச்சிக்குரல்



யாழ்ப்பாணத்தில் முகிழ்ந்த பொங்குதமிழ் நிகழ்ச்சி தமிழர் தாயகம் முழுவதிலும் பரவி தமிழீழ மக்கள் மத்தியில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழினப்படுகொலையின் கொடூரத்திற்கு அதிகளவில் முகம் கொடுத்துவரும் தென் தமிழீழத்தில் இந்த அரசியல் எழுச்சி பரவாமல் தடுக்க அங்குள்ள இராணுவ நிர்வாகம் பெரு முயற்சி எடுத்திருந்தது.

பல்கலைக்கழகங்களுக்கு, பிரபல கல்லூரிகளுக்கு, மாணவர் அமைப்புகளுக்கு என எச்சரிக்கை அறிவுறுத்தல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் இராணுவம் வழங்கியது.

இந்த இராணுவக் கட்டளைகளை மீறினால் தண்டனைகளை அனுபவிக்கத் தயாராக இருங்கள் என்றும் இராணுவம் மிரட்டியது.

மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத்தில் முன்னர் தாம் செய்த படுகொலைச் சம்பவங்களை துண்டுப் பிரசுரங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு நினைவூட்டிய படையினர், அவையெல்லாம் தாம் சீண்டப்பட்டதால் அல்லது ஆபத்திற்குள்ளாக்கப்பட்டதால் அல்லது புலிகள் என்று கருதி, நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் என எடுத்துக்கூறி தமது அறிவுறுத்தல்களை செவிமடுக்காதுவிட்டால் இனிமேலும் அதுதான் நடக்கும் என்று மறைமுகமாக எச்சரித்து பொங்குதமிழ் எழுச்சியை நசுக்க முனைந்தனர்.

இந்த மிரட்டல்களுக்கு அடிபணிந்து எழுச்சிப் போராட்டத்தைக் கைவிட மட்டக்களப்பு கல்விச்சமூகம் மறுத்துவிட்டது. வீதியில் இறங்கி எமது மக்களின் அரசியல் கோரிக்கைகளை உரத்து முழங்க முடிவெடுத்தது.

இராணுவ மிரட்டலுக்குப் பதிலடி கொடுப்பது போல தமிழ்மக்கள் பெருமளவில் கொல்லப்பட்ட ஒரு இடத்தில் இருந்தே இந்த அரசியல் ஆர்ப்பாட்டத்தை நடாத்த விரும்பியது.

1990இல் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழர்களில் 160 பேர் வரையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பேரூந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுப் புதைக்கப் பட்டிருந்தனர். அந்த வளாகத்திலேயே பொங்கு தமிழ் எழுச்சிப் போராட்டத்தை நடாத்த முடிவெடுத்தனர். இராணுவ அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது, பெருமளவில் கலந்து கொண்ட மக்கள் அந்த எழுச்சிப் போராட்டத்தை வெற்றியடைய வைத்தனர்.

இதேபோன்று திருமலை, வவுனியா மாவட்டங்களிலும், கல்விச்சமூகத்தின் தலைமையில் எழுச்சிப் போராட்டங்கள் நடந்தேறின. ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் அனைத்து இடங்களிலும் படைப் பயமுறுத்தல்களையும் மீறி, மக்கள் உறுதிகாட்டிப் போராடி, எமது மக்களின் ஒற்றுமை உணர்வை உலகிற்குப் புலப்படுத்தியுள்ளனர். ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பின் அனைத்துப் பட்டணங்களிலும், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், அனைவரும் ஒன்றுதிரண்டு, பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்குத் துணை நின்றனர்.

ஒருபுறம் அற்பசலுகைகளை அனுபவிக்க அனுமதிப்பதும், மறுபுறம் மக்களை இராணுவ அழுத்தற்திற்குள் உழலவிட்டு, அவர்களது தேசியப்பற்றையும் போராட்டக் குணாம்சத்தையும் மழுங்கடிக்கவும் முயன்ற சிங்கள அரசின் முகத்தில் எமது மக்கள் கரிபூசியுள்ளனர்.

**—— எல்லாளன் ——**

சலுகைகளின் விளைவான ஆடம்பர நுகர்வுப் பொருட்களைக் கண்டும், தமிழ் மக்கள் ஏமாறவில்லை. அதேவேளை இராணுவ நெருக்குவாரங்களைக்கண்டு அவர்கள் அடிபணிந்து, பேசாமடைந்தைகள் ஆகிவிடவும் இல்லை.

உரிய தருணத்தில் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பிய ஈழத்தமிழர்கள் உலகின் கவனத்தையும் எமது போராட்டத்தின்பால் ஈர்த்து, தமிழினத்தின் அரசியல் கோரிக்கைகளையும் வலுப்படுத்தியுள்ளனர்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்கள அரசாங்கத்துடன் பேசவும் தயார் என அறிவித்த புலிகள் இயக்கம் பேச்சுக்கு முதற்படியாக கடந்த டிசம்பர் 24ம் திகதியிலிருந்து அது கடைப்பிடித்துவரும் போர் நிறுத்தமும் இந்த மக்கள் எழுச்சிக்கு உந்து சக்தியாக இருந்தது.

புலிகளின் நல்லெண்ணச் செயற்பாட்டிற்கு அனுசரணையாக இன்றுவரை சிங்களஅரசு செயற்படவில்லை. தொடர்ந்தும், போர் வெறிகக்கும் இனவாதத்திமிருடனேயே அது நடந்து வருகின்றது.

புலிகளின் போர்நிறுத்தத்தை ஏற்று, சிங்கள அரசும், யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து, புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையில் உடனடியாக இறங்கவேண்டும் என்று வற்புறுத்தியும், தமிழரின் அரசியல் அபிலாஷைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பன பேச்சிற்கான அடிப்படைகளாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தியும் பொங்கு தமிழ் எழுச்சி அமைந்திருந்தது.

அலைபோல் தொடர்ந்து, தமிழர் தாயகம் எங்கும் நடந்த இந்த எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவாகத் தமிழ் அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து குரல் கொடுத்திருப்பது, தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கம்தான் என இந்தத் தமிழ்க்கட்சிகள் ஒப்புக்கொண்டு அதைப் பகிரங்கமாக அறிவித்திருந்தன. முக்கியத்துவத்தைப் பெற்ற இந்த அரிய நிகழ்ச்சி சிங்களப்பேரினவாதிகளை அதிர்ச்சிக்கும், சீற்றத்திற்கும் உள்ளாக்கியுள்ளன.

இதேவேளை தமிழ்க் கட்சிகளின் இந்த அறிவிப்பானது தமிழர் நிலத்தின் அரசியல் யதார்த்தத்தை, உலக சமூகத்திற்கும் உணர்த்தியுள்ளது.




17.01.2001 அன்று அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்குதமிழிற்கான ஆதரவு நிகழ்வில் .....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# உலைக்களம்

'அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே'

பாரதியே!
எட்டயபுரத்திலிருந்து அன்றிதை
எவருக்கெதிராகப் பாடினாயோ?
அதே அவர்களுக்கெதிராக
ஈழத்திலிருந்து இன்றுன் பேரன் பாடுகிறான்

தேம்ஸ் நதியே!
ஊற்று நீரை ஒட்ட இறைத்துவிட்டு
உன்னிலெப்போது அமிலம் நிறைத்தாய்?
பர்மிங்காம் அரண்மனையின் பளிங்குக்கற்கள்
எப்போது சரளைக் கற்களாயின?
தோலின் நிறம் போலத்தானே உள்ளேயும்
பாலின் நிறமென நம்பி
நாங்களின்று ஏமாந்து போனோம்.
அன்று கராம்புக்கும், கறுவாவுக்குமாக
எங்கள் கரையொதுங்கியவர்களே!
இன்று கதிர்காம மேனகையின் களியாட்டத்தில்
தேம்ஸ் நதியே சில்லிட்டுப் போனதா?
கடிக்க வந்தது கருநாகம்
அடித்தோம்
பாம்புக்குப் பால் வார்ப்பவர்கள்
தடிகளுக்குத் தடை விதித்துவிட்டனர்
பயிரழிக்க வந்தன யானைகள்
வெடி கொளுத்திப் போட்டோம்
யானைக்குத் தீனி போடுவோர்
வெடி கொளுத்திய கைகளுக்கு விலங்கிட்டனர்.
ஈழத் தமிழரே!
இடிவிழுந்து விட்டதென எண்ணாதீர்
உணர்ந்து கொள்வீர்
இது ஒப்பாரிக்கான காலமல்ல....
ஒட்டகங்கள் தடைசெய்து விட்டால்
சிட்டுக் குருவிகளுக்கென்ன சிறகா முறியும்?
காண்டாமிருகங்கள் தடைச்சட்டம் போட்டுவிட்டால்
மீன்குஞ்சுகளுக்கென்ன மூச்சா திணறும்?

முதுகிற் குத்திவிட்டுச் சிரிக்கின்றாயே
நீயுமா புருட்டாஸ்?
குளிர்தேசக் காற்று குரல் வைக்கிறது
பூமத்தம் பூவுக்கும் நோப்படக் கூடாதாம்
பூப்பறிக்கும்போது முட்களுக்கு மூச்சுத்திணறக் கூடாதாம்
நாங்கள் பயங்கரவாதிகளாம்
சொல்லித் திரிகின்றன வெள்ளைக் கொக்குகள்
சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம்
இன்று சுருங்கி விட்டதல்லவா?
அந்தக் கோபம் அவர்களுக்கு
ஊரையடித்து உலையிற் போட்டவர்களல்லவா
அந்த ராஜதிமிரே அவர்களைப் பேசவைக்கிறது.
கூட்டுக் களவுக்கு வந்த கொள்ளைக்காரர்கள்
பூட்டைத் திறந்துவிட்டு பேசாமற் கிடக்கச் சொல்லி
வீட்டுக்காரர்களுக்கே விளக்கம் தருகின்றனர்.
யுத்தமென்பது ரத்தம் சிந்துகின்ற அரசியல்
அரசியலென்பது ரத்தம் சிந்தாத யுத்தம்
இரண்டும் எமக்குக் கைவருமென்று
மிரண்டுபோன மேற்குலகுக்கு விளக்கம் சொன்னோம்.
அந்தப் பெரிய மனிதர்களுக்கு
இது புரியவேயில்லை.
குப்பையில் வீசுகின்றனர் எங்கள் குரலை.
ஈழத்தமிழரே! எதற்கும் அஞ்சாதீர்
நாளை வாழ்வெமக்கு வசப்படும்
எங்களைத் தடை செய்வதற்கு
இவர்கள் யார்?
எங்களுக்கு நுகத்தடி பூட்டுவதற்கு
இவர்கள் யார்?
சூரியக் குஞ்சுகளே துணிவை இழக்காதீர்
வேரையறுத்து எம்மை விறகாக்க முடியாது.
சபலங்கள் ஏதுமின்றி
தேரைச் சரியான திசைவழியிற் செலுத்துவோம்.
சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் கிடையாதே
வியட்நாமை வெள்ளைமாளிகை தடைசெய்தது
ஹோசிமின் இடிந்துபோய் விடவில்லை
தொடர்ந்தும் போராடினார்
இன்று நிமிர்ந்து விட்டது அந்த நிலம்.
பாலஸ்தீனத்தைப் பயங்கரவாதிகளின் குகையென
வெள்ளைக்கார அரசுகள் விலாசமிட்டன
இன்று அரபாத்துக்கு ஆலவட்டம் பிடிக்கின்றன.
இந்தியச் சுதந்திரப் போரைக்கூட
பிரிட்டன் பயங்கரவாதமென்று தானே
முதலில் பிரகடனம் செய்தது.
பின்னரென்ன நடந்தது?
மவுண்பேட்டனின் மனைவியின் தோளில்
காந்தியே கைபோட்டுத் திரிந்தார்.
நாங்களேன் இடிந்து போகவேண்டும்?
வரலாற்று நதி எங்கள் கால்நனைக்கவே வருகிறது

**வியாசன்**

# சிட்டுக் குருவிகளுக்
# மீன் குஞ்சுகளுக்கு

www.tamilanangam.net



வல்லமையுடன் இருப்போம்.
தந்ததை வாங்கித் தாள் பணிந்து கொள்வது
தேவானந்தனுக்கே தெரிந்த வித்தை
விடுதலையை விற்று விருந்துண்ணுவதற்கு
வேறு யாராவது விருப்பப்படலாம்
ஆனால் பிரபாகரன் தயாராக இல்லை
போராடும் புலிகளுக்கும் பிரியமில்லை
தாயகத் தமிழரும் தாங்கமாட்டார்கள்
புலம்பெயர்ந்து போன பிள்ளைகள் கூட
பொறுக்க மாட்டார்கள்.
எமக்கு வேண்டும் உரிமை
சலுகைகளல்ல..
அவர்கள் தரவிரும்பும் 'அரசியற்பொதி'
அது ஆனைப்பசிக்குச் சோளன் பொரி
ஆருக்கு வேண்டுமந்த 'அரைச்சாப்பாடு'
உறக்கத்திற் கிடக்கும் உலகமே!
உனக்கொன்று உரத்துக் கூறுகிறோம்
செவிட்டுக் காதுகளிருப்பின் தெரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் இரத்தப் பிசாசுகள் அல்ல
அடம்பிடித்தலறும் அடிப்படை வாதிகளுமல்ல.
நாங்கள் விடுதலைக்கு விலைகொடுக்கும் வேங்கைகள்.

அடங்கிப் போவதற்காகவா இந்தப்போராட்டம்
தொடங்கப்பட்டது?
இல்லையே.
பதினாறு வயதில் எமது தலைவன் புறப்பட்டது
பாதிவழியில் தன் பயணத்தை முடிக்கவல்ல
உயிருரசி மூட்டியதல்லவா இந்த உரிமைப்போர்
இது கருகிப்போகாதெனச் சத்தியம் செய்கிறோம்.
சுதந்திரதேவி உன்னைச் சேவித்தோம்
மயிர் நீக்காத இந்த மான்கள்,
நீக்கும் நிலைவந்தால் நிச்சயம் வாழாது
விண்மீது ஆணை,
இந்த மண்மீது ஆணை
தாங்குமெம் தலைவன்மீது ஆணை
தூங்குமெம் மாவீரச் செல்வங்கள் மீதாணை.
துணிந்துளது எம் தேசம்
இனிப் பணிந்தெவர் காலையும் நக்காது
எம் நாவுகள்.
பேச வருவோரே வாருங்கள்
உமக்கெமது பூமாலை
குண்டுவீசவெனக் குறிவைப்பவர்களே
பாருங்கள்
உமக்கிது சாவோலை.

# குச் சிறகு முறியாது,
# மூச்சுத் திணறாது.

www.tamilanangam.net

அக்கராயன் குளத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பக்கங்களில் அக்கராயன் ஆற்றின் இருகரைகளின் மேலும் பல தொல்மையங்களின் சிதைவுகளும், எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றிலும் மிக முக்கியமானதாகவும், பெரியதாகவும் (இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் பகுதியின் தொல்மையங்களில் பெரியதாக) அக்கராயன்குள வலதுகரை வாய்க்காலின் கிழக்குப்பக்கமாக இருக்கும் பெருங் காட்டினுள்ளே கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல் மையமே அமைகிறது. இதுவரையில் இந்த மையத்திலிருந்து முதுமக்கள் தாழிகள், வெவ்வேறு உலோகத்தாலான அணிகலன்கள், அவர்கள் அகழ்ந்தபோது தொடர்ந்து செங்கல் அடுக்குகளே வந்துகொண்டிருந்ததால் ஆரம்ப முயற்சியுடனேயே சலிப்புற்று அதனை விட்டு விட்டனர். பின்பு திரு குணரட்ணம் கடந்த நான்கு வருடங்களாக அவ்வப்போது இதனை அகழும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். இவரின் அகழ்வில் 1999ஆம் ஆண்டு ஒரு மண்ணாலான பாத்திரம் (கலயம்) மூடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சியில் பல புதிய விடயங்கள் அறியப்பட்டிருக்கின்றன. இன்னும் அறியப்படவும் இருக்கின்றன.

இந்த மண்மேடு அக்கராயன்குள வலது கரை வாய்க்காலின் நிலப்பகுதியிலிருந்து ஏறக் காலத்தால் இலகுவில் சேதமடைந்து போகா தவாறு இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. பல நிலைகளில் வேகவைக்கப்பட்ட செங்கற்கள் நான்கு வடிவங்களாலானவை. (பருமனிலும் அளவிலும் நிறையிலும் நான்கு வகை) கட்டடத்தின் மேற்பாகம் நன்கு சுடப்பட்ட, கூடிய செந்நிறமுடைய வழவழப்பான செங் கற்பாளங்களைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. கற்களை செம்மையாக அடுக்கி நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ள இந்தத் தொல் மையத்தினுள் மண்ணாலான தாழிகள் சிலவும் தாம்பாளங்களும் (செப்பலானாது) அணிகலன்களும் மண்விளக்குகளும் வைக்கப் பட்டிருந்த சிறுவெற்றிடங்களைத் தவிர ஏக




மண்ணாலான பாத்திரங்கள், விளக்குகள், படிக்கற்கள், அடையாள முத்திரையிடப்பட்ட செங்கற்கள் எனப்பல மீட்கப்பட்டிருக்கின்றன. திரு. குணரட்ணம் என்பவரால் மேற்கொள்ளப் பட்டுவரும் இந்த அகழ்வு முயற்சி இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் பலரும் காட்டினுள் சென்று இதனைப் பார்த்து வருகின்றனர்.

வேட்டைக்காரர்களால் முதன் முதலில் இனங் காணப்பட்ட இந்த மண்மேடு 'ஒரு தொன்மையான மையமாக இது இருக்கலாம்' என்ற எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தியிருக் கிறது. மேட்டிலும், மேட்டின் ஓரங்களிலும் சிதறிக் கிடந்த செங்கற் சிதைவுகளும் மட் பாண்டச் சிதைவுகளும் அவர்களிடம் இந்த எண்ணத்தை உருவாக்கியிருந்தன. இதனால் சுமார் இருபது வருடங்களின் முன்பு யாரோ சிலர் இதனை அகழ்ந்து பார்த்திருக்கிறார்கள்.

குறைய முப்பத்திஐந்து அடி உயரத்தில் இருக்கின்றது. சூழவும் பெருமரங்கள் நிற்கும் இந்த மேட்டின்மேலும் பெருவிருட்சங்கள் நிற் கின்றன. இப்போது யானைகளின் போக்கு வரத்துப் பாதையாக இருக்கும் இந்த மேட்டின் பகுதியை துப்புரவு செய்து அகழத் தொடங்கு கையில் ஒரு பெரிய கட்டடத்தின் அமைப்பு துலங்குகின்றது.

நன்கு சுடப்பட்ட செங்கற்களைக் கொண்டு இந்தப் புராதன கட்டடம் அமைக்கப்பட்டி ருக்கின்றது. கட்டடத்தின் உச்சிப்பகுதியைத் (கலசத்தைத்) தவிர ஏனைய பகுதிகள் சிதை வின்றி மண்ணுள் புதையுண்டிருக்கின்றது. இதுவரையில் கட்டடத்தின் மேற்பகுதியும் வடக்குப்பகுதியுமே முற்றாக துப்புரவு செய்யப் பட்டிருக்கின்றன. ஏனைய பகுதிகளில் இன்னும் முழுமையான வேலைகள் பூர்த்தியாக்கப் படவில்லை.

பகுதிகள் யாவும் கல்லால் நிரப்பப்பட்டுள்ளது. அதனால் கட்டடம் உடைந்து விழவோ சரியவோ வாய்ப்புகளில்லை. அத்துடன் புறச் சூழல் களால் மண்ணரிப்பு, நில அமைப்பில் ஏற்படும் சிறுமாற்றங்கள், மரங்கள், விலங்கு களால் விளையும் பாதிப்புக்கள் என்பவற்றால் ஏற்படும் அழிவுகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு கட்டடத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் நன்கு துப்புரவு செய்யப்பட்ட பகுதிகளில் வடக்கே ஒரு வாசல் கண்டறியப் பட்டுள்ளது. நுழைவாயிலாக இல்லாவிட்டாலும் வடதிசைமுக வாயிலாக அது குறிகாட்டு கிறது. ஏனைய பகுதிகள் முழுமையாக அகழப்படும்போது இன்னும் பல வடிவங் களும், அமைப்புக்களும் துலங்கக்கூடும்.

இதுவரையில் மீட்கப்பட்ட தொல்பொருட் களில் தாழிகள், விளக்குகள், பொன்னாலான கவசம் மோதிரங்கள் என்பன சிதைவடை

## தமிழீழப் பாடலொன்றின் முதலடி மூன்று சொற்கள் கொண்டது

**முதலாவது சொல்லின்**
ஓராம் எழுத்து எழுச்சியில் உண்டு வீழ்ச்சியில் இல்லை
இரண்டாம் எழுத்து சங்கில் உண்டு சக்கரத்தில் இல்லை
மூன்றாம் எழுத்து நண்பகலில் உண்டு நள்ளிரவில் இல்லை
நான்காம் எழுத்து வெள்ளியில் உண்டு சனியில் இல்லை

**இரண்டாவது சொல்லின்**
ஓராம் எழுத்து அருச்சுனனில் உண்டு துரியோதனனில் இல்லை
இரண்டாம் எழுத்து தண்ணீரில் உண்டு வெந்நீரில் இல்லை
மூன்றாம் எழுத்து குணத்தில் உண்டு குற்றத்தில் இல்லை
நான்காம் எழுத்து நன்மையில் உண்டு தீமையில் இல்லை



**மூன்றாவது சொல்லின்**
ஓராம் எழுத்து நம்பிக்கையில் உண்டு நயவஞ்சகத்தில் இல்லை
இரண்டாம் எழுத்து வீரனில் உண்டு கோழையில் இல்லை
மூன்றாம் எழுத்து பாய்தலில் உண்டு பதுங்குதலில் இல்லை
நான்காம் எழுத்து தங்கத்தில் உண்டு பித்தளையில் இல்லை
ஐந்தாம் எழுத்து இரக்கத்தில் உண்டு கொடுமையில் இல்லை
ஆறாம் எழுத்து அன்பில் உண்டு ஆசையில் இல்லை

அந்த அடி யாது?
(எங்கள் அண்ணன் பிரபாகரன்)

–மனோன்மணி நடராசா




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

யாமல் நல்லநிலையில் இருக்கின்றன. சில மண்விளக்குகளும், செப்பாலான தாம்பாளங்களும் வேறு பாத்திரங்களும் மீட்கப்பட்டன.
அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் அனைத்தும் செம்மையும் வனப்பும் மிக்க கைவினையால் ஆக்கப்பட்டவையாகவே உணரமுடிகிறது. கட்டடத்தின் அமைப்பு அதன் பிரமாண்டம் அதற்குப் பயன்படுத்திய செங்கற்கள் எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கமைப்பையும் வியக்கத்தக்க ஆற்றலையும் காணமுடிகிறது.
குறுக்குவெட்டில் 75-80 அடி நீளமான விட்டத்தையுடைய கட்டடத்தின் சுற்றளவு ஏறக் குறைய 236-248 அடி இருக்கின்றது. இதுவரையில் கொண்டிருக்கும் திரு. குணரட்ணம் சொல்கிறார். ஒரு தாழியின் மேல்மூடியில் சூரிய முத்திரை காணப்படுகிறது. அதன் கீழே சீலைக்கரை வடிவிலான அலங்காரம் வரையப்பட்டிருக்கிறது. இது மண்ணாலான தாழி.
அதேவேளை தாழியினுள்ளே அஸ்தி எனக் கருதப்படத்தக்க சாம்பலும் ஏதோ தானியமும் உண்டு. இவ்வாறு மீட்கப்பட்ட தாழிகள், இரண்டு கால்வைக்கப்பட்ட மூடிச்சட்டி அமைப்பிலான கலயங்கள் இரண்டு. தாழிகளைச் சுற்றிவைக்கப்பட்டிருந்த விளக்குகள் இரும்பாலும் செம்பாலும் உருவாக்கப்பட்ட மோதிரங்கள் ஐந்து என பல பொருட்கள் இதுவரையில் சேகரிக்கப்பட்டுள்ளது. இவற்றையும் வைத்திருந்த இந்த ரகசியத்தை காலமே இன்று அவிழ்க்க முயல்கின்றது.
அக்கராயன் பிரதேசத்தில் இன்னும் பல தொல்பொருட்கள் மீட்கப்பட்டிருக்கும் நிலையுடன் இதையும் இணைத்துப் பார்க்கும்போது இப்பிரதேசத்தில் ஒரு வளர்ச்சிபெற்ற நாகரீகமான மக்கள் குடியிருப்பு இருந்திருப்பதாகக் கருத முடிகிறது.
அக்கராயன் அண்ணாசிலையடி, இடதுகரை வாய்க்காலோரங்கள், ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டப்பகுதி, நஞ்சுண்டகட்டு, ஊற்றுப்புலம், புதுமுறிப்புப்பகுதி ஆகிய இடங்களில் காணப்பெறும் தொல்பொருட் சான்றுகள் ஆய்வுக்குரியன. இந்த மையங்களிலிருந்து தொல்

# ...ப்பட்டுள்ள வரலாற்று மையம்



- காலம் காட்டாலும் மண்ணாலும் மறைத்து வைத்திருந்த ரகசியம் அவிழ்கிறது

– கருணாகரன்

மீட்கப்பட்ட இந்த தொல்மையத்திலிருந்தும் அவற்றுள்ளிருந்த தொல்பொருட்களிலிருந்தும் அடையாளம் காணப்பட வேண்டிய விடயங்கள் பலவுள்ளன. ஆனால், அவற்றுக்குரிய வரலாற்றறிஞர்களோ, வரலாற்றாய்வாளர்களோ அல்லது, தொல்பொருள் ஆராய்ச்சி மையங்களோ இங்கில்லாத நிலையில் நாம் இவை பற்றிய முடிவுகளுக்கு உடனடியாக வர முடியாது. வரலாற்றறிஞர்கள், ஆய்வாளர்கள் ஆய்வுகூட வசதிகள் இருக்குமானால் மீட்கப்பட்ட பொருட்களின் காலம், பண்பாடு, நாகரிகம் போன்ற பல விடயங்கள் புலப்பட வாய்ப்புக்கள் அதிகமாகும்.
எனினும் மீட்கப்பட்டுள்ள பொருட்களின் சாயல், அமைப்பு, அவற்றிலுள்ள முத்திரைகள் என்பனவற்றை அவதானிக்கும்போது எகிப்து, ராஜஸ்தான் நாகரீகங்களில் காணப்படும் தொல் அடையாளங்களை இவை ஒத்திருக்கின்றன என இந்த அகழ்வில் ஈடுபட்டுக் இந்தக் கட்டடத்தின் அமைப்பையும் ஆய்வுக்குட்படுத்தி இவற்றினுள்ளே உறங்கிக் கிடக்கும் ரகசியங்களையும் புதிர்களையும் அவிழ்க்கையில் இந்தப்பிரதேசத்தில் செழுமை யுற்றிருந்த ஒரு இனத்தின் நாகரீகத்தின் அடையாளம் தெரியக்கூடும்.
கட்டடத்தை அவதானிக்கையில் இதனைக் கட்டுவதற்கு இவ்வளவு பெருந்தொகையான செங்கற்களை இந்த மையத்துக்குக் கொண்டு வருவதற்கும் இவ்வளவு செங்கற்களைச் சுடுவதற்கும் எவ்வளவு மனிதவலு பயன்பட்டிருக்கக்கூடும் என்ற வியப்பு ஏற்படுகின்றது. அதேசமயம் இவ்வளவு கற்களையும் சுடுவதற்கு அக்கராயன் ஆற்றின் கரைகளில்தான் சூளைகளையும் அமைத்திருப்பார்கள்.
அக்கராயன் ஆற்றிலிருந்து பார்க்கத் தெரியும் படியாக இந்த பிரமாண்டமான கட்டடம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணும்போது இப்படிக் கருத அதிக இடமுண்டு. காலம் மறைத்து பொருட்களைச் சேகரிக்கும் ஆர்வத்துடன் திரு.கு.மேகநாதன், திரு.குணரட்ணம் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த இடங்களிலிருந்தெல்லாம், மண்ணாலான உருவச்சிலைகள் மற்றும் நடுகற்கள், ஆவுடையார்கள் எனப்பலவும் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் அவிழாத புதிராகவும் வெளிப்படாத ரகசியங்களாகவும் பல புதினங்கள் உறங்கிக் கிடக்கின்றன. அவையும் மெல்லமெல்ல இனி அவிழத் தொடங்கும். இந்தப் பெரும் ரகசியங்களை அவிழ்க்கும் பெரும் முடிச்சாக தற்போது அகழப்பட்டுக்கொண்டிருக்கும் வலது கரைக் கீழ்க்காட்டுத் தொல்மையம் அமையலாம்.
வியப்பும் வினாவுமாக மாயமுடிச்சுடனிருக்கும் தொல்சுவடுகளில் ஓர் ஆர்வப்பயணம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஏனெனில், இப்பயணத்தின் அனுபவங்கள் மிகமிகச் சுவாரஸ்யமானவையல்லவா! ●

## தடையால் எழுந்ததே புலிகள் படை!

*தடை என்ன தடை*
*தமிழ் நிலத்தில் தமிழர் படை*
*போராட என்ன தடை*
*காப்பரண் போகவா தடை*
*சுடுகருவி கையேந்த என்ன தடை*
*உன்னிடம் உள்ளதே விடை*
*இது பூர்வீக மக்கள் படை*
*பிரபாகரன் தலைமைப் படை*
*தமிழ் மானம் காக்கும் படை*



*இந்திய அமைதி'ப் படை*
*'கிறீன் பரட்' பூசிய படை*
*சிங்களக் கோரப் படை*
*இவையே பயங்கரவாதப் படை*
*எம்மிடம் தோற்றதே விடை*
*தடையால் எழுந்ததே புலிகள் படை*
*பறித்ததை கேட்டால் தடை*
*தெரிகிறது அவர்கள் கோர நடை*

*தமிழீழப் பிரசவத்திற்கு என்ன தடை*
*மைந்ததேன தேசத்தை காக்கவா தடை*
*களம் வெல்லும் உன் நிமிர்ந்த நடை*

*அலையாய் எழுந்து*
*தடைகள் உடை*
*அழிவாகும் எதிரிகள் படை*
*வரலாறு படைக்கும்*
*தமிழர் படை*
*தடைகள் உடைத்து*
*கொடுப்போம் விடை*
*தமிழீழம் காணும்*
*பிரபாகரன் படை*

**வயவை அ. யூலியஸ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# உண்மை

## களத்துமேடு

ஆயிரம் ஆயிரம் உயிர்களை உண்டு ஏப்பமிட்ட கொடும் போர்க்களம் இந்த ஆனையிறவு. இப்பொழுது நான் இங்கு நிற்கிறேன். என்னைச் சூழவும் ஒருபெரும் போர் விரிகிறது. அது தன் எல்லைகளை அகட்டி அகட்டி தன் கரைமுட்டும். விரியும் போரின் மையத்தில் இப்பொழுதுதான் என்னையும் இக்களம் ஏப்பம் விட்டுவிடக் கூடுமா? தாய்மடி தேடும் என் அவாவுதலின் இறுதிப்பொழுதில் என் உயிர் பிரிந்துவிடக் கூடுமா? எனக்கு நம்பிக்கையில்லை. உண்மையைச் சொன்னால் என்மனம் அதை நம்பி விட வேண்டாம் என என்னையே வற்புறுத்துகின்றது. வன்னி நிலத்தில் நான்கு வருடமாய் என் கால்கள் அளந்த களத்துமேடு குறுகியவை அல்ல. இங்கு சுழன்றெழுந்த போர்களில் எல்லாம் என் துப்பாக்கியும் புகைத்தது. பகையழித்து ஒவ்வொரு தடவையும் மீண்டெழுந்தவன் நான். இப்பொழுது மட்டும் எப்படி அது இயலாமல் போகும். என இருப்பை எனக்கு நானே ஊர்ஜிதம் செய்துகொண்டேன்.

18-04-2000 இன்று புத்தாயிரத்தின் சித்திரைப் பௌர்ணமி. இழந்துபோன தாய்க்காக பசியிருந்து நினைவை நிறைக்கும் பண்பாட்டு நாள். இன்றுதான் தாய்மடியின் தழுவலுக்காய் தொடங்கியது பெரும்யாகம். ஆனையிறவையே ஆகுதியாக்க வேண்டிய மாபெரும் வேள்வி. தாய்மடியில் தவழ்ந்த எந்த மனிதனுக்குத்தான் அதன் தாகம் புரியாது. தாய் மடியில் தலைவைத்து உறங்கினால் எந்தச் சோகம்தான் உதிர்ந்துபோகாது. அந்தரிக்கும் எந்த ஆத்மாதான் தன் தாய்மடியில் அமைதி கொள்ளாது. இழந்துபோன தாயை எண்ணி உணவிழந்து உணர்வை நிறைத்தல் பண்பாடு என்றால், இழந்த தாயை மீட்க உயிரையே இழக்க நேர்ந்தாலும் அது மாதவம் ஆயிற்றே. இழப்பின்றி அதுவே அடையப் பெற்றால் மனிதப் பிறவிக்கு வாய்க்கும் பெருவரமாயிற்றே அது. 'உனக்கது கிட்டும்' எனச் சொலிற்று என ஆத்மாவின் குரல்.

இன்று தொடங்கிய பெரும் சமரில் எதிரியின் விலா உடைத்து நெஞ்சறை புகுந்தோம். இதயத்தில் இடியெனத் தொடங்கும் நாளை ஒரு போர். இப்பொழுது நான் நிற்பது எதிரித்தளத்தில் முகாவில் எனும் பகுதி. அன்றைய அஸ்தமனத்தின் பின் ஆயத்தப்படுத்தத் தொடங்கினோம். எதிரிக்கு அஸ்தமனத்தை அன்பளிப்பு செய்வதற்காய்.

இரவு முழுவதும் போர்க்களம் தனது அர்த்தத்தை இடைவிடாது கற்பித்துக் கொண்டிருந்தது. பீரங்கிகள் வீழ்ந்துவெடித்த பேரொலிகள் காதுகளை அறைந்துகொண்டிருந்தன. சீறித் திரிந்த ரவைகள் மனித உடல்களை எதிர்பார்த்து அலைந்தன. எதிரி இடைவிடாது ஏவிய 'பரா' வெளிச்சங்கள் இன்று ஒளியிழந்தன. இருளில் பேரொளியென எழுந்து நின்ற சித்திரை நிலவு, எதிரி ஏவிய பரா வெளிச்சங்களை விழுங்கியபடி தன் கம்பீரத்தைக் காட்டியது. 'பரா'க்குண்டுகள் சிவப்பு பொட்டுகள் போல வானத்தில் தோன்றி அழிந்தன. ஆனாலும், அதை ஏவாதிருக்க எதிரியால் முடியவில்லை. நாம் கொண்டுபோகும் அவனுக்கான மரணத்தை பார்த்துவிட தவித்தானா? அல்லது, தான் வைத்திருக்கும் எமக்கான மரணத்தைத் தந்துவிடத் துடித்தானா? எதுவாயும் இருக்கலாம். ஆனால், நிகழக்கூடியது ஒன்றுதான். நானா? அவனா? என அவாவுதல் தாய் மடி தேடியது, அவனது அப்படி அல்ல.

'தருமமே வெல்லுமாம்' அதுபற்றி எனக்குத் தெரியாது. அதைச் சொல்லும் வாழ்வனுபவம் எனக்கின்னும் வந்துசேரவில்லை. ஆனால், நான் சொல்வேன் என தேடல் வெல்லும். இது அனுபவத்தின் சாட்சியல்ல, என் ஆன்மாவின் ஆவலாய் எழுந்த சத்தியத்தின் சாட்சி.

நெளிவுகளற்ற முழுமை நிலவு நிறைக்கிறது எங்கள் பூமியை. இந்த இரவில் இதன் ஒளிக்கு ஈடாய் எதுவும் இல்லை. மீறி ஒளிதுப்ப வானெழுந்தவற்றை உறிஞ்சி உள்ளிழுத்து குளிர்மையாய் ஒளிர்கிறது நிலவு. வானத்தில் இது தன் முழுமையை முடித்து சரியும்போது உதயம் தொடங்கும். அதன் வரவுக்காய் பூமி பூபாளம் இசைக்கும்.

போரின் நாலாம் நாள் முடிவில் அல்லிப் பளை-கிளாலி உப்புநீரேரி தான் பட்ட கடனடைத்து மனமாறிற்று. உயிர்கொண்டோடிய பகைவனின் உடல் பிளக்க குருதி சிதறிப் பாய்ந்தது. நீலமென விரிந்த நீரேரி எங்கும் பகைவனின் உயிர்விழ, உடல் பிண்டங்களாய் மிதந்தலைந்தன பிணங்கள். அவலத்தின் சகிக்கமுடியாத பிரவாகத்தில் தன் கடனடைத்து அமைதிகொண்டது நீரேரி. அது 1996 மார்ச்சில் அவர்களிடம் நீரேரி பட்ட கடன். அன்றுடன் ஒழிந்தது கடன் மட்டுமல்ல, ஆனையிறவுத் தளத்தின் வலியும்தான்.

அன்று போர்க்களத்தில் ஓய்வுநாள். எதிரியோ ஓய்வற்றுக் காத்திருந்தான் தன் மரணத்திற்காக. அவனது காத்திருப்பை அர்த்தமிழக்கவைக்க எமக்கு ஆசையில்லை, அவகாசமும் இல்லை. அடுத்த களம் பளைப்பகுதி. நான் போகவேண்டும் போர்பொருத, அதன் பொழுதுக்குள் கிடைத்ததே இன்றைய ஓய்வுநாள்.



அன்றைய ஓய்வு நாளில் அள்ளித் தலை முழுகினேன்; ஆனையிறவிற்கும் சேர்த்துத்தான். ஆனையிறவில் பட்டவலிகள் இத்தோடு ஒழிந்தன. அதற்காயினும் முழுக வேண்டாமா. தலையில் ஊற்றிய நீர் உடலில் வழிந்து உயிரை நனைத்தது. உண்டு பசியாறினேன். உறங்கி உடலாறினேன். எழுதி மனமாறினேன். எப்படி நான் ஆறக்கூடும் நேற்றிருந்து இன்றில்லாதுபோன என் தோழர்களுக்காய் மனம் குமுற அந்த நீரேரியின் காட்சியை





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# க் களிப்பு

எழில்

மனதில் விரித்தேன் மீண்டும் மீண்டும்.

ஆனையிறவுப் பெரும்தளத்தின் ஒரு மூலையில் பெருவிரிப்பென பரந்த வானத்தை மல்லாந்து பார்த்தபடி படுத்திருக்கிறேன் என்னருகில் எனக்கென சோலையமைத்த ஓரிரு மரங்களைக் கடந்து பெருவெளியாய் விரிகிறது நிலம். அதன் ஒரு திசையில் நீலவான பின்னணியில் கரும்புகை திரண்டெழுகிறது மேல்நோக்கி. போர்க்களத்தின் எச்சங்களாய், நிலத்தில் இருந்து துருத்தித் தெரிகின்றன சிதிலமாகிப்போன பகை வீடுகள். மையத்தில் உயர்ந்து பறக்கின்றது செந்நிறமாய் எங்கள் புலிக்கொடி. உப்புக்காற்றின் உற்சாகத்தில் பறக்கும் புலிக்கொடியின் படபடப்பை என் காதுகள் கேட்கும் தூரத்தில் இல்லை. ஆனாலும், அதன் நெளிவு கம்பீரமாய் எழும்பும் அதன் படபடப்பு ஒலியை என் பிரக்ஞையின் ஆழத்தில் சப்திக்கிறது. கடந்த ஒவ்வொரு நாளாய் வென்றுவந்த இதன் பிறதளங்களையும் கண்முன் தெரியும் இந்த மையத்தளத்தோடு பொருத்திப் பார்க்கின்றேன். அதன் பிரமாண்டம் மனதைச் சிலிர்க்கிறது. நான் அறியாத ஒரு லோகத்து இராட்சதப் பறவையென, என் புலன் உணராத நிறம் கொண்டதென அப்பறவை மரித்துப்போய் மல்லாந்து கிடப்பதாய்ப்பட்டது. இரு கடல்களைத் தொட்டு பின்நோக்கி நீண்டு கிடந்தது அப்பறவையின் பேருருவம். அதன் சொண்டென எழுந்து நின்றது இரும்புச் சட்டங்களால் ஆன தொலைத் தொடர்புக் கோபுரம். அதில் பறந்து கொண்டிருந்தது எங்கள் செந்நிறப் புலிக்கொடி. இராட்சதப் பறவையின் நிச்சயமான இறப்பை அதன் பறப்பு அறிவித்துக்கொண்டிருந்தது. இத்தனை வருடமாய் இதனோடு பட்ட ரணங்கள் கரைந்தழிந்தன; அக்கொடியின் பறப்பைப் பார்த்திருக்கப் பார்த்திருக்க.



அதன் வெற்றியின் உச்சத்தில் துள்ளிக் குதித்து ஆரவாரிக்க முடியவில்லை. அதற்கு மனம் விளையவில்லை. மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தெழ என்னிடமே மனம் சிக்காத தவிப்பை நான் உணரவில்லை. ஒருவேளை ஆரவாரிப்போ அல்லது வேறெதுவோ வெற்றியின் நிறைவை உணர மனதுக்குப் போதவில்லையோ என்னவோ, ஒரு விதத்தில் நான் பிரக்ஞை அற்றிருந்தேன். கொடியின் பறப்பில், அதன் நெளிவில், அசைவில் லயித்த என் மனம், அதன் பின்தொடர்பில் பிரக்ஞையை இழந்தது. உயிரின் ஆழத்தில் ஏதோ ஒன்று என்னை ஆகர்சித்துக்கொண்டிருந்தது. அந்நிலையே அலாதி சுகம் தருவதாய் இருந்தது. அதிலிருந்து விடுபடாதிருப்பதே பேரானந்தமாய் பட்டதெனக்கு. உண்மைக்களிப்பு உயிரில் கவிந்து வழிந்தது. சட்டென நெஞ்சுக் குழிக்குள் குமுழியொன்று கூசியோட செவிகள் கிழிபடுவதாய் சீறி இரைந்து நிலமதிர, உடல் ஒரு கணம் அமுக்கத்தில் தள்ள, இடியென எழுந்து காதை அறைந்தது ஒரு பெரும் பேரொலி. கரிய முகில்கற்றையென திரள்திரளாய் எழுந்தது கந்தகப்புகை, 'கிபிர்' மேலெழுந்து சுழன்று திரும்பியது, ஓயாத அலையில் என் ஒருநாள் ஓய்வை முறித்து.

\- - -

## அடிபெயர்ந்த ஆனையிறவும் வானில் அறைந்த வீரமும்

நெற்கதிர்கள் குலுங்கியாடிய
நிலத்தையும்
கடல் மீன்கள் குவிந்து
நீந்திய நிலத்தையும்
இணைக்கும் வாசலில்... பிரித்தபடி
நாளாந்தம்
படமெடுத்தாடியபடியிருந்தது
கரு நாகம் ஒன்று
அதன் பெருத்த உருவத்தாலும்
அது கொண்டிருந்த விசத்தாலும்
தன்னை யாராலும் கொல்லமுடியாது
என்ற நம்பிக்கை அதற்கு
சுற்றயலில் இருந்த
ஒளிகளையெல்லாம் உமிழ்ந்தபடி
இருள்களை துப்பித்துப்பி நகைத்தது
ஒரு பொழுதில்.....
ஓயாத அலைகளை சுமந்த காற்று
சுழன்றடித்தபோது....!
அதற்குள் கரு நாகம் சிக்குண்டு
திக்குமுக்காடிச் செத்துப்போனது
அதன் சிதைந்த உடலின் செதில்கள்
அந்த உப்பு வெளியெங்கும்
பரவிக் கிடக்கிறது.
வாசல் திறந்த பூரிப்பில்
ஊர் போகும் நினைவுகள்
நுரைகளாக....
சுவாசப்பையெங்கும் நிறைகிறது.

–ஆவரங்கால் சுதன்




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# வரியெழுதிச் சாகும் வரம்தா...

ஆனையிறவுக்கு அயலூரானது
இந்த முரசுமோட்டை.
இங்கு மீண்டும் உழவு நடக்கிறது இப்போது
சேற்றில் கால்புதையச் செருக்கோடொருவன்
காற்றில் சாட்டை விசுக்கிக் காளை
விரட்டுகிறான்
ஏரிழுத்துக் கொள்கிறது இரண்டு
நாம்பன்கள்.
முகிலேறிய புளுகத்தில் உழுவோன்
அவன் முகம் வேர்த்துளான்
எனினும் விடுவதாயில்லை.
ஆனையிறவு அடிபாட்டுக்குப் போன
எல்லைப்படையில் இவனொருவன்
போர்க்களத்தை வென்ற பூரிப்பில்
திரும்பி வந்து
ஏர்க்களத்தில் இப்போ
இறுமாப்போடுழுகின்றான்.
வரம்புகளில்
வெண்கொக்குக் கூட்டம் விருந்துக்குக்
காத்திருக்கு
சீதளம் சுமந்து வந்து
மேனிதழுவிப் போகிறது வெள்ளாப்புக்காற்று
பெருவாய்க்காலில் வழிகிறது
இரணைமடுத்தாயின் கருணைவெள்ளம்.

இரணைமடுத்தாயே!
கரம்கூப்பித் தொழுகின்றோம்
கருணைமாதாவே
மீண்டும் உன்நீர்பட்டு உயர்ந்தன வயல்கள்
தோண்டியெடுக்குமெம் சுரங்கத்தில்
பாய்ந்ததுன் சுனைநீர்
அழுதவாழ்வழித்து உழுகின்றோம் தாயே
அதுபோதும்
இனிவாழ்வமைத்துக் கொள்வோம் எம்
வல்லமையால்
ஆனையிறவில்
அருகிருந்த ஊர்களில்....
மூண்ட நெருப்பணைக்கப் பாய்ந்த
மூவாயிரம் பிள்ளைகளே!
ஆண்டுகளென்ன
யுகங்கள் ஆயிரம் வந்து கழிந்தாலும்
எம் சந்ததிக்குச் சந்ததி கடத்தப்படும்
உங்கள் மின்சாரச் சரித்திரங்கள்
காத்தவராயன் கூத்தோடு
உங்கள் கதையும் ஊருராய் அரங்கேறும்
அதை ஆயிரம் வருடங்களுக்குப் பின்னும்
பாய்விரித்திருந்து எம்பரம்பரை பார்க்கும்.
நேற்றுவரை
கூற்றுவனுலாவிய குடிமனைக்குள்ளே
வந்தோமென்பதே ஒரு வாழ்வு.
ஊர்திரும்பிய மகிழ்வுக்கு ஈடொன்றில்லை
உழவு நடக்கிறது
இனிப் பச்சைத்தாவணி கட்டிக்கொண்டு
வாசலில் நிற்கும் வயல்
பருவமேறியதும் நிலத்துக்கு முத்தம்செய்யும்
நாணத்தோடு பயிர்கள்.
சூடடிக்கும்போது எழும்
புதுநெல்லின் வாசமொன்றே போதும்
வாழ்வின் அர்த்தம் எழுத.
ஒரு ஊர் மீண்டதுக்கே
இத்தனை குதிப்பும் கும்மாளமுமெனில்
நாடே நமக்காகும் நாளில்?
நானிருப்பேனா அந்த நாட்களில்?
புளியம்போக்கனை நாகதம்பிரானே!
அந்த நாள்வரை நானிருக்கவேண்டும்
இருப்பேனா தம்பிரானே?
அந்நாளிலும் இருந்
நாலு வரியெழுதிச் சாகும் வரம் தா.



-புதுவை இரத்தினதுரை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# தமிழர் விடுதலை வரலாற்றில் ஏப்ரல்

### பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது

18.04.1958 அன்று சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவிற்கும், தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவிற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமான பண்டா-செல்வா ஒப்பந்தம் பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.

### பஸ்தியாம்பிள்ளையும் அவரது அணியினரும் அழிப்பு

தமிழ் இளைஞர் பலரை சித்திரவதை செய்வதில் முன்னிலையில் நின்றவரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டவருமான சிறீலங்கா காவல்துறை ஆய்வாளர் பஸ்தியாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் அணியினர் முருங்கன் பகுதிக்கு அருகே மடுறோட் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமொன்றை 07.04.1978 அன்று சுற்றிவளைத்தனர். மாவீரர் லெப்.செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப் புலிகள் சமயோசிதமாக பஸ்தியாம்பிள்ளை குழுவினரை மடக்கி அவர்களைத் தாக்கியழித்து, அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

### தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது அறிக்கை

25.04.1978 அன்று முதன் முதலாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் உரிமை கோரி பத்திரிகைக் குறிப்பு (Press Release) வெளியிடப்பட்டது.

### பட்டித்திடல் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டித்திடல் கிராமத்தில் சிறீலங்காப் படைகளால் 26.04.1981 அன்று 16 தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.

### அரச செயலகத் தகர்ப்பு

02.04.1983 அன்று யாழ் மாவட்ட அமைச்சராக இருந்த விஜயக்கோன் தலைமையில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது சம்மந்தமான உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு நடைபெறுவதாக இருந்தது. கூட்டம் நடைபெறுவதற்கு சில மணித்துளிகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல் அணியினரால் செயலகக் கட்டடம் தகர்த்தழிக்கப்பட்டது.

### இராணுவத் தொடரணி மீதான அழித்தொழிப்புத் தாக்குதல்

சுண்ணாகம், தெல்லிப்பளை பகுதியில் தமிழ் மக்கள் மீது படுகொலைகள் புரிந்த இராணுவத்தினர் மீது 09.04.1984 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இராணுவத் தொடரணி முற்றாகச் சிதைக்கப்பட்டது 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரின் றக் வண்டியொன்று முற்றாகச் சிதைக்கப்பட்டது.

### யாழ் அடைக்கலமாதா ஆலயத்தின் மீது அரச படைகளின் தாக்குதல்

சிறீலங்கா அரசபடைகள், யாழ் கத்தோலிக்க சமூகத்தின் கலாச்சாரத்தோடு பின்னிப்பிணைந்த அடைக்கலமாதா ஆலயத்தின் மீது 09.04.1984 அன்று றொக்கட் தாக்குதலை நடத்தியதில் ஆலயம் பலத்த சேதமடைந்தது.

### யாழ் நகரில் தமிழ் மக்களின் எழுச்சி

10.04.1984 அன்று சிறீலங்கா அரசு தனது இனவாத நலன்களுக்காக யாழ்நகரில் அமைந்திருந்த பௌத்த ஆலயமும், சிங்களப்பாடசாலையும் எழுச்சி கொண்ட தமிழ் மக்களால் தகர்க்கப்பட்டன.

### பருத்தித்துறை காவல் நிலையத் தகர்ப்பு

கப்டன் லாலாரஞ்சன் தலைமையில் திரண்ட பொதுமக்களாலும், புலிவீரர்களாலும் பருத்தித்துறை காவல் நிலையம் தகர்க்கப்பட்டது.

### யாழ் காவல் நிலையத் தகர்ப்பு

நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த யாழ் காவல்நிலையம் கேணல் கிட்டண்ணாவின் வழிநடத்தலில் 1985.04.10 அன்று தகர்க்கப்பட்டது.

### மூத்த உறுப்பினர் கப்டன் லிங்கம் வீரச்சாவு

புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான கப்டன் லிங்கம் ரெலோ தேசத்துரோகிகளுடனான மோதலின்போது 29.04.1986 அன்று வீரச்சாவடைந்தார். வரலாற்றுப் புகழ்மிக்க திருநெல்வேலித் தாக்குதல் உட்பட விடுதலைப் புலிகளால் ஆரம்பகாலங்களில் இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களில் இவர் பங்குகொண்டிருந்தார்.

### திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையே பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை 10.04.1985 அன்று ஆரம்பமாகியது. சிறீலங்காவின் நயவஞ்சகத்தால் இப்பேச்சுவார்த்தை முயற்சி குழம்பியது.

### மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பம்

சமாதான முயற்சிகள் எப்பயனுமற்று தொடர்ந்தவேளை, சந்திரிகா அரசுடன் செய்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்த 19.04.1995 அன்று விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலிகளால் முதலாவது தாக்குதல் திருமலைத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சிறீலங்காக் கடற்படையின் சங்காய் வகையைச் சேர்ந்த இரு பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டன.

### தமிழர் மீது சந்திரிகா அரசினால் பொருளாதாரத்தடை விதிப்பு

சந்திரிகா அரசினால் 1995.04.20 அன்று தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதாரத்தடை குறித்து 867/12 என்ற இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் 21 பொருட்களுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டது.

### யாழ் வான்பரப்பில் 2 அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் 28.04.1995 அன்று அவ்ரோ விமானம் பலாலித் தளத்தினுள் சுட்டு வீழ்த்தப்பட்டது. வான்படையின் உயர் அதிகாரிகள் பலர் உட்பட 40 படையினர் கொல்லப்பட்டனர். மறுநாள் இன்னொரு அவ்ரோ விமானம் நவக்கிரியில் சுட்டுவீழ்த்தப்பட்டது இதில் பயணம் செய்த 50 வரையான படையினர் கொல்லப்பட்டனர்.

### ஆனையிறவுப் பெருந்தள மீட்பு வரலாற்று நிகழ்வு

தமிழீழ தேசத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் அடிமைச் சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் 22.04.2000 அன்று ஓயாத அலைகள்-3 படையணிகளால் மீட்கப்பட்டது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# பாலியம்மன் பள்ளு அல்லது

மின்மினிப் பூச்சிகளைச் சூடிய
முதுபாலை மரத்தின்
கீழிருக்கின்றேன்
முன்னால்
வவுனிக்குளம்
எல்லாளன் கட்டியதென்று
சொல்லுகின்றார்கள்.

கனகராயன் குளத்தில்
மழை பெய்தால்
வவுனிக்குளம் நிரம்புமாம்
வவுனிக்குளம் நிரம்பினால்
பாலியாறு பெருகுமாம்
பாலியாறு பெருகினால்
பாலியம்மன் உருக்கொள்வாள்
பாலியம்மன் உருக்கொண்டால்
படை திரளும், படை பெருகும்
போர் மூளும்.

**2**

வவுனிக்குளத்துக்கு
எத்தனை வயதிருக்கும் தெரியாது.
சிலசமயம்
குளத்து மேட்டை மேவியெழும்
முதுமரங்களுக்குத் தெரிந்திருக்கும்.
அவற்றின் வேர்களை யரித்தோடும்
பாலியாறுக்குத் தெரிந்திருக்கும்
நிச்சயமாக
பாலியம்மனுக்குத் தெரிந்திருக்கும்.

அவள் தானே
எல்லாளன் படைதிரட்ட
தேர்க்கொடியிலேறி அமர்ந்தாள்.

இப்பொழுதும் கேட்கிறது
கொலுசுச் சத்தம்
இப்பொழுதும் கேட்கிறது
உடுக்கினிசை
பாலியம்மன் ஆடுகிறாள்
உருவேற உருவேற
பாலியாறு பெருகியோடுகிறது
தொட்டாச்சிணுங்கி வெளி முழுதும்
நெல் மணிகள்
பாலியாற்றின் தீரமெல்லாம்
படை வீரர்

எல்லாளன் படை கொண்டு போகிறான்
கெமுனுவின் நகரை நோக்கி

கெமுனுவுக்கு நித்திரையில்லை
உடுக்கும் கொலுசும்
இதயத்தை பிளப்பது போலிருக்கிறது.
எங்கே துயில்வது?
கால்களை மேலும் மேலும் மடக்கி
கெமுனு துயிலாதே புரள்கிறான்
எல்லாளன் படை வருகிறது.

**3**

கொட்டைப்பாக்குக் குருவி
காடு விடு தூது
காட்டின் புதிரும் சோகமும்
முதுமரங்களின் அமைதியும் கம்பீரமும்
அதன் குரலாயினவோ

'வாடா பாப்பம் கொட்டைப் பாக்கா'

ஒரு வரிப்பாடல்
திடீரெனக் கேட்டால்
எவனோ
நாடிழந்தலையும் அரசனின்
சோகப்பாடல் போலிருக்கும்
உற்றுக்கேட்டால்
வன்னியரின் தாய்ப்பாடல்
இதுவோவென்று தோன்றும்

'வாடா பாப்பம் கொட்டைப்பாக்கா'
'வாடா பாப்பம் கெமுனு குமாரா'

குளத்து மேட்டில்
பட்டுத்திரும்பி
காட்டினுருளில் கரைகிறது
ஒரு நன்னிமித்தமாக.

'வாடா பாப்பம் கெமுனு குமாரா....'

முதிய எல்லாளன்
கெமுனு நகரின் மீது
படைகொண்டு போனான்
ஒரு தனியுத்தத்தில்
கெமுனு
அவனைச் சூழ்ச்சியால் கொன்றான்.

யானை சறுக்கியது.

தொட்டாச்சிணுங்கி
வயல் வெளியெலாம் பரவ
பாலியம்மன் தவஞ்செய்யலானாள்.....
கொட்டைப் பாக்குக் குருவியின்
குரலில்
தவிப்புக் கூடியது.

**4**

எல்லாளன் திரும்பி வரவில்லை
வவுனிக்குளம்
அவனது ஞாபகங்களால்
நிறைந்து தளும்பியது.

பிறகும் பிறகும்
அது வான் பாய்ந்தது.
பாலியாறு
கரைகளை முட்டிக்கொண்டு
ஓடியது.

பாலியம்மனோ
கடுந்தவஞ் செய்தாள்

தொட்டாச்சிணுங்கி முட்கள்
பற்றி எரிய, பற்றி எரிய
கற்பூரப் புல் வெளிகள்
பற்றி எரிய, பற்றி எரிய
பாலியம்மன் தவஞ் செய்யலானாள்
நூறு நூற்றாண்டுகளாய்.....

அவள் தவமெலாம்
திரளத் திரள
கிழக்கு வாவிகளிலும்
வடக்கு நந்திக் கடலிலும்
புதிது புதிதாய்த் தோன்றினர்
எல்லாளர்
ஆயிரமாய்

சாகா வரங்களோடு
பல நூறு கரங்களோடு
கொற்றவை பெற்ற
புத்திரரெல்லாம்
வந்து பிறந்தன ரென்று
கொட்டைப் பாக்குக் குருவி
காடெல்லாம்
கூறித் திரிந்தது.

'வாடா பாப்பம் கொட்டைப் பாக்கா'
'வாடா பாப்பம் கெமுனு குமாரா'

பாலியம்மன் பரவசமானாள்
நடனமிடலானாள்
வவுனிக்குளம்
வான் பாயலானது
பாலியாறு
பொலிந்து ஓடியது.

# ஓயாத அலைகள்

www.tamilanangam.net

கெமுனு குமாரன்
நித்திரை யிழந்தான்
கால்களை மடக்கி மடக்கிப்
படுக்கிறான்
நிம்மதியில்லை.

பிரளய காலமிதுவோ?

'யாரங்கே
தளபதிகளை மாற்று
அஸ்திரங்களை மாற்று
வியூகங்களை மாற்று

செய் அல்லது செத்துமடி'

ஓரிரவுக்குள்
ஓராயிரம் யானைப்பலம்
எல்லாளர்களுக்கு
எப்படிக் கிடைத்தது?

பிரளயம்
மகா பிரளயம்
பிரளய காலப் பேரலைகள்

கெமுனு குமாரர்
படைகளைத் துறந்து
நிர்வாணிகளாய் ஓடுகிறார்
விழிகளில் பீதி
பசி, பயம்

ஒதிய மலையில் கொடி
மருத மடுவிலும் கொடி...

கெமுனு
துயிலாதே
புரண்டு புரண்டு படுக்கிறான்

'வாடா பாப்பம் கெமுனு குமாரா'

**5**

ஆனையிறவு
அலிமங்கடவ

அதன் எல்லாச் சிறகுகளையும்
அரிந்து விட்டார்கள்

உப்பு வயல்கள்
பற்றி எரிகின்றன

கடலேரி முழுதும் பிணங்கள்

பொறிக்குள் சிக்கிய
கெமுனு குமாரர்
நீரில்லை
விநியோகம் இல்லை
தைரியமும் இல்லை

கெமுனு குமாரர் தனியே.

பாலியம்மன் தவம் நித்து
உருக் கொண்டுவிட்டாள்
உப்பளக்காற்றில்
உடுக்கிசை
கோபமும் உருவும் ஏறும்
படுவான் கரையிலும்
குருந்தூர் மலையிலும்
படை பெருகும்

அலிமங்கடவ
அலிமங்கடவ

வாடி வீட்டில்
நெருப்பு
தேய்பிறைக்கால
பின்னிருட்டில்
புறமுதுகிட்டான் கெமுனு.

அலிமங்கடவ விழ்ந்தது
விழ்ந்தது
அலிமங்கடவ

பாலியம்மன் ஆடலானாள்
பரவசமுற்றே.

இதயம் நிறைந்து
நூற்றாண்டு காலப்
பழி முடித்த திருப்தியோடு
அவள் ஆட ஆட
படை பெருகும்
படை நகரும்
நிலம் அதிரும்

கொட்டைப் பாக்குக் குருவி
ஆனந்தமாகப் பாடிச் செல்லும்

'வாடா பாப்பம் கெமுனு குமாரா'

# ...ர் மூன்று



**–நிலாந்தன்**

**பிற்குறிப்புக்கள்:-**

1- வன்னி நாட்டின் ஆதியான வழிபாட்டம்சங்கள் தாய்த்தெய்வ வழிபாடும் நாகவழிபாடும். பாலியம்மன் இந்தத் தாய்த்தெய்வ வழிபாட்டின் குறியீடாகவே வருகிறாள்.
பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆதி வன்னிக்கிராமங்களில் ஒன்று ஒட்டன்குளம்.
இக்கிராமத்தின் வாசலில் பாலியாற்றினோரம் ஒரு காவல் தெய்வம் போல பாலியம்மன் வீற்றிருக்கின்றாள்.
வவுனிக்குளம் வான் பாய்ந்தால் நீரெல்லாம் பாலியாற்றில் போய் விழும். வவுனிக்குளத்துக்கும் பாலியாற்றுக்கும் இடையில் உள்ள இந்தப் பூர்வீக பந்தம் காரணமாகவும் பாலியம்மன் சிறப்புப் பெறுகின்றாள்.

2- கொட்டைப்பாக்குக்குருவியை காட்டின் பாடகன் எனலாம். பெருங்காட்டின் மீது அது சதா கத்திப் பறக்கும் 'குக் குக் குக்கூ குக்குக் குக் கூ' என்ற அந்த ஒரு வரியிசையை வன்னியர்கள் 'வாடாபாப்பம் கொட்டைப்பாக்கா' என்று மொழிபெயர்த்து வைத்திருக்கின்றார்கள்.

3- அலிமங்கடவ - ஆனையிறவின் சிங்களப் பெயர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net










# சனநாயகம்
# தமிழர் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியது

1956 ஆம் ஆண்டு லண்டனுக்குப் போகும் வழியில் எனது பிரயாணத்தை இடைநிறுத்தி சிறீலங்காவுக்கு (அப்போது சிலோன் என்று பெயர்) முதன் முறையாகச் சென்றேன். அதே வருடம் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சொலமன் வெஸ்ற்றிஜ்வே பண்டாரநாயக்கா பொதுத்தேர்தலில் வெற்றியடைந்து தனது நாட்டின் பிரதமரானார். சிங்களத்தை தேசிய மொழியாகவும், புத்த மதத்தை தேசிய மதமாக வும் உயர்த்துவேனென்று அவர் தேர்தல் வாக் குறுதி அளித்திருந்தார்.

பண்டாரநாயக்கா ஒரு அசல் பழுப்பு நிற வெள்ளைக்காரன், ஆங்கிலக்கல்வி பெற்றவர். கிறீஸ்தவராகப் பிறந்தவர். பின்பு சுதேசியாக மாறி புத்த மதத்தைத் தழுவியவர். சிங்கள மொழிவெறியராகவும் அவர் மாறிவிட்டார். சிலோனின் சீரழிவு இப்படித்தான் ஆரம்பித் தது. டாம்பீகமாக ஆங்கில உடையணிந்த, உயரத்தில் குறைந்தவரான இந்த மனிதர் நன்றாகப் பேசுவார். சிலோனை ஒரு சிங்கள மக்களுக்குரிய நாடாக மாற்றுவேன் என்ற வாக்குறுதியுடன் அவர் தேர்தலில் வெற்றியைப் பெற்றார்.

பிரிட்டிசாரின் வாழ்க்கைமுறை, அவர்களைப் போன்ற நடையுடை போன்ற அடையாளங் களுடன் உலாவிய மேட்டுக் குடியினருக்கு எதிரான புரட்சியாக அவருடைய குரல் ஒலித் தது. பண்டாரநாயக்காவினால் தோல்வி யுறச் செய்யப்பட்ட பிரதமர் சேர் ஜோன் கொத்லா வலை ஒவ்வொரு காலையும் குதிரை ஏற்றம் செய்வார். யாழ்ப்பாணத் தமிழர்களும் பிற சிறுபான்மையினரும் பின் நிலைக்குத் தள்ளப் படுவார்கள் என்பது பற்றி தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவந்த பண்டாரநாயக்கா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

புத்தமதம் தேசிய மதமாக்கப்படுவதால் இந்து மதத் தமிழர்கள், இஸ்லாம்மத முஸ்லீம்கள், கிறீஸ்தவ மத பறங்கியர்கள் கலவரம் அடைவார்கள் என்பது பற்றியும் அவர் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஒக்ஸ்போட் பல கலைக்கழகத்தின் ஒக்ஸ்போட் யூனியன் மா ணவர் சங்கத்திற்கு அவர் தலைவராக பதவி வகித்தவர். இந்தச் சங்கத்தில் நடக்கும் விவா தங்களில் பங்கெடுத்துப் பேசுவதுபோல அவர் பின்பு வாதிடுவது வழமை.

மூன்று வருடங்களுக்குப்பின் ஒரு புத்த துறவி யால் அவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி என்னை அதிர்ச்சியுறச்செய்தது. புத்த மதத்தை தேசிய மதமாக்கும் வேகம் போதாது என்ற காரணத்திற்காக அவர் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்று நான் நினைத்தேன். விதி இப்படியும் விளையாடுமோ என்று வியப் படைந்தேன். அவருடைய மரணத்தைத் தொடர் ந்து நடந்த பொதுத்தேர்தலில் அவருடைய மனைவி தனது கண்ணீரை மூலதனமாக்கி வெற்றிபெற்றார். கணவருக்கு நிகரான வாய் வீச்சு இல்லாவிட்டாலும் மிகவும் உறுதியான மனப்போக்கு உடையவராக இப்பெண் காணப் பட்டார்.

1970 ஆகஸ்ட் மாதத்தில் அவரை நான் நேரில் சந்தித்தேன். அவர் அணிசேராக் கொள்கை யில் இறுக்கமான பற்று உடையவராகக் காணப்பட்டார். தென் வியட்நாமில் இருந்து அமெரிக்க துருப்புக்கள் யாவும் வெளியேற வேண்டும் என்ற நிலைப்பாட்டை இவர் தலைமை தாங்கிய சிலோன் எடுத்தது. இந்து மாகடல் அணுஆயுதம் இல்லாப் பிராந்திய மாக நிலவவேண்டும் என்பதும் அவருடைய நிலைப்பாடாக இருந்தது. அத்தோடு இப்பிராந் தியம் வல்லரசுகளின் பிரசன்னமற்றதாகவும் இருக்கவேண்டும் என்பதையும் சிலோன் வலி யுறுத்தியது.

இளவயதினனாகிய நான் அவருக்கு மிகவும் பொறுமையாக சிங்கப்பூரின் வெளியுறவுக் கொள்கையை விளக்கிக் கூறினேன். தென் வியட்நாம் வீழ்ச்சியுறும் பட்சத்தில் சிங்கப்பூர் ஆபத்துக்களை எதிர்நோக்கும் என்பதை அவ ருக்கு எடுத்துச் சொன்னேன். லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து போன்ற நாடு களுக்கும் ஆபத்துக்கள் தோன்றலாம் என் பதையும் கூறிவைத்தேன். தூரத்தில் இருந்த வாறு அவர் கடைப்பிடிக்கும் இலட்சியங்கள் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு பயன்தர மாட்டா என்பதை நான் வலியுறுத்தினேன். இப்பிராந்தியத்தில் காணப்படும் சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் காலப்போக்கில் தமது கடற்படையை விரிவுபடுத்தும் என்பதை எமது வெளியுறவுக் கொள்கை எதிர்பார்க்கின்றது.


பிரித்தானியா தலைமையில் இயங்கிய பொது நலவாய நாடுகள் கூட்டமைப்பில் சிலோன் ஒரு உன்னத ஸ்தானத்தை வகித்தது. சுதந்தி ரத்தை நோக்கிய பாதையில் சிலோன் மிகவும் கவனமாக வளர்க்கப்பட்டது. இரண்டாம் உல கப்போர் முடிந்த காலத்தில் 10 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட நடுத்தர நாடாக சிலோன் விளங்கியது. திருப்தி கரமான உயர்தரக் கல்வி வழங்கும் இரு பல்கலைக்கழகங்களும் அங்கு காணப்பட்டன. பொதுவாக சிலோன் மக்கள் நல்ல கல்வியறிவு உள்ளவர்களாக இருந்தனர்.

உள்நாட்டு மக்களைக்கொண்ட நிர்வாக சேவை ஆட்சியாளர்களுக்கு உதவியது. பிரதி நிதித்துவ அரசுமுறை அனுபவம், சுதந்திரம் அடைவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே சிலோன் மக்களுக்குக் கிடைத்துள்ளது. தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் அவர்கள் தேர்தல்களைச் சந்தித்துள்ளனர். 1930களில் மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்கள் அங்கு ஆரம்பித்தன. படிமுறை வளர்ச்சிப்பாதையில் காலடி பதித்து 1948இல் சுதந்திரம் பெற்ற போது பிறநாடுகள் சிலோனை உதாரண மாகப் பின்பற்றும் அளவிற்கு அதனுடைய முன்னேற்றம் காணப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net










-கலாநிதி: க. சோமாஸ்கந்தன்

அந்தோ பரிதாபம் அது சரிவரவில்லை, தவறிவிட்டது. பலதடவை சிலோனுக்கு வந்தபோதெல்லாம் ஒரு முன்னுக்கு வரவேண்டிய நாடு வீணடிக்கப்படுவதை நான் பார்க்க முடிந்தது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற சனநாயகம் ஒரு அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதை நான் கண்ணுற்றேன். எட்டு மில்லியன் சிங்களவர்கள் தமது பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இரண்டு மில்லியன் எண்ணிக்கையிற் குறைந்த தமிழர்களைத் தோற்கடிக்க சனநாயகம் வகைசெய்தது.

அரசகரும மொழியாக ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களம் இருத்தப்பட்டபின் தமிழர்கள் கடும் பின்னடைவைச் சந்தித்தனர். தேசிய மதமாக புத்தமதம் கொண்டுவரப்பட்டதால் இந்துத் தமிழர்கள் கசப்படைந்தனர். ஒக்ரோபர் 1966இல் லண்டனில் நடந்த பிரதம மந்திரிகள் மாநாட்டில் பங்குபற்றிவிட்டு சிங்கப்பூர் திரும்பும் வழியில் கொழும்பு வந்தேன். அப்போது சிலோன் பிரதமராக டட்லி சேனநாயக்கா பதவி வகித்தார். அவர் வயது வந்த மனிதராகவும் வீணில் பழிபோடும் இயல்பு உடையவராகவும் காணப்பட்டார்.



## சிறீலங்காவின் அரசியல் தலைவர்கள் பற்றி சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ தனது நூல் மூலம் கூறியவை.

எனக்குத் தரப்பட்ட இரவு விருந்துபசாரத்தில் சிலோனுக்கு நடந்ததைத் தவிர்க்கமுடியாது என்று ஒரு மூத்த சிங்கள விருந்தினர் எனக்கு விளக்கிக்கூறினார். தேர்தலின் பெறுபேறுகள்தான் இத்தனை குழப்பத்திற்கும் காரணம் என்று அவர் சொன்னார். ஆட்சி செய்யும் இனமாக சிங்களவர்கள் இருக்க விரும்புகிறார்கள். பிரிட்டிசாரின் வாரிசுகளாக மேலாதிக்க நிலையில் இருக்க ஆவலாக உள்ளனர். மூத்த நிர்வாக அதிகாரிகளாக பிரிட்டிசாரின் கீழ் இருந்த தமிழர்களைத் தள்ளிவிட்டு தாமே நிர்வாகஞ்செய்ய ஆர்வமாக உள்ளனர்.

சிங்களத்தை அரசகரும மொழியாக்கி அவர்கள் படும் துன்பத்தை என்னால் உணரமுடிகின்றது. இதற்கு அவர்கள் கொடுக்கும் விலை மிகப்பெரியது. பாடநூல்கள், நிர்வாக விதிமுறைகள், கோப்புக்கள் போன்றவற்றை ஆங்கிலத்தில் இருந்து சிங்களம், தமிழ் ஆகியவற்றிற்கு மொழிமாற்றம் செய்கிறார்கள். இதற்கு அவர்கள் செலவிடும் நேரமும், பணமும் வீண்விரயமாக்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களில் மூன்று மொழிகளிலும் பாடம் நடத்துகின்றார்கள்.

சிங்களவர்களுக்குச் சிங்களம், தமிழர்களுக்குத் தமிழ், பறங்கியவர்களுக்கு ஆங்கிலம். பெரதேனியா பல்கலைக்கழக உபவேந்தரை நான் இப்படிக்கேட்டேன்; மும்மொழியில் பயிற்றப்பட்ட பெருந்தெருப் பொறியியலாளர்கள் இணைந்து எப்படி ஒரு மேம்பாலத்தைக் கட்டி முடிப்பார்கள்? அந்த உபவேந்தர் ஒரு பறங்கி இனத்தவர். தான் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் சென்று கலாநிதிப்பட்டம் பெற்றதற்கு அத்தாட்சியாகக் கழுத்துப்பட்டி அணிந்திருந்தார்.

'ஐயா, நீங்கள் கேட்டது ஒரு அரசியல் கேள்வி, அதற்கு அமைச்சர்கள்தான் பதில் கூற வேண்டும்' என்று அவர் எனக்குப் பதிலளித்தார். நான் பாடப்புத்தகங்கள் பற்றியும் கேட்டேன். ஆங்கிலப் பாடநூல்கள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரமாகும்போது காலதாமதமாகிவிடும். இதனால் தமிழ், சிங்களப் பாடநூல்களில் பல குறைபாடுகள் தோன்றும். ஆங்கில நூல்கள் புதிதாகத் தோன்றும் வேகத்திற்கு ஈடாக மொழிமாற்ற நூல்கள் தோன்றும் வாய்ப்புக்கள் இல்லை. இதனால் கல்வி திருப்திகரமாக அமையாது. இவ்வாறு கூறிய என்னை அவர் மறுத்துரைக்கவில்லை.

தேயிலைத் தோட்டங்களும் படுமோசமான நிலையில் இருந்தன. பிரிட்டிசார் மேற்பார்வை செய்வதற்கும், உள்ளூர் வாசிகள் மேற்பார்வை செய்வதற்கும் இடையில் நிறைய வித்தியாசம். உள்ளூர் மேற்பார்வையாளர்கள் திறமை போதாதவர்கள். இறுக்கமான மேற்பார்வையும் கட்டுப்பாடும் இல்லாத குறையால் முற்றிய இலைகளும் பறிக்கப்படுகின்றன. இதனால் சிலோன் தேயிலையின் தரம் கெடுகின்றது.

அவர்களுடைய தென்னந்தோட்டங்களுக்கும் இதே கதி ஏற்பட்டுள்ளது. நிர்வாகம் செய்து பழக விலை கொடுக்கவேண்டும். கொடுக்கும் விலை பயன்தரவேண்டும். வீண்விரயமாக அமையும்போது நிர்வாகம் பாழ்படும்.

நான் பல வருடங்களாக சிலோன் வரும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போது சிறீலங்கா என்று அழைக்கப்படும் இந்த நாட்டின் புதிய பிரதமரை சிட்னி நகரில் நடைபெற்ற பிரிட்டிஸ் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் சந்தித்தேன். புதிய பிரதமரின் பெயர் ஜூனியஸ் றிச்சாட் ஜெயவர்த்தனா. அவருக்கு முந்திய பிரதமர் திருமதி.பண்டாரநாயக்கா, நாட்டின் பெயர் மாற்றத்தைச் செய்ததோடு நாட்டை குடியரசாகவும் மாற்றியிருந்தார். இதனால் ஏதேனும் நன்மை கிடைத்ததாக எனக்குத் தெரியவில்லை. இப்போதும் இந்தநாட்டின் தேயிலை 'சிலோன் தேயிலை' என்றுதான் அழைக்கப்படுகின்றது.

சொலமன் வெஸ்ற்றிஜ்வே பண்டாரநாயக்காவைப் போல் ஜெயவர்த்தனாவும் கிறீஸ்தவராகப் பிறந்து புத்த மதத்திற்கு மாறியவர். பண்டாரநாயக்காவைப் போன்று இவரும் மக்கள் தலைமையைப் பெறுவதற்காக சுதேசி வேடம் தரித்தவர். தனது எழுபது வருட வாழ்வில் பல அரசியல் ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்தவர். பார்க்கப்போனால் தாழ்வுகள்தான் கூடியவை தோல்விகளுக்கு விளக்கம் கற்பிப்பது போல் இவர் தத்துவம் பேசுவார்.

சிறீலங்கா கடைப்பிடித்த பேச்சுவார்த்தையைக் கைவிடவும் புதிய பாதையைத் திறக்கவும் அவர் விருப்பங்காட்டினார். சோசலிசம் நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டது என்பது அவருடைய கருத்து, என்னைச் சிட்னியில் சந்தித்தபின் சிங்கப்பூரில் என்னை வந்து சந்தித்தார். சிறீலங்காவின் மேம்பாட்டிற்கு சிங்கப்பூரின் ஒத்துழைப்பை என்னிடம் அவர் வேண்டினார்.

அவருடை யோசனைகளின் அனுகூலத்தை நான் மெச்சினேன். இதன் காரணமாக ஏப்ரல் 1978இல் நான் சிறீலங்காவுக்கு ஒரு விஜயம் மேற்கொண்டேன். தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்கப்போவதாக அவர் எனக்குச் சென்னார். சிங்களவர்களின் மேலாதிக்கத்தை அவர் தமிழர்களுக்கு விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதை அப்போது நான் உணரவில்லை. இதுதான் 1983ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப் போருக்கு முக்கிய காரணம். பல வருடங்களுக்கு சிறீலங்காவின் செழிப்பை அது தள்ளிப்போட்டது.

அவருக்குச் சில பலவீனங்கள் இருந்தன. அவர் ஒரு பயணிகள் விமான சேவையை சிறீலங்காவில் ஆரம்பிக்க ஆசைப்பட்டார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# அறப்போர் தொடுத்த அன்னை பூபதி



"சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப்பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்" என்ற தேசியத் தலைவரின் உள்ளத்துச் சிந்தனையின் ஊற்றுக்கண்ணாய் அமைந்தவள் அன்னை பூபதி.

ஆயுதப் போரிலும் அறப் போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகிறது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது. அகிம்சையும் அறமும் போதித்த பாரதத்தில் இருந்து வந்த படைகள் ஆக்கிரமிப்புப் படைகளாக எமது மண்ணில் அன்று காலடி எடுத்து வைத்தன. சிறீலங்காவின் ஆளும் சிங்கள அரசுகள் இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கின. சிறீலங்கா அரசுகளின் ஏதேச்சதிகாரப் போக்கின் விளைவாக எழுச்சி கொண்ட தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்கள் கேலிக்குரியதாகிய பொழுது, கேட்டது கிடைக்கவில்லையெனில் தட்டித்தானே பெற்றுக் கொள்ளவேண்டும். உரிமை மீட்புக்காய் தமிழீழத்தின் விடியலுக்காய் சத்திய யுத்தம் ஆரம்பமாகியது. விடுதலைப் போர் உச்சக்கட்டத்திலிருந்த வேளை, "தமிழருக்காக நாம்" என்று கூறிய இந்திய அரசு சிறீலங்கா வுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துவிட்டு எம் தாயகத்தில் படைப்பிரவேசம் செய்தது.

ஆதிபத்திய நோக்கில் வந்த இந்தியா, சிறீலங்காவுடன் சேர்ந்து எம்மையும், எமது உரிமைப் போரையும் இல்லாதொழிக்க முற்பட்ட சமயம் எதிர்த்தோம். அன்னையர் உட்பட தமிழீழ மக்கள் அனைவரும் போர்க்குரல் செய்தனர்.

யுத்தமுறை கெட்டிருந்த இந்தியப்படை போர்நிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சில் ஈடுபட வேண்டும் எனக் கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் அன்னை பூபதி அவர்கள் உண்ணாவிரதப் போரில் குதித்தார். 19.03.1988 சனிக் கிழமை அன்று மட்டக்களப்பு எழுவானில் காலைக்கதிரவன் தியாகச் செம்மையுடன் உதய மாகிறான். இதிகாசப் புகழ் பூத்த அமிர்தகழி சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்தமர நிழலின் கீழ் காலை 10.45ற்கு அன்னை தியாக வேள்வியை ஆரம்பித்தார். மக்களின் உணர்வுப் பிரவாகம் வானை அதிரவைக்கிறது. தம் புதல்வர்கள் நடத்தும் உரிமைப் போரிற்கு தோள் கொடுக்கும் இறுமாப்போடு அன்னையர் மத்தியில் ஒரு பெருமிதம்.

இந்தியப் படைகளதும் அதன் ஒட்டுக்குழுக்களினதும் அட்டகாச ரோந்துகளும், சாப்பய முறுத்தல்களும் வெள்ளம்போல் திரண்டு நின்ற தமிழர் முன் செல்லாக்காசாகின.

"எம்மைப் பாதுகாக்கவென வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டி லும் கொடியவர்களாகவே மாறிவிட்டனர். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம்




தொடர்ச்சி மொழிபெயர்ப்புக் கட்டுரை

## சனநாயகம்

### தமிழர் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியது

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்த நாட்டின் பயணிகள் விமானசேவை அடையாளமாக அமையும் என்பது அவருடைய எண்ணம். அண்மையில் வெளிவந்த 'போச்சூன்' சஞ்சிகை இதழின்படி உலகின் தலைசிறந்த விமான சேவை என்ற சிறப்பு விருதை சிங்கப்பூர் விமான சேவை பெறுகின்றது.

சிங்கப்பூர் விமானசேவையில் ஒரு சிறீலங் கா தமிழர், கப்டன்தர விமான ஓட்டியாகப் பதவி வகித்தார். இவரைத் தனக்குத் தந்துதவுமாறு ஜெயவர்த்தனா வேண்டினார். நான் அதற்கு ஒத்துக்கொண்டேன்.ஆனால்,விமான ஓட்டியால் எப்படி ஒரு விமானசேவையை உருவாக்கி நடத்தமுடியும்? எனினும் சிறீலங்காவுக்கு உதவ நாம் தயாரானோம். விமானசேவையைத் தொடங்கி நடத்துவதுதான் சிறீலங்காவின் முக்கிய மேம்பாட்டுத் திட்டமாக எண்ணக் கூடாது என்று நான் அவருக்கு வலியுறுத்தி னேன்.

விமானசேவைக்கு ஒதுக்கப்படும் நிதியை விவசாயம், நீர்ப்பாசனம், வீடமைப்பு, தொழிற் பெருக்கம் இத்தியாதிகளுக்கு நல்ல எதிர்பார்ப் புக்களோடு செலவிடலாம் என்று நான் அவருக்குச் சொன்னேன். விமானசேவை ஒரு கவர்ச்சியான திட்டம். அதனுடைய வருவாய் நிட்சயம் இல்லை. நிர்வாகத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். சிறீலங்கா வின் மேம்பாடு விமானசேவையைத் தொடங்கு வதால் கிடைக்கப்போவதில்லை. இதையெல் லாம் அவர் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

சிறீலங்கா விமானசேவையைத் தொடங்கு வதற்கு வேண்டிய உதவிகளை நாம் வழங்கி னோம். இரு மாதம் தொடக்கம் இரு வருடம் வரையிலான சேவைக் காலத்திற்கு நாம் எண்பது சிங்கப்பூர் விமானசேவைப் பணி யாளர்களைக் கொடுத்துதவினோம். உலக ளாவிய எமது விற்பனை முகவர்கள் சிறீலங் காவுக்கு உதவினார்கள். வெளிநாடுகளில் அலுவலகங்கள் திறப்பதற்கும் நாம் உதவி னோம். பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் பயிற்சி நிலையங்களைத் திறப்பதற்கும் நம் மால் இயன்றளவு செய்தோம்.

அதியுயர் மட்டத்தில் நிர்வாகக் கட்டமைப்பு சரியாக அமையவில்லை. நான் கொடுத்த விமானமோட்டி இப்போது சிறீலங்கா விமான சேவையின் தலைவராகிவிட்டார். எமது ஆலோ சனைக்கு முரணாக அவர் இரு பழைய விமானங்களை வாங்குவதற்கு தீர்மானித்தார். அத்தோடு, நாங்கள் வெளியேறத் தீர்மானித் தோம். திடீர் விரிவாக்கம், வருவாய் வறட்சி, நன்கு பயிற்றப்பட்ட பணியாளர் தட்டுப்பாடு, நம்பிக்கையற்ற பறப்பு நேர அட்டவணை, பயணிகள் ஆதரவின்மை என்ற ஐந்து காரணங் களுக்காக சிறீலங்கா விமானசேவை தோல்வி யைச் சந்தித்தது.

சிங்கப்பூரைப் போன்ற நாடாகவேண்டும் என்ற குறிக்கோளுடன் அந்த நேர காலத்தில் சிறீலங்கா திட்டமிட்டது. இது எமக்குப்பெரு மையைத் தந்தது. சிங்கப்பூரின் வீட்டுத்திட்டம் போன்றதொன்றை (1982) இல் ஆரம்பித் தார்கள். ஆனால், அதற்கு நிதி ஒதுக்கீடு போதாது, சிங்கப்பூர் நிலப்பரப்பிலும் பார்க்க சற்றுச் சிறிய பிரதேசத்தில் ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தைத் திறந்தார்கள். தமிழ்ப் புலிகளின் நடவடிக்கைகளால் முதலீட்டாளர் கள் விரட்டப்பட்டனர். அதன் காரணமாக சுதந் திர வர்த்தக வலயம் மேலெழும்ப மறுத்தது.

காணிப் பங்கீட்டில்தான் ஜெயவர்த்தனா தனது மிகப்பெரிய தவறைவிட்டார். சிறீலங் காவின் வறண்ட பிரதேசங்களில் வெளிநாட்டு உதவியுடன் அவர் காணி நிலங்களை மீட் டெடுத்தார். பழைய நீர்ப்பாசனத் திட்டங் களைப் புதுப்பித்தார். மலைநாட்டிலிருந்து வரும் நதி நீரைச் சேமிக்கும் குளங்களைத் திருத்தினார். ஆனால், இப்பிரதேசத்தில் நெடு நாட்களாக வாழ்ந்த தமிழர்களை ஓரங்கட்டிய படி சிங்கள இனத்தவர்களுக்கு மாத்திரம் மீட்டெடுத்த நிலத்தை பங்கிட்டு வழங்கினார்.

பாரம்பரிய நிலத்தை இழந்த தமிழர்கள் தமது முழு ஆதரவை தமிழ்ப் புலிகளுக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net


இப்போரில் இறங்கியுள்ளோம். வீரச்சாவுகளைக் கண்டு நாம் பழகிப் போன வர்களே! என் இறப்பை அடுத்தும் நோக்கை அடைவோம். ஒருபோதும் அன்னையர் முன்னணி தளராது" என்று உணர்வுவீச்சோடு அன்னை பூபதி சங்கநாதம் செய்தார்.

தியாதீபம் திலீபனின் வழியில் அன்னை பூபதி நடத்திய அறப்போருக்கு தமிழீழ மக்கள்சமூகமே திரண்டு நின்றது. "எம் தாயகத்தை சுடுகாடாக்கி, எம்மவரைக் கொன்றொழித்த பாதகனே எம் நிலத்தை விட்டுப் போ!" என்று ஓங்கிக் குரல் கொடுத்தது. 31 நாட்களாக அறப்போர் நடத்தினார் அன்னை. 19.04.1988 அன்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு அன்னையின் உயிர் பிரிந்தபோது தமிழீழமே கதறியது.

இலட்சியவீரர்கள் சாவதும் கிடையாது, அவர்தம் இலட்சியம் மடிவதும் கிடையாது. எந்த இராணுவம் வெளியேற வேண்டுமென அன்னை சத்தியப் போரை மூட்டினாரோ அந்த ராஜீவ் காந்தியின் இராணுவம் பெருத்த அவமானத்தோடும், பலத்த இழப்புக்களோடும் 24.03.1990 அன்று வெளியேறியது. தமிழீழப் போருக்கு உயிர் கொடுத்த அன்னை தமிழீழத் தாயாகி எம் மண்ணில் என்றும் போற்றப்படுவார்.

அன்னை பூபதி, தமிழீழ விடுதலைப் பாரம்பரியம் என்றும் நினைவில் வைத்திருக்கும் நாமம். தமிழீழப் பரம்பரைக்கு வீரத் தாய்க்குலத்தை என்றென்றும் நினை வூட்டிக் கொண்டிருக்க வேண்டிய சொல் அது.

தமிழீழ விடுதலைக் கனலை வேரோடு கருவறுக்க வந்த ராஜீவினது படைகள் ஒரு புறம், தமிழீழப் பிறப்பை கனவிலும் காண மறுத்த சிறீலங்காவின் மிலேச்ச இராணுவம் மறுபுறம். இடையில் ஒட்டுக்குழுக்கள் வேறு என தமிழீழம் கயவர்களால் திணறிய வேளையில் அஞ்சாது அறப்போர் நடத்தினாள் அன்னை பூபதி. இன்று தமிழீழத் தேசப்பற்றாளர்களுக் கெல்லாம் சிகரமாய் அமைந்தனள்.

"சுதந்திரத் தாய்நாட்டைப் பெற ஒவ்வொரு தாயும் போராடுகின்றாள். மலரும் தமிழீழத்தில் நம் குழந்தைகள் இனிதாய் வாழப் போகின்றன" என்ற அன்னை பூபதியின் வழியில் இன்று தாயக விடியலுக்காய் ஆயிரமாயிரம் அன்னையர் எல்லைப் படைகளாக, கிராமியப் படைகளாக அணி திரள்கின்ற காலம் இக்காலம். அன்னை பூபதியின் 13ஆம் ஆண்டு நினைவில் நீக்கமற நிறைந்து நீதியின் வழியில் விடியலை நோக்கி விரைவோம்.



22.04.2001 இல் ஜேர்மனி சுக்காட் நகரில் அன்னை பூபதியின் 13ஆம் ஆண்டு நினைவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியின்போது 800க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.




வழங்கினர் ஜெயவர்த்தனாவின் அந்தரங்கச் செயலாளரான ஒரு யாழ்ப்பாணத் தமிழரை ஒருமுறை சந்தித்தேன். காணிப் பங்கீடு மிகவும் பாரதூரமான தவறு என்று ஜெயவர்த்தனாவுக்கு விசுவாசமான இந்த மனிதர் எனக்குக் கூறினார். தொடர்ந்து நடைபெறும் போரில் 50,000 வரையிலானோர் கொல்லப்பட்டுள்ளனர். பதினைந்து வருடம் சென்றபின்பும் போர் ஓய்வதாகத்தெரியவில்லை.

மிகவும் களைத்துப்போன நிலையில் ஜெயவர்த்தனா 1988இல் தானாகவே பதவி விலகினார். இவருடைய இடத்திற்கு வந்த றணசிங்க பிரேமதாசா ஒரு சிங்களப் பேரினவாதி. இவர் இந்தியத் துருப்புக்களை வெளியேறும்படி பணித்தார். அது அவ்வளவு புத்திசாலித்தனமானதல்ல. சிறீலங்காவுக்காக அவர்கள் மிகவும் கேவலமானதொரு வேலையைச் செய்துகொண்டிருந்தனர். இந்தியத் துருப்புக்கள் வெளியேறியபின் அவருடைய நிலை மோசமடைந்தது. அவர் தமிழ்ப் புலிகளுடன் நடாத்திய சமரசப் பேச்சுக்கள் தோல்வி கண்டன. அவரும் மிகவும் குறைந்தளவு உரிமைகளையே கொடுக்கத் தயாராக இருந்தார்.

அவர் சிங்கப்பூருக்கு வரும்போது பலமுறை சந்தித்துள்ளேன். போர், சிறீலங்காவின் பிணக்கை முடிவுக்குக்கொண்டுவராது என்று பிரேமதாசாவுடன் வாதிட்டேன். அரசியல் தீர்வு ஒன்றுதான் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு திருப்தியளிக்கும் என்று அவரிடம் சொன்னேன். தன்னாட்சி கோரிப் போரிட்ட மிதவாத தமிழ்க் கூட்டணிக்கும் முழு உலகிற்கும் நியாயமான அரசியல் தீர்வு ஏற்புடையதாகும் என்றும், அவருக்கு இடித்துரைத்தேன். உங்களுடைய குறிக்கோள் தமிழ் 'பயங்கரவாதிகளுக்கு' தமிழ் மக்கள் அளிக்கும் ஆதரவை இல்லாதொழிப்பதாக இருக்கவேண்டும். இதற்கு தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்குவதே சிறந்த உபாயம் என்று நான் அவருடன் வாதிட்டேன்.

பிடித்த சந்திரிகா குமாரதுங்கா பேச்சுவார்த்தையையும் போரையும் அடுத்தடுத்துக் கைக்கொண்டார். யாழ் தீபகற்பத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார். ஆனால், அவரால் தமிழ்ப் புலிகளை அழிக்கமுடியவில்லை. போர் தொடர்கின்றது. அமைதிக்கும், போதுமென்ற மன நிலைக்கும் 'செறெண்டிப்பிற்றி' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சிலோனின் புராதன காலப் பெயரான 'செறெண்டிப்' என்பதில் இருந்து செறெண்டிப்பிற்றி பிறந்தது. இத்தனை

## "பாரம்பரிய நிலத்தை இழந்த தமிழர்கள் தமது முழு ஆதரவை தமிழ்ப்புலிகளுக்கு வழங்கினர்"

தமிழ்ப்புலிகளைத் தன்னால் அழிக்க முடியும் என்று அவர் முழுமூச்சாக நம்பினார். 1991, 1992இல் பெரும் படையணிகளை அவர் புலிகளுக்கு எதிராக அனுப்பினார். அவருக்கு வெற்றிகிடைக்கவில்லை. 1993இல் பெரும் படையணிகளை அவர் புலிகளுக்கு எதிராக அனுப்பினார். அவருக்கு அதிலும் வெற்றி கிடைக்கவில்லை. 1993இல் மேதின ஊர்வலத்தில் ஒரு தற்கொடை குண்டுதாரி அவருக்கு முடிவுகட்டினார். இன்னும் பலர் அப்போது இறந்தனர்.

பிரேமதாசாவுக்குப் பின் அதிபர் பதவியைப்

சிறப்புவாய்ந்த இந்தத் தீவு துன்பத்திற்கும் இடைவிடாத போருக்கும் இருப்பிடமாக இருப்பதைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

**சென்ற வருடம் (2000) சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான் யூ வெளியிட்ட 'மூன்றாம் உலகில் இருந்து முதலாம் உலகிற்கு சிங்கப்பூரின் கதை 1956-2000' என்ற நூலில் இருந்து இலங்கை பற்றிய விடயங்களைத் திரட்டி தமிழாக்கம் செய்யப்பட்டது.**


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டாவது கோலம்

'தம்பி!' தம்பி சிவம் எழும்படா.... நேரம் போச்சுதெல்லே. வெள்ளணக்கப் போனால் அத ஏத்திக்குடுத்திட்டு வேலைக்கு வரலா மெல்லே. வா வா, வண்டில்ல மாடு பூட்டி யாச்சிது. இனி அதுகள் நில்லாதுகள்' நித்தி ரைக் கலக்கத்தில் மாடுகள் காலடிப்பதும் 'சிலுங்...சிலுங்' என்று சலங்கைச் சத்தமும் அப்புவின் குரலையும் மீறிக்கேட்டது. படுக் கையைவிட்டு எழும்பி ஒண்டுக்கிருப்ப தற்காய் வீட்டின் பின்புறம் போனேன். குளிரடித்தது, வெளியெங்கும் பனி மூடிக் கிடந்தது. பக்கத்தில் இருந்த சீலனின் வீடுகூடத் தெரியாமல் நீலமும் சாம்பலும் கலந்த நிறத்தில் பனியின் சுவறல்.

காற்சட்டை இழகுவதாய்த் தெரிந்தது! அவிழ்த்து உடுத்துக் கொண்டேன். குளிரில் உடல் உலுங்கியது. இரு கைகளையும் நெஞ் சுக்குக் குறுக்காய் தோள்மீது போட்டுக் கொண்டேன். அப்பு வண்டிலின் இருக்கை யில் அமர்ந்தபடி மாட்டின் இரு கயிற்றை யும் பிடித்துக் காலுக்குள் வைத்தவாறு வெற்றிலைப் பையை அவிழ்த்து பாக்குப்புள குகளை வாயில் எறிந்தவாறிருந்தார். இனித் தாமதிக்கமுடியாது மாடுகளை மறித்தாலும் அப்புவை ஒரு நிமிசமும் சுணக்கேலாது.

வேலியோரமாய் நின்றிருந்த பனைக்கடி யில் ஒண்டுக்கிருக்கையில் கிளுவை இலை களிலிருந்து பனித்துளி சொட்டியது. 'சிவம்!... ஏனப்பு, ஐயா எல்லே காத்துக்கொண்டு நிக்கிறார். கெதியாய் முகத்தைக்கழுவிக் கொண்டு தேத்தண்ணியக் குடிச்சிட்டுப் போவன்' குசினிக்குள் இருந்து அம்மாவின் குரல் அமுங்கலாய் ஒலித்தது. தொட்டியில் இருந்த தண்ணீரில் முகத்தைக் கழுவிய போது சிலீரிட்டது. துடைத்த பாதி துடையாத பாதியாய் சேட்டை மாட்டிக்கொண்டு வெளி யில் வரும்போது அம்மா தேநீரோடு வந்தாள். மளமளவென்று குடித்துவிட்டு ஓட, வண்டில் வாசல் தாண்டி தெருவுக்குச் சென்றிருந்தது. ஓடிப்போய் தொற்றிக்கொண்டேன். சேட் காற்றில் பறந்தது. ஒருகையால் தட்டியைப் பிடித்துக்கொண்டு மறுகையால் சேட் தெறி யைப் பூட்டிக்கொண்டேன். 'பிற்பாரமாய்க் கிடக்கு உள்ள இருமோன' பின் துலாவில் இருந்த என்னைப்பார்த்து அப்பு கூறினார்.

எழும்பி சைற் தட்டியில் பிடித்தவாறு நின்றேன். மாடுகள் இரண்டும் தலையை ஆட்டியவாறு மெல்லோட்டத்தில் போயின. 'சிலுங் சிலுங்' என்று சலங்கைகள் மாடு களின் குளம்புச் சத்தத்திற்குச் சுதி சேர்த் தன. 'ஹெய்... ஹெய்' என்றவாறு அப்பு தடியை அசைத்தார். அப்பு தடிவைத்திருப் பாரே தவிர மாடுகளுக்கு அடிக்கவே மாட்டார். 'ஏன் அப்பு' என்றால் 'வாயில்லா ஜீவராசிகளுக்கு அடிக்கக்கூடாது' என்பார்.

கற்சிலைமடுக் கிரவல் வீதியில் வண்டில் இறங்கியபோது தெருவோர மரங்கள் பனியில் விறைத்துப்போய் நின்றன. மரங்களின் இளம் பச்சைக் கிளைகளினூடாக மென்நீல ஒளிக் கதிர்கள் தெருவெங்கும் படர்ந்திருந்தன. அப்பு வோடு இந்தத் தெருக்களில் எத்தனையோ தடவைகள் போயிருக்கின்றேன். ஆனால், எப் போதுமே இவ்வாறு இருந்ததில்லை. பசுந்தளிர்க் கொடிகள் படர்ந்த கரைகளில் செம்பூக்கள் இறைந்து போய்க்கிடந்தன. சிலு சிலுவென்று வாய்க்காலில் தண்ணீர் ஓடியது. இடை யிடையே துருத்திக்கொண்டு நிற்கும் கற்பாறை களைப் பார்க்கும்போது, குளிக்கும் யானைக் குட்டிகள் போல் தெரிந்தன. அவற்றைச் சுற்றித் தண்ணீர் சுழித்துக்கொண்டு பாய்ந்தது. வண் டில் சிலையடி தாண்டிப்போனது. எப்போது அந்தச் சிலையைக் கடக்க நேரிடுகிறதோ அப்போதெல்லாம் முதன்முதலில் சிலையடி யால் போகும்போது அப்பு கூறியது ஞாப கத்துக்கு வரும். 'தம்பி! இந்தச் சிலை எதுக்கு நாட்டியிருக்குத் தெரியுமே?' 'இல்லையப்பு'

'வெள்ளைக்காறன் பண்டாரவன்னியனைத் தோற்கடிச்ச இடமாம். தங்களிட்ட அவன் தோத் துப் போனத வெள்ளைக்காறன் பெருமையாய் நினைச்சு நாட்டின கல்லுத்தான் தம்பி இது' அப்புவின் குரல் தாழ்ந்து ஒலித்ததை அவ தானித்தேன். ஆனாலும், அந்த நாளையில அவயளுக்கு அவனும் அவன்ர இந்த மண் ணும் லேசில வளையேல்ல' ஒருவித கம்பீரம் தொனிக்க அப்பு கூறியதன் தார்ப்பரியம் விளங் காமல் 'ம்... ம்' என்று சிலையைப் பார்த் தவாறே வந்தேன். சிலை தாண்டி நெடு நேர மாகியும் அப்போது அந்த ஆங்கில வாசகங் கள் பொறிக்கப்பட்ட வளைந்த எவ்வளவு உயரமான சிலை கண்களுக்குள் நின்றது.

பின்னொருநாள் பள்ளிக்கூடத்தில் அழகியல் பாடவேளைக்கு 'விரும்பிய படம் கீறுங்கோ' என்று வஸந்தா ரீச்சர் சொன்னபோது, சித் திரக் கொப்பியில் நான் அந்தக் கற்சிலையை வரைந்து வர்ணம் தீட்டிக்காட்டினேன். எனக்கு முதுகில் தட்டிப் பாராட்டி 'எல்லோரும் சிவத் தின்ர கொப்பியப் பாருங்கோ' என்று கொப்பி யைத் தூக்கிச் சுற்றிக் காட்டினார். எல்லோரும் ஆவென்று கொப்பியைப் பார்க்க எனக்குப் பெருமிதமாக இருந்தது! சீலனும் தன்ர கொப் பியைத் தந்து தனக்கும் அது மாதிரிக் கீறித் தரச் சொன்னான். இரண்டு விலாட் மாங்காய்க்கு ஒப்புக்கொண்டேன்.

'இந்தமுறை சிறுபோகத்துக்குத் தண்ணி பறவாயில்ல. கெருடமடுத் தறையெல்லாம் விதைக்கலாம்' அப்பு கூறினார். 'ம்' என்றேன். 'என்ன சின்ராசு எப்பிடி உழவு முடிஞ்சுதே?' வண் டிலை முந்திக்கொண்டுபோன சைக்கிளில் இருந்தவரைப் பார்த்து அப்பு கேட்டார். 'ஓமப்பு... நேற்று விதைப்பு முடிஞ்சிது, இண்டைக்கு மூல கொத்துவம் எண்டிட்டுப் போறன்' என்றார். தோளில் மண்வெட்டி கிடந்தது. புல்கை சேட்டும் சாரமுமாய் முத்தையன்கட்டுப் பக்கமிருந்து செல்வம் மாமா பால் கேனுடன் வந்தார். எங் களைக் கண்டும் காணாதது மாதிரிப் போனார். தலையில் பனிக்குக்கட்டிய துவாய்த் தலைப்பு பிடரியில் தொங்கியது. சரிந்த கழுத்திற்கும் தோளுக்குமிடையில் 'சொட்கண்' இருந்தது. சைக்கிள் கரியலில் சாக்குப்பை நிறைய மிள காயாக இருக்கவேண்டும், பின்னால் அமத்தியது. ஊரில் வசதியான குடும்பங் களில் செல்வம் மாமாவும் ஒருவர். ஒட்டுசுட்டா னிலேயே பெரியவீடு அவருடையது. பசு மாடும், எருமைமாடும் முந்நூறுக்குமேல வரும். பத்துப் பதினைஞ்சு போத்தல் பால் கறக்கிற உயர்ந்த சாதிமாட்டை முதலில் ஊருக்குக் கொண்டு வந்தவரும் அவர்தான். அவர் அதை முதன்முதலில் கொண்டுவரும்போது 'உவனு க்கு ஆச கூடிப்போச்சு எதிலதான் ஆசயில்ல' எனக் கூடிக்கூடிக் கதைத்தது சனம்.

அவருக்கு என்னதான் சொத்து சுகம் இருந் தாலும் மனசில தீராத துக்கத்தை அவருடைய ஒரே மகள் ஏற்படுத்தி இருந்தாள். தன்னு டைய வசதிக்கு டொக்ரரோ, எஞ்சினியரோ ஒருத்தனத்தான் மருமகனாகக் கொண்டு வாறதெண்டு பெருமையடித்துக் கொண்டிருந் தவருக்கு சிவன்கோவில் திருவிழா ஒன்றில் அவரோட வேலைக்கு நின்ற பொடியனே அவ ளைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போனது பெரிய அவமானத்தைக் கொடுத்தது. சில நாட்கள் ஊரெல்லாம் அதே பேச்சாயிருந்தது. அவர் களைத் தேடி செல்வம் மாமா சொட்கண்ணும் கையுமாக அலைந்தார். கண்ட இடத்தில் சுட்டுத் தள்ளுவதாய்க் கூறித் திரிந்தவருக்கு அவர்கள் அகப்படவேயில்லை.

அநேகம் பேருக்கு ஏகப்பட்ட சந்தோசம். 'உவற்ற லெவலுக்கு உவள் செய்ததுதான் சரி' என்றார்கள். மாமாவுக்குப் பணம் இருந்தது. கூடவே மனசில அழுக்கும் நிறைந்துபோய்க் கிடந்தது. பட்டிக்குடியிருப் புக்கு அந்த நாளையில வண்டிலுக்கு வடக்கன் மாடு வாங்கவென்று போன அப்பாவை மருதோடையில வைச்சு இராணுவம் வெட்டிய தாம். தவ்வலாய் இருந்த என்னைக் கட்டிப் பிடித்து அம்மாவைத்த அலறல் ஏதோ கனவு கண்டது மாதிரி இன்றைக்கும் ஞாபகங் களில்.... அப்பா செத்துப் போனதுக்குப் பிறகு அம்மா எப்போதும் அமைதியாய் திரிந்தாள். எதிலுமே அம்மாவுக்குப் பிடிப்பற்றுப்போனது. அப்பா இருந்தபோது இப்படியா அம்மா இருந்தாள். இதென்ன கோலம்... கண்கள் குழிவிழுந்து கன்னங்கள் ஒடுங்கி தலையில் நரைகண்டு கைகால்கள் மெலிந்து... பேத்த மாதிரி... ஐயோ.

அப்பா போனபிறகு அம்மாவுக்கென்று இருந்த வயல்க்காணியையும் அப்பாவுக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# முல்லைக்கோணேஸ்

www.tamilanangam.net

சாராயம் வாங்கிக் குடுத்து மாமா தன் பேருக்கு எழுதி வாங்கி விட்டாராம். அப்பு அதற்காகப் பின்னாளில் வருந்தாத நாட்களே கிடையாது. 'அவன் என்ர புள்ளயே இல்ல. அந்தப் புருசனில்லாதவளின்ர காணிய இப்பிடிப் பேக்காட்டி, எழுதுவிச்சுப்போட்டானே எளிய பாழ்படுவான்' என்று திட்டுவதை நான் ஏராளமான நாட்களில் கேட்டிருக்கின்றேன். 'பிள்ள! நீ ஒண்டுக்கும் கவலப்படாத உன்ர குஞ்சு உருப்படுமட்டும் நானுனக்குச் சோறு போடுறன்' என்று அப்போது அம்மாவுக்கு வாக்குக் கொடுத்தவர்தான், அதன்பிறகு அப்பா ஏறிய வண்டிலில் அப்பு ஏறினார். ஊரூராய் வண்டிலில் லோட் ஏற்றித் திரிந்தார். அளம்பிலில் இருந்து முள்ளியவளைக்குத் தென்னோலை ஏற்றினார். கூழாமுறிப்பில் இருந்து கற்சிலைமடு வரைக்கும் காட்டுத்தடி ஏற்றினார். சொல்லிவிடுவோருக்கு மன்னார்க்கண்டல் பக்கமிருந்து வைக்கோல் ஏற்றிக்கொடுத்தார். தேங்காய் பொச்சோடு பறித்தார்.

அப்பு தனியாக வண்டிலில் ஏறிப்போகும் போது பார்க்கப் பாவமாக இருக்கும். ஒரு நாள் அம்மாவிடம் தயங்கித் தயங்கிக்கேட்டேன். 'அம்மா அப்புவோட நானும் போறனம்மா' 'ஏன் ராசா?' 'அப்பு தனியப் போகும் போது பாக்கப் பாவமாக இருக்கு. நானும் கூடப்போனால் அவருக்கு உதவியாய் இருக்குமெல்லே' அம்மாவுக்கு அழுகை வந்தது. அந்தக்கணத்தில் அவள் அப்பாவை நினைத்திருப்பாள்போல. கண்கள் கலங்க என்னை ஒரு ஏக்கப் பெருமூச்சோடு பார்த்தாள்.

'கவனமாய்ப் போ ராசா. லோட் ஏத்தின பிறகு மேல அவதானமாய் இருக்கவேணும்' அதன்பிறகு அப்புவோடு வண்டிலில் நானும் போகத்தொடங்கினேன். முதலில் பள்ளிக்கூட விடுமுறைகளில்தான் கிளம்பினேன். போகப் போகப் பள்ளிக்கூடமே மறந்துபோனது. படிப்பைக்குழப்ப வேண்டாமென்று அம்மாவும் அப்புவும் இயலுமட்டும் சொல்லிப் பார்த்தார்கள். நான் அசைவதாய் இல்லை. கூடப்படிச்சவங்கள் எல்லாம் தெருவில் வெள்ளச் சீருடையோடு போகும்போது நான் மட்டும் அப்புவோட வண்டிலில் இருக்க ஆரம்பத்தில் வெட்கமாகத்தானிருந்தது. நாட்கள் நகர அதுவே பழகிப்போய்விட்டது.

போன தடவை அப்புவோட வலதுகரையில் இருந்து கற்சிலைமடுவிற்குத் தேங்காய் லோட் ஏற்றி முடிந்துபோன கையோட அம்மா என்னைக் கட்டிப்பிடிச்சு அழுதா. 'அப்பா இருந்திருந்தால் ஏன்ரா நீ இப்பிடிக் கஸ்ரப்படப் போறாய்? உன்ன ராசா மாதிரி வைச்சிருப்பாரே உன்ர மாமாவாவது நல்லவரெண்டால் நாங்களேன் இவ்வளவு அந்தரப்படுவான்' ஏறி இறங்கிக் கொண்டிருந்த நெஞ்சை வருடிவிட்டாள்.

மாடுகள் ஓடும் அழகை ரசித்த அப்பு வாயில் குதப்பிய வெற்றிலையைத் துப்பிவிட்டுப் பாட்டுப்பாடினார். 'வண்டியும் ஒருநாள், வள்ளத்தில் ஏறும், வள்ளமும் ஒருநாள், வண்டியில் ஏறும்...'

உற்சாக மிகுதி முகத்தில் தெரிய அனுபவித்துப் பாடினார். 'ஏன்ரா சேனப்பு... உன்ரபாடு இண்டைக்குப் பரவாயில்லப்போல கிடக்கு' மாட்டின் நாரியில் கைவைத்து உசுப்பியபடி கூறினார் அப்பு. அவன் பதிலேதும் இன்றி அப்புவைப் பார்த்துச் சிரித்துவிட்டு வளைந்து கிடந்து சைக்கிளைச் செலுத்திப் போனான். பின்கரியலில் நாலு காலும் வானைப்பார்த்தபடி வாட்டிய பன்றியுடல் கிடந்தது. 'நல்ல நெய்ப்பண்டிபோல கிடக்கு' அப்பு வாயூறினார். வெய்யில் ஏறிவிட்டிருந்தது. வயிற்றில் புகைந்தது. சாப்பிட்டால்தான் அந்தப் புகைச்சல் எடுபடும். இன்று லோட் ஏத்தி வீடுபோய்ச் சேரப் பத்துப்பதினொரு மணியாகும்.

வண்டில் கிரவல் தெருவில் இருந்து மணல்ச்சாலையில் இறங்கியது. மாடுகள் நன்றாய்க் களைத்துவிட்டிருந்தன. மணலில் குழம்புகள் புதைத்து நடந்தன. தெரு இறங்கிக் கொண்டே போனது. தேங்காய் ஏற்றப்போகும் தோட்டம் பள்ளத்திலேயே இருந்தது. ஈரலிப்பான மணற் தெருவில் வண்டிற் சில்லுகள் அமிழ்ந்து உருண்டன. வண்டித் தடங்களில் தண்ணீர் ஊறித் தேங்கியது. மாடுகள் மூச்சு வாங்க தலையசைத்து நடந்தன. நாணயக் கயிற்றின் வழியே நுரைதள்ளியது.

லோட் ஏற்றி முடிக்க அப்பு மிகவும் களைத்துப் போயிருந்தார். நெற்றியில் வியர்வை வழிந்து மூக்கு நுனியில் ததும்பியது. வலிந்து போன அப்புவின் நெஞ்சுக்கூடு மேலும் கீழும் வேகவேகமாய் ஏறி இறங்கியது. அவதி அவதியாய் மூச்சு வாங்கினார்.

'அப்பு அப்பு' 'என்னப்பு'

'என்ன செய்யிதப்பு?'

'எனக்கு ஒண்டுமில்லை ராசா... ம் ம்....'

'இண்டைக்கு கஞ்சி ஊத்தியிருக்கினம் அப்பு, கொஞ்சம் குடியுங்கோவன்' 'வேண்டாம் குஞ்சு நீ... குடி ஆனா இந்தச் சனங்களின்ர கசகசவெண்ட சத்தத்தத்தான் தாங்கேலாமல் கிடக்கு. சிவம்.... ம்.... கெதியாய் இந்தப் பள்ளிக்கூட முகாம் விட்டு வெளில எங்கேண்டாலும் ஒரு கொட்டிலப் போட்டுக்கொண்டு போயிடவேணும்'

'.....' 'சிவம்!'

'ம்' 'என்னப்பு கண் கலங்குறாய்'

'ஒண்டு மில்லேப்பு' 'இல்ல.... நீ கொம்மாவப் பற்றித்தான் யோசிக்கிறாய். அவளைப்பற்றி யோசியாத குஞ்சு' 'அம்மாவ என்ன செய்வாங்கள் அப்பு? விட்டிடுவாங்களே'

'கடவுள் சித்தம்... அவளின்ர சீவன் காலம் தப்பியிருந்தால் வருவாள்தான'

'இல்லயப்பு, ஒட்டுசுட்டானில அகப்பட்ட எல்லாரேம் வவுனியாவுக்குக் கொண்டு போட்டாங்களாம்'

'எங்க கொண்டு போனாலும் அவளுக்கு ஒண்டும் நடக்காது. அவள் ஆருக்கு என்னகெடுதல் செய்தவள்'

'அப்பு'

'ம் சிவம்'

'........'

'சிவம்'

'ம்'


'என்னப்பு?'

'எங்கட ஊருக்கு எப்ப போறதப்பு?'

'கெதியில போவம் ராசா... எங்கட ஊர் ஒண்டும் லேசுபட்ட பூமியில்ல. ஆராரெல்லாம் வந்து ஆட்டிப்படைக்க நினைச்சினம், எந்தப் பிறத்தியானுக்கும் எங்கட மண் அடங்கிக்கிடந்ததில்ல' அப்பு கூறியதைக் கேட்க அந்தரத்தில் மிதப்பதான உணர்வு. வானம் மிகவும்... மிக மிகவும் அண்மையில் கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதான உணர்வு. 'என்னடாப்பா கனநேரமாய் ஒண்டும் கதைக்காமல் இருக்கிறாய். வீட்டு ஞாபகம் வந்திட்டுது போல கிடக்கு' இனியவன் இடித்தான்.

'ஒண்டுமில்ல மச்சான்' 'இல்ல இல்ல ஆள் தன்ர ஊருக்கு வந்திட்டாரெல்லோ... பழைய ஞாபகங்கள் வந்திட்டுதுபோல கிடக்கு' நக்கலடித்தான் சிறி. 'ட்ரக்' வண்டியினுள் கொல்லென்று சிரிப்பொலி கிளம்பியது. 'ட்ரக்' சிலையடியைத் தாண்டி நீண்ட நேரமாக இருந்தது. நீண்ட காலங்கள் போலவும் இருந்தது. கற்சிலைபற்றி அப்பு கூறியது இப்போதும் நினைவை விட்டகலவில்லை. தோளில் கொழுவியிருந்த ஆயுதம் கனத்தது. கழற்றி மடியில் வைத்துக்கொண்டேன்.

'ட்ரக்' வண்டி பள்ளமும் திட்டியுமாய் இருந்த தெருவில் குலுங்கிக் குலுங்கி விரைந்தது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net




# சிறீலங்காவின் பிடியிலிருந்து உ



**சுப்பிரமணியம் சிவநாயகம்**

ஏப்ரல் 13ஆம் திகதி தமிழ்ப்புத்தாண்டு மலர்ந்தபோது அமெரிக்கப் பெண்ணான மேரி கொல்வின் தங்களுடன் இருப்பதை தமிழ் மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள். ஆனால், 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரபல லண்டன் பத்திரிகையான சண்டே ரைம்ஸ் 'யுத்தமிடும் புலிகள் சமாதானம் பேசுகின்றார்கள்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையாளரும், பெண் பத்திரிகை நிருபருமான மேரி கொல்வினின் புகைப்படமும், கட்டுரையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இவர் 1995ஆம் ஆண்டுக்குப் பிறகு சிறீலங்காவில் தமிழர் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்குச் சென்றுவந்த முதல் வெளிநாட்டுப் பத்திரிகையாளர். அவர் வன்னிப்பெருநிலப்பரப்பின் முக்கிய மக்கள் குடியிருப்பான மல்லாவியில் இருந்து லண்டன் தினசரிக்கு இந்தக் கட்டுரையை அனுப்பியிருந்தார். சிறீலங்கா அரசாங்கத்தினால் பத்திரிகையாளர்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் 45 வயதான இந்த அமெரிக்கப்பெண் எப்படி நுழைந்தார்? இந்தச் செய்தி இணையமூலமும், வாய்ப்பேச்சு மூலமும் உலகெல்லாம் உள்ள தமிழர்களிடம் பரவ, சிங்கள இராணுவமோ திருதிரு என்று முழித்தது.

என்ன நடந்தது என்று அறிய கொழும்பில் இருந்து, லண்டன் - இலங்கை துாதரகத்துக்கு தொலைபேசி மூலம் அழைப்புக்களும், மின்அஞ்சல்களும் பதட்டத்துடன் பறந்தன. காரணம் லண்டன் சண்டே ரைம்ஸ்சின் வேண்டுகோளுக்கு இணங்க, பிரித்தானியாவில் உள்ள சிறீலங்கா துாதரக உயர் ஸ்தானிகர் மங்கள முனசிங்க, மேரி கொல்வினுடைய பிரயாண அனுமதிக்கு சிபார்சு செய்திருந்தார். மேரி கொல்வின் விட்ட பெரிய தவறு என்னவென்றால் நாட்டில் இருந்து வெளியேற முதலே தனது அறிக்கையை வெளியிட்டது. இதுதான் இராணுவத்தை உசார்நிலைக்குக் கொண்டுவந்தது. இதன் விளைவாகத்தான் மடுறோட் சந்தியில் இருந்து மூன்றரை மைல் துாரத்தில் உள்ள பறயனாலங்குளத்துக்கூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் திரும்பிவர முற்பட்டபோது, மேரி கொல்வின் இராணுவ ரோந்துப் படையினரால் சுடப்பட்டார்.

கொழும்பு அரச தலைவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட முதல் அவமானத்தில் இருந்து விடுபட முன்னர் மேரி கொல்வின் நியூயோக் வைத்தியசாலை படுக்கையிலிருந்து எழுதிய இரண்டு பக்கக் கட்டுரை மூலம் சிறீலங்கா அரசாங்கம் நீண்டகாலமாக பரப்பிவரும் பொய்ப்பிரச்சாரங்களை அம்பலப்படுத்தியதை ஏப்ரல் 22ஆம் திகதி சண்டே ரைம்ஸ் பிரசுரித்திருந்தது. முகத்திலும் மார்பிலும் காயம் ஏற்பட்டு, ஒரு கண்ணையும் இழக்கக்கூடிய ஆபத்திலும் உள்ள மேரி கொல்வின், உலகத்துக்கு இந்தக் கதையைக் கூறுவதற்கு உயிருடன் இருப்பதே அதிஸ்ரம்தான். ஒரு பெண் ஆட்சி செய்யும் அரசாங்கம், மறைக்கும் உண்மைகளை, வன்னியில் பொருளாதாரத் தடைகளினால் அவஸ்தைப்படும் தமிழ் மக்களின் அவலங்களை, 45 வயதான பெண் பத்திரிகையாளர் துணிவுடனும், நேர்மையுடனும் உலகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதேவேளை தமிழ்ப்பெயர் கொண்ட சிறீலங்கா வெளிநாட்டமைச்சர், அரசாங்கம் பொருளாதாரத்தடை செய்யவே இல்லையென்று பிரஸ்தாபிக்கின்றார்.

மேரி கொல்வின் தனது முதல் கட்டுரையில் திரு.சு.ப. தமிழ்ச்செல்வனை மேற்கோள்காட்டி "Federalism அல்லது Confederation எந்தப் பெயரிலாவது அரசியல் தீர்வு முக்கியம் என்று கூறி, தமிழர்களுக்கு அங்கு அவசியம் தேவைப்படுவது, நீதியுடனும், மனிதமாண்புடனும், சம உரிமையுடனும், தமிழ் மக்கள் வாழ்வதற்கான ஒருதீர்வு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் கொழும்பு பௌத்த பிக்குகளினால் தீர்மானிக்கப்படும் வாழ்க்கைமுறை அல்ல" என்றும் அவர் கூறியிருக்கின்றார். தமிழர் தாயக சுயாட்சிக்கு விடுதலைப் புலிகள் சம்மதிக்கின்றார்கள் என்றால் அவர்கள் இராணுவ பலவீனம் அடைந்துவிட்டார்கள் என்பதல்ல என்று கூறிய மேரி கொல்வின் 'சென்ற ஏப்ரல் மாதம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண நுழைவாயிலாக இருந்த பெரும் இராணுவப் படைத்தளமான ஆனையிறவு முகாமை வென்று தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தார்கள். வன்னியில் இருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றி வடக்கில் நான்கு முக்கிய பிரதேசங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர். இன்று தங்கள் பாரம்பரிய நாட்டில் 50 வீதத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள்' என்று கூறினார்.

"விடுதலைப் புலிகளின் மல்லாவி தலைமைப் பீடத்திற்கான எனது பயணத்தின்போது தென்கரையில் உள்ள மன்னார் பாடசாலை ஒன்றின் தரையில் படுத்துத் தூங்கினோம். மிதவாதியாக இருந்த பாடசாலை அதிபரை அரச அடக்குமுறை எப்படி தீவிரவாதியாக மாற்றியது என்பதை இரவு நீண்டநேரம் வரை விழித்திருந்து அவருடன் பேசித் தெரிந்துகொண்டேன். 'இந்த யுத்தத்தை நான் ஆதரிக்கவில்லை. ஆனால், எங்களுடைய உரிமைகளை வென்றெடுக்க எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை' என்று அந்த அதிபர் கூறினார். அதிகாலையில் அங்கிருந்து நாங்கள் எல்லோரும் ரைக்ரர் மூலம் மரமுந்திரிகை தோட்டங்களின் ஊடாக சேதமடைந்திருந்த தெருக்களின் வழியே சென்று, அடர்ந்த காட்டுப் பகுதியைக் கடந்து திறந்த வயல் வெளியை அடைந்தோம். சிறீலங்கா இராணுவத்தினர் இருக்கின்றார்களா என்று அவதானித்த பின் இரவு ஒன்பது மணியளவில் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் இருந்த முக்கிய வீதியை கடந்து மல்லாவியில் இருந்த புலிகள் தலைமையகத்துக்குப் போய் சேர்ந்தது எல்லோருக்கும் பெரும் நிம்மதியை அளித்தது"

# உயிர் தப்பிய பத்திரிகையாளர்!

"புலிப்போராளிகளில் பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்து ஏதிலி காளாக சொந்த மண்ணில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் கதையிலிருந்து திரு. பிரபாகரன் அவர்களின் மீது அவர் களுக்கு இருந்த மட்டில்லாத மரியாதையை உணர முடிந்தது. அவரைத் தேசியத் தலைவர் என்றே அழைத்தார்கள்" என்று மேரி கொல்வின் எழுதியிருந்தார்.

"விடுதலைப் புலிகள் மக்களைப் பயப்படுத்தி வைத்திருக்கின் றார்கள் என்று அரசாங்கம் கூறினாலும், விடுதலைப் புலிகளுக்கு அவர் களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பெருமளவிலான ஆதரவு இருப்ப தற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. "புலிகள் இல்லாவிட்டால் தமிழர்கள் எப்பவோ சுட்டுக்கொல்லப்பட்டு இருப்பார்கள்" என்று கூறுகின்றார் கத்தோலிக்க பங்குத் தந்தையான சேவியர் அவர்கள். "எனது பங்கு மக்கள் யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்படவேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் உயிர்களையும் காணிபூமி சொத்துக் களையும் இழந்த எமக்கு நாம் திரும்பவும் இந்த இழப்புக்களை தவிர்ப்பதானால் எமது உரிமைகளை உறுதிப்படுத்தும் தீர்வு வேண்டும்" என்றும் கூறினார்.

மேரி கொல்வின் எழுதுகின்றார் "தமிழர் இதயங்களில் அரசாங்கம் அன்னியப்பட்டுவிட்டது. பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதாக கொழும் பில் அமைச்சர்கள் அறிக்கைகள்விட்டாலும், உள்நாட்டு இராணுவ சோதனைச்சாவடிகளில் இராணுவம் பலரக பொருட்களையும் தடை செய்கின்றது. எரிபொருள், சிமெந்து, பிளாஸ்ரிக் சீற்றுகள், உடன் தயாராகும் நூடில்ஸ், மரக்கறி எண்ணெய் இன்னும் பெண்களால் பயன்படுத்தப்படும் Sanitary Towels கூட அனுமதிக்கப்படுவதில்லை. புலிகள் காயங்களைக் கட்ட அதைப் பாவித்துவிடுவார்கள் என்று காரணம் காட்டப்படுகின்றது. இந்தப் பொருளாதாரத் தடையால் 500,000 மக்களுக்கு வெளியே தெரியாத பெரும் மனித விபரீதம் நடந்து கொண்டிருக்கின்றது. இதில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் உள்ளூரி லேயே அகதிகளாக இருக்கின்றார்கள். பெரும்பான்மையானவர்கள் நாட்டின் வறுமைக்கோட்டுக்குக் கீழ், மாதம் 12 பவுண் வருமானத்துடன் வாழ்கின்றார்கள். சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்கள் உணவு உதவி செய்வதைக்கூட அரசாங்கம் தடைசெய்கின்றது. சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் கணிப்பின்படி, வன்னியில் 40 வீதமான குழந்தைகள் போசாக்கில்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படு கின்றது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதில் இருந்து ஏழு தடவைகள் திரும்பத்திரும்ப அகதி ஆக்கப்பட்ட ஆறு பிள்ளைகளின் தாயான 52 வயது புஸ்பராணி என்ற ஆசிரியையின் ஒரு மகன் யுத்தத்தில் இறக்க, மகள் கடற்புலியாக பணிசெய்கின்றார். 1996ஆம் ஆண்டு இராணுவம் குண்டுபோட்டு அழிக்கும்வரை வியாபார முக்கியத்துவம் வாய்ந்த 300,000 குடியிருப் பாளர்களைக் கொண்ட கிளிநொச்சி நகரில் இன்று குண்டுவீச்சினால் அழிக்கப்பட்ட கட்டிடங்களில் பாடசாலைகள் நடக்கின்றன. வைத்திய சாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு. சென்றவாரம், 'நான் அனுபவித்த துன்பங்கள் போதும் தற்கொலை செய்துகொள்ளப்போகின்றேன்' என்று ஒரு குறிப்பு எழுதி வைத்துவிட்டு காட்டுக்குள் சென்றுவிட்ட இருதய நோயாளி ஒருவரைப்பற்றிக் கூறி அவருக்குக் கொடுக்கத் தன்னிடம் மருந்து எதுவும் இருக்கவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர்.



மேரி கொல்வினின் கட்டுரை ஈஸ்டர் ஞாயிறு அன்று ஏப்பிரல் 15இல் லண்டன் இதழில் வெளிவந்தபோது அவருக்கு அதே இரவு என்ன நடக்கப் போகின்றது என்று ஒருவருக்கும் தெரியாது. இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைய முற்பட்ட வேளையில் மயிரிழையில் உயிர் தப்பினார். தலையிலும் கழுத்திலும் நெஞ்சிலும் கண்ணிலும் காயங்களுடன் அதிஸ்டவசமாகத் தப்பிக்கொண்டார். இருப்பினும் இடது கண்ணை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது எப்படி நடந்தது? இது நடந்த வேளையில் நடந்ததைக் கூறக்கூடிய ஒரே சாட்சியம் இராணுவம்தான். இராணுவ அறிக்கைகளை கேட்டுப் பழகியவர் களுக்குத்தான் அவர்கள் எப்படி உண்மையைத் திரித்து உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட வல்லவர்கள் என்பது தெரியும் . ஆனால் மருத்துவத் தள்ளுவண்டியில் வவுனியா மருத்துவமனைக்கும், பின்னர் அநுராதபுர மருத்துவமனைக்கும், கடைசியாகக் கொழும் பிற்கும் மாற்றப்பட்ட மேரி கொல்வின் அதை லண்டன் சண்டே ரைம்சில் வெளியிட்ட பின்புதான் உண்மை தெரியவந்தது. நடந்த உண்மையை மறைக்க இலங்கை இராணுவம் தான் வளமை போலப் புதுக்கதையை உருவாக்கியிருந்தது. இலங்கையின் ஒருமூலையில் நடு இரவில் நடந்த ஒரு சம்பவத்திற்கு சாட்சிகள் எங்கே இருக்கப் போகின்றார்கள் என்ற எண்ணத்தில் இராணுவத்தின் கதை இப்படிப் போகின்றது.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net


FOCUS

'The shot hit me. Blood poured from my eye – I felt a profound sadness that I was going to die'

Dell | Mobile
Latitude™ C600
Each one has its own unique fingerprint
£1325
£1614
CALL 0870 907 3206 CLICK www.dell.co.uk

Our lowest fares are available to everyone!
(including business travellers)
easyJet.com

PHOTO BY - THE SUNDAY TIMES, UK

"விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில், மேரி கொல்வின் சூடுபட்டு நிலத்தில் விழ விடுதலைப் புலிகள் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்" என்று இந்தச் செய்தியை சுயாதீனமாக உறுதிப்படுத்த எவராலும் முடியாததால், உள்ளூர்ப் பத்திரிகைகளும் வெளிநாட்டுப் பத்திரிகைகளும் அப்படியே அதைப் பிரசுரித்தன. ஆயினும் அடுத்த ஞாயிறே உண்மை வெளிவந்தது.

மேரி கொல்வின் எழுதுகிறார்: வன்னியில் இருந்து அரச கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைய 3 நாட்களாக முயற்சித்தேன். 30 மைல்கள் காட்டுப் பிரதேசத்திற்குள் நடக்க வேண்டும். சேறும், சகதியும் நிறைந்த இடம். ஒவ்வொரு இரவும் நான் இப்பிரதேசத்தைக் கடக்க முயற்சி எடுத்தபோது, என்னை அழைத்துச் செல்லவேண்டியவர்கள் இராணுவ அரண்களைக் கடப்பது ஆபத்தானதென்று தடுத்தார்கள். ஞாயிறு இரவு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு 50 யார் அண்மையில் வந்துவிட்டோம். திங்கள் காலை மூன்றாவது அதிஸ்ட நாள். அடிவானத்தில் சூரியன் மறையும்வேளை, ஆலமரத்தின் கீழ் அமர்ந்து இருளின் வருகைக்குக் காத்துக்கொண்டு, அமைதியையும் இயற்கையின் அழகையும் ரசித்தேன். என்னை அழைத்து வந்தவர்கள் சாதாரண பொதுமக்கள் சாரமும், காற்சட்டையும் அணிந்திருந்தார்கள். ஒரு வயதானவர் ஒரு சிறு கயிற்றுப் பையில் பெப்சிக்கோலா போத்தல் 2 வைத்திருந்தார். எம்மிடம் இருந்த கடைசிக் குடிபானம். அங்கிருந்த இளைஞர் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் தான் கற்ற ஆங்கிலத்தைப் பரீட்சித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் தந்தை, இராணுவம் யாழ். நகருக்குள் புகுந்தபோது கொல்லப்பட்டார். எங்களை அழைத்துச்சென்றவர் 'இன்று எங்கள் தந்தையின் வீட்டில் பால்தேனீர் அருந்துவீர்கள்' என்றார். அவரிடம் மட்டும் காட்டுப்பன்றி, யானை மிருகங்களில் இருந்து பாதுகாக்க ஒரு பழைய துவக்கு இருந்தது. எல்லாத் தமிழர்களும் விடியும் முன் வீடு திரும்புவதும், நான் அதிகாலை வவுனியாவுக்கு பஸ் எடுப்பதும் எங்கள் திட்டம். ஒருவர்பின் ஒருவராக காட்டு ஒற்றைப் பாதையூடாக நடந்தோம். இடுப்பளவு தண்ணீருக்குள்ளால் குளத்தின் கரையோரமாக தூரத்தில் தெரிந்த இராணுவச் சாவடி வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டே நடந்தோம். எல்லையில் இருக்கும் வவுனியா - மன்னார் எல்லையை அண்மித்தோம்.

இரவு எட்டு மணி இருக்கும். வீதியில் இருந்து அரைமைல் தூரம் வரை பற்றைகள் ஊடாகப் புகுந்து, சென்றோம். எங்கள் வழிகாட்டி, முன்சென்று நிலைப்பாட்டை அறியப்போனார். காட்டின் கடைசிக்கட்டம். திடீரென தானியங்கித் துப்பாக்கி வேட்டு ஒரு 100 யார் தூரத்தில் இருந்துவந்து அமைதியைக் கெடுத்தது. நான் முகம் குப்பறத் தரையில் வீழ்ந்து தவழ்ந்தேன். பாதுகாப்புகாக 10 யார் தூரத்தில் ஒரு மரம் ஆனால், அதுவே அவ்வேளை தூரமாகப்பட்டது. மின்னல் போல் வெளிச்சம் யாரும் காணாத இராணுவ நிலையில் இருந்து வந்தது. வேட்டுக்கள் நின்றன. அமைதியும் நிசப்தமும் நிலவியது. எங்கள் பக்கத்தில் இருந்து எதுவித சத்தமும் இல்லை. மற்றவர்கள் எங்கு என்று என்னால் கூறமுடியவில்லை. கேட்ட ஒரேயொரு சத்தம் இடையிடையே குண்டடிபட்ட ஒரு மாட்டின் கதறல். எல்லாம் முடிந்துவிட்டதென்ற ஒரு பைத்தியத்தனமான எண்ணம் தோன்றியது. ஆனால் உயிர்தப்பிவிட்டேன். எங்களைக் குறிபார்த்துவிட்டார்கள். இராணுவம் எங்களை ரோந்து செல்லும் புலிகள் என்று எண்ணி எங்களைத் தேடிவரப்போகின்றார்கள். பயத்தில் எந்நேரமும் துவக்கின் வில்லை இழுக்கலாம். புற்தரையில் கிடந்தபடி ஒரு தீர்மானம் எடுக்கவேண்டி இருந்தது. ஓடுவதா, அசையாமல் அப்படியே கிடப்பதா அல்லது குரல் எழுப்புவதா. துளைக்கும் ஒளியிலும் அரைமணிநேரம் அப்படியே இருந்தேன். அரை மைல்களுக்கு அப்பால் இருந்து துவக்குச் சூடு தொடங்கியது. தேடி அழிக்கும்படை புறப்பட்டுவிட்டது. தெருவில் இராணுவத்தினரின் பேச்சும், சிரிப்பொலியும் கேட்டது. பத்திரிகையாளர், அமெரிக்கர், யு.எஸ்.ஏ என்று கத்தத் தொடங்கினேன். சத்தம் வந்த திசைக்குச் சுட்டார்கள்? இந்த இராணுவத்திற்கு சிறைபிடிக்கும் நோக்கம் இல்லை. என்னில் சூடுபட்டுவிட்டது, வலியும் அதிர்ச்சியும் எனக்கு ஏற்பட, கண்ணில் சூடுபட்டுவிட்டது என்று உணர்ந்தேன். கண்ணிலும் வாயிலும் இருந்து குருதி நிலத்தில் சிந்தியது. சாகப் போகின்றேன் என்ற சோக உணர்வு என்னில் எழுந்தது. நான் தலையில் சூடுபட்டிருந்ததால், சாவதற்கு எவ்வளவு நேரமாகும் என்று சிந்தித்தேன். (உண்மையில் அது ஒரு குண்டுச்சிதறல்தான் தைத்திருந்தது) எனவே, திரும்பவும் அலறத் தொடங்கினேன். ஆங்கிலத்தில், ஆங்கிலம் பேசுபவர்கள் யாராவது இருக்கின்றீர்களா? என்றேன் திரும்பவும் துவக்கு வேட்டுக்கள். பைத்தியத்தனமாகச் சுட்டார்கள். நான் பயந்த அளவு அவர்களும் பயந்திருந்தார்கள். நான் சாகத் துணிந்துவிட்டேன். எப்படியும் என்னைக் கொல்லப் போகின்றார்கள் என்ற உணர்வு இருந்தது. எனவே மேலும் மேலும் சத்தம் போட்டேன். ஆங்கிலம் புரியாதவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்களைத் தேடிக் கத்தினேன். கடைசியாக வைத்தியர் என்ற சொல்லை திரும்பத் திரும்பச் சொன்னேன். இறுதியில் ஒரு குரல் 'எழுந்து நில்' 'எழுந்து நில்' என்று சொல்லிக் கொண்டே வெடிகள் தீர்க்கப்பட்டன.

மேரி கொல்வின் தரும் இந்த விபரங்களில் இருந்து, இலங்கை இராணுவத்தினர் ஒரு பயந்த கோழைப் படையினர் என்பது தெரிகின்றது. ஒரு பெண்ணின் குரல் என்று தெரிந்தும் அதுவும் ஒரு வெளிநாட்டவர், அமெரிக்கர் என்று கத்தியும் வேட்டுக்கள் தீர்த்திருக்கின்றார்கள். பைத்தியக்காரத்தனமாக சத்தம் போட்டிருக்கின்றார்கள். எனவே இராணுவத்தினர் ஒரு கதை புனைந்ததில் வியப்பில்லை. ஒரு யுத்த சூழலை வர்ணித்து, தாங்கள் புலிகளை விரட்டியதாக கதை கட்டியிருக்கின்றார்கள். நிருபரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை அவரை நடாத்திய விதம், அவர்கள் எவ்வளவு பயத்தில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. அவரிடத்தில் ஆயுதம் இருக்கின்றதா என்று சோதனை செய்தபிறகும் நிலத்தில் உறுட்டி உதைத்து உரக்கக் கத்தியிருக்கின்றார்கள். அப்பொழுதெல்லாம் கண்ணில் இருந்து இரத்தம் ஓடியிருக்கின்றது. பார்வையே சரியாக இருக்கவில்லை. துவக்கு முனையில் நடக்கவைத்து, முடியாமல் விழுந்தபோது வற்புறுத்தி நடக்கவைத்திருக்கின்றார்கள். இரண்டு மனிதர்கள் தோள்களில் தாங்கி நடக்கவைத்து அவர் கைசோர்ந்து விழுந்தபோது தங்கள் ஆயுதத்தை பறிக்க எத்தனிப்பதாக கூறியிருக்கின்றார்கள்.

உயர் பதவியில் இருக்கும் ஒருவர் என்னை விசாரித்தார், "எங்கே பயிற்சி பெற்றாய்? உன்னோடு எத்தனைபேர் இருந்தார்கள்? உன் வாகனம் எங்கே? நீ அமெரிக்கர் என்கிறாய் வாகனம் இல்லையா? (மூளை அற்றவன் வாகனம் இருந்திருந்தால் இருளில் புற்தரையில் ஏன் விழுந்திருக்கவேண்டும்?) நீ எங்களைக் கொல்ல வந்ததாக ஏற்றுக்கொள். உங்கள் பக்கத்தில் இருந்துதான் முதலில் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டதென்று ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் உண்மை இல்லையா?"

"இல்லை ஐயா! உங்கள் இராணுவம் எங்களை நோக்கி சுடும்வரை எதுவித துவக்குச்சூடும் இருக்கவில்லை"





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



**“சாகப் போகின்றேன் என்ற சோக உணர்வு என்னில் எழுந்தது. நான் தலையில் சூடு பட்டிருந்ததால், சாவதற்கு எவ்வளவு நேரமாகும் என்று சிந்தித்தேன்.”**

“முதலில் வவுனியா வைத்தியசாலையிலும் பின்பு அநுராதபுரம் விக்ரறி இராணுவ வைத்தியசாலையிலும், அங்கிருந்து ரக்வண்டியில் அநுராத புரம் அரச வைத்தியசாலைக்கும் இராணுவக் காவலுடன் கொண்டு செல்லப்பட்டு கடைசியாக இராணுவ உலங்குவானூர்தியில் மறுநாள் காலை கொழும்பு கண் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டேன். வைத்தியசாலை தள்ளுவண்டியில் சனநெருக்கமான அவசர சிகிச்சைப் பகுதிக்குக்கொண்டு செல்லப்பட்டேன். அங்கும், இராணுவச் சிப்பாய்கள் சூழ்ந்து நின்றார்கள். இங்குதான் அமெரிக்க தூதரகம் என்னைப் பொறுப்பேற்றது. என்னுடன் அமெரிக்கத் தூதுவர் ஒரு மணிநேரம் பேசிவிட்டுச் சென்றார். அதன்பின் நான் அங்கிருந்து New Yorkற்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டேன்”

வைத்தியசாலைப் படுக்கையில் இருந்து எழுதுகின்றார்: “நான் ஏன் யுத்த செய்திகள் சேகரிக்கின்றேன் என்று அண்மையில் பலர் கேட்டார் கள். இதற்கு பதில் சொல்வது கடினம். நான் யுத்த செய்தியாளர் அல்ல. நான் எப்போதும் எழுதும்போது தங்கள் எல்லைகளுக்குத் தள்ளப்பட்ட மனிதர்களைப் பற்றி எழுதுகின்றேன். அவர்களின் தாங்கமுடியாத வேதனைகளைப் பற்றியும், பிரகடனம் செய்த, செய்யாத யுத்தத்தில் நிகழும் உண்மை நிகழ்வுகள் பற்றியும் எழுதுகின் றேன். சாட்சிசொல்வதே எனது தொழில். சிறீலங்காவிற்கு வரும் வெளி நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கான அரசாங்க துண்டுப்பிரசுரங்கள் மூலம், போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், பெற்றோர் தங்கள் பிள்கைளை புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிடுவார்கள் என்று பயந்து, பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்று சிறீலங்கா அரசு கூறுகின்றது. ஆனால் பெற்றோர் எனக்குச் சொன்னார்கள், உணவு இல்லாமல் பிள்ளைகள் பாடசாலைகளில் மயங்கிவிழுந்து விடுகின்றார்கள். அவர்களுக்கு பாடசாலைக்குத் தேவையானவற்றை வாங்குவதற்குப் பணம் இல்லை. தமிழ்ப்பகுதியான வன்னிக்கு நான் சென்றதையிட்டு இலங்கை அரசாங்கம் பெரிதும் கோபமடைந்திருக்கின்றது. எனக்கு நடந்தவற்றிற்கு அரசாங்கம் மன்னிப்புக் கேட்கவில்லை. அங்கு செல்ல எனக்கு அனுமதி இருக்கவில்லை. எனவே என்னிடத்தில் ஏதோ இரகசிய திட்டம் இருந்திருக்கவேண்டும் என அரச நினைத்துள்ளது. ஆனால், என்னிடத்தில் எவ்வித இரகசிய திட்டமும் இல்லை. என்னிடம் இருப்பது பத்திரிகையாளர் அடையாள அட்டை மட்டுமே. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போனேன். ஏனென்றால், புலிகளுடன் பேசுவதும், ஏற்கனவே வெளிக்கொண்டு வரப்படாத மனித அவலங்கள் பற்றி எழுதுவதும் முக்கியமானவை”

மேரி கொல்வின் தற்கால செய்தியாளர்களில் மிகவும் துணிச்சலா னவர் என்ற பெயர் பெற்றவர். அவருக்கும் கொழும்பில் உள்ள இந்திய - இலங்கை நிருபர்களுக்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு. ரஷ்யாவின் செச்சினிய, ஆபிரிக்காவின் சிம்பாபே, இந்தோனேசியா வின் கிழக்குத்தீமோர் பற்றிய துணிச்சலான செய்தி சேகரிப்புக்களில் ஈடுபட்டு விருதுகள் பெற்றவர். இலங்கை அனுபவத்தைப் பொறுத்த வரை அங்கு அவருக்கு சாட்சியம் இல்லாத யுத்தம் நடக்கின்றது என்ற முறையில் இவருடைய அனுபவம் தனியானது. ஏனென்றால், அவர் தான் முதல் சாட்சி. ஏப்பிரல் 22ஆம் திகதி Sunday Times செய்தி வெளி யிட்டதும் உலகெல்லாம் உள்ள தமிழர்களிடம் இருந்து மேரி கொல் வினின் நலம் விசாரித்தும், உதவியும் செய்யமுன்வந்தார்கள் என்றால் அதில் வியப்பில்லை.

இதில் விசித்திரம் என்னவென்றால் சந்திரிகா அம்மையார் தமிழர்கள் போலவே வருத்தம் தெரிவித்து, அமெரிக்க விடயத்தில் முன்னெச்சரிக் கையாய், மேரி கொல்வினுக்கு பூக்கொத்தும் அனுப்பியிருப்பதுதான்.

சிங்கள இராணுவம் பத்திரிகையாளர் மேரி கொல்வின் மீது நடாத்திய தாக்குதலானது, தமிழ் மக்கள் மீது தான் அன்றாடம் நிகழ்த்தி வரும் அவலங்களையும் அழிவுகளையும் மறைத்து, வன்னியின் உண்மை நிலையையும் புறநிலை யதார்த்தையும், சிங்கள அரசாங்கம் வெளியுல கிற்குத் தெரியாமல் மறைப்பதற்கும், மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டுள் ளாவர்களுக்கும் இது மரண எச்சரிக்கை என சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகளின் தலைமை செயலகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது அவ் அறிக்கையின் முழு விபரம்.

**தலைமைச் செயலகம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**தமிழீழம்**
17.04.2001

உண்மைகளை மூடிமறைத்து, பொய்மையையே ஆயுதமாகக் கொண்டு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் கருத்துப்போரை நடத்தியவாறு, அப்பட்டமான இன அழிப்புப் போரை நிகழ்த்திவரும் சிங்கள இனவெறி அரசாங்கம், உண்மையை உலகறியச் செய்ய முயன்ற வெளிநாட்டுச் செய்தியாளர் மீது பத்திரிகைத் தர்மத்தையும் ஜனநாயகப் பண்புகளையும் மனித உரிமை விழுமியங்களையும் மதியாமல் மிகவும் கேவலமான தாக்குதலை நடத்தியுள்ளது.

வன்னிக்கு நேரடியாக விஜயம் செய்து சிங்கள அரசின் மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடைகளாலும் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல் களாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் மக்கள் நாளாந்தம் அனுபவித் துவரும் துன்பதுயரங்களைக் கண்கண்ட சாட்சியமாகக் கண்டறிந்த பின்னர் திரும்பி வவுனியாவிற்குள் சென்ற லண்டனைத் தளமாகக் கொண்ட பிரபலமான “சண்டே ரைம்ஸ்” பத்திரிகையின் செய்தியாளரான மேரி கத்தரின் கொல்வின் என்ற அமெரிக்கப் பத்திரிகையாளர் மீதே சிங்கள இராணுவம் துப்பாக்கியால் சுட்டும் கைக்குண்டுகளை வீசியும் மிகவும் கோழைத்தனமான முறையில் தாக்குதலை நிகழ்த்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் புதுவருடத்தையொட்டி யுத்தநிறுத்தத்தை அறிவித் திருந்த சூழலில், இராணுவம் தன் மீது தாக்குதலை மேற்கொள்வது என்ற நம்பிக்கையுடன்தான் இப்பத்திரிகையாளர் வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்தார். விடுதலைப் புலிகள் தாம் அறிவித் திருந்த யுத்தநிறுத்தத்தையே சிறிதளவும் பொருட்படுத்தாமல் ஒரு வெளிநாட்டுப் பெண் என்றும் நோக்காமல் இப்பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

யுத்த சூழ்நிலைகளைக் காரணம்காட்டி, உள்நாட்டுப் பத்திரிகையாளர் களையும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் வன்னிக்குள் நுழை வதைத் தடுத்து, தமிழ் மக்கள் மீது தான் அன்றாடம் நிகழ்த்திவரும் அவலங்களையும் அழிவுகளையும் மறைத்து, வன்னியின் உண்மை நிலையையும் புறநிலை யதார்த்தத்தையும் சிங்கள அரசாங்கம் வெளியுல கிற்குத் தெரியாமல் முற்றாகத் தடுத்தும் வருகின்றது. இந்நிலையில், பெரும் ஆபத்தின் மத்தியில் வாகனங்களிலும் நடந்தும் பல மைல்கள் பிர யாணம் செய்து தனக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தினையும் சிரமங்களையும் பொருட்படுத்தாமல் உண்மைநிலையை அறிய வன்னிக்கு வருகை தந்த அமெரிக்கப் பத்திரிகையாளரின் பெரும் மனிதாபிமான முயற்சியினை முறியடிப்பதற்காகவே சிங்கள இராணுவம் இத்தாக்குதலை நடாத்தியுள்ளது. அத்துடன் தமிழ் மக்கள் அனுபவிக்கும் மனித அவலங்களை வெளிப் படுத்தும் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்களுக்கு மரண எச்சரிக் கையாகவும் இத்தாக்குதலை சிங்கள இராணுவம் நடத்தியுள்ளது.

தமிழ் மக்களின் வேதனைகளையும் துயரங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக் கூற. தனக்குள்ள உடல் உபாதைகளையும் அசௌகரியங்களை யும் பொருட்படுத்தாமல் உள உறுதியுடனும், மன வைராக்கியத்துடனும் நீண்ட தூரம் பயணித்து வன்னிக்கு வருகை தந்து, எம்மக்களைச் சந்தித்து அவர்கள் வாயிலாகவே உண்மைகளை அறிய இப்பெண்மணி துணிவுடன் மேற்கொண்ட மனிதநேயப்பணி போற்றுதற்குரியது.

கொழும்பிலே சிகிச்சை பெற்றுவரும் இவ் அமெரிக்கப் பெண் பத்திரிகை யாளர் விரைவாகக் குணமாகி, அவர் மேற்கொண்ட மனிதநேயப்பணி தொடரவும் வெற்றிபெறவும் வேண்டுவதோடு இப்பெண் பத்திரிகையாளர் மீது சிங்கள அரசு புரிந்த காடைத்தனமான தாக்குதலையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# மரம்

கருணைரவி

அவன் அந்த முகாமுக்கு அழைக்கப் பட்டதும் அந்த முகாம் வாசிகளுக்கு ஒரே மகிழ்ச்சி. அந்த முகாம் வாசிகள் வேற்றினத் தவர்கள் உயிர்களைக் குடிப்பதும், உடமை களை அள்ளுவதும், தறித்த உடல்களை பத்திரமாய் புதைப்பதும்தான் அவர்களின் தொழில். அந்த முகாம் வாசிகள் நிலங்களை அள்ளி அள்ளித் தின்றதில் வயிறுகள் ஊதி விட்டன. இப்பொழுது நிலங்களை அள்ள முடியாது தவித்துக்கொண்டு இருக்கின்றனர். அந்தத் தவிப்பைத் தணிப்பதற்காகத்தான் அவன் அந்தமுகாமுக்கு அழைக்கப்பட்டான்.

அவன் ஒரு மனித மிருகம். வேவுதான் அவனின் தொழில். அவனின் வேவுத் திறமை களால் பூர்வீகக்குடிகளின் நிலங்கள் பல அள் ளப்பட்டன. பூர்வீகத்தினர் ஏதிலிகளாக்கப் பட்டனர். தெருக்களில் அலைந்தனர். காடுகளை இருக்கையாக்கினர், நகரமாக்கினர்.

அந்த முகாம் வாசிகளுக்கு பூர்வீகத் தினரை அழிப்பதே கடமை. அவர்களை கால் களில் நசுக்குவதே தொழில். பூர்வீகத்தினரின் காப்பாளர்கள் அந்த முகாம் வாசிகளை நிலம் அள்ளாது தடுத்தனர். அள்ளிய நிலங்களை மீளப் பெறுவதற்காக தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்துகொண்டிருந்தனர். பூர்வீகத் தினரின் காப்பாளர்களை மீறி, பூர்வீகத்தி னரின் முழுநிலங்களையும் அந்தமுகாம் வாசிக ளால் அள்ளமுடியவில்லை. சீறினர், இயலா மையினால் காப்பாளர்களை காறி உமிழ்ந்தனர்.

இரகசியமாய் இரவுகளில் நிலங்களை அள்ள வெளிக்கிட்டனர். அவர்களை தறித் தனர் காப்பாளர்கள். முகாம்வாசிகளுக்கு இரவு களில் உறக்கம் வருவதில்லை. பூர்வீகக் காப்பாளர்கள் புகுந்து அவர்களை அழித் தனர். முகாம்களுக்கு தீமூட்டினர். அவர்க ளின் கூரிய ஆயுதங்களை அள்ளியும் சென்ற னர். இதனால் அந்த முகாம் வாசிகளின் உடல்களில் அச்சங்கள் கிறுக்கியது.

அந்த மனித மிருகம் அழைக்கப்பட்டதும் அந்த முகாம் வாசிகளுக்கு அச்சங்கள் எதுவு மில்லை. மீண்டும் வயிறுகள் ஊதும் என்ற மகிழ்வில் ஆடுகின்றனர்.... பாடுகின்றனர்.

அந்த மனித மிருகம் எதுக்கும் அஞ்சான். காவலர்களின் கண்களில்படாது, அவர்களின் இருப்புக்களை அறிவான். 'பெரும்படைகளைத் திரட்டி, பல வாழ்நிலங்களை அள்ளி அழித்த சாதனையும், அந்த மனித மிருகத்துக்கு உண்டு' என அந்த முகாம் வாசிகள் கதைத் தனர்.

அந்த மிருகத்தின் வேவுக்கு உதவியாய் ஐவரை அந்த முகாம் வாசிகள் கொடுத்தனர். அந்தமிருகம் ஐவரையும் ஒரு தனிமையான இடத்துக்கு அழைத்துச்சென்றான். வேவு பற்றி யவிசேட பயிற்சிகள் கொடுத்தான். பூரண விளக்கத்தை அவர்கள் பெற்றனர். ஒருநாள் இரவு அவர்களை அழைத்துச்சென்றான். அது கனத்த இரவு, விழிகளை தூக்கம் கடித்தது. சில்வண்டுகளின் இரைச்சல்களாய் அச்சங் களின் வக்கிரங்கள் அந்தத் தூக்கங்களை கலைத்தபடி இருந்தது. அவர்கள் வானத்தைப் பார்த்தார்கள். நட்சத்திரங்களை முகில்கள் விழுங்கி இருந்தன. மழையின் அறிகுறியாய் குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. அது தேகத் துக்கு இதமான காற்று. ஆனாலும், அவர் களுக்கு அது இதமாய்ப்படவில்லை.

அந்த ஐவரும் அவர்களின் முகாம் கடை சிக் காவலரணுக்கு வந்ததும் அவர்களை அச்சங்கள் இறுக்கின. அந்த அச்சம் உட லெங்கும் பரவியது. உணர்வு நரம்புகளைச் சுண்டி இழுத்து வலியைக் கிழப்பியது. அதை அவர்கள் வெளியில் காட்டவில்லை.

அந்த மனித மிருகம் கடைசிக் காவலர ணுக்குள் இருப்பவர்களுக்கு அறிவித்துவிட்டு பூர்வீகக் காவலர்களின் பிரதேசத்துக்குள் நுழைந்தான். அந்த மிருகத்துக்குப் பின்னால் அந்த ஐவரும் நகர்ந்தனர். அனைவரும் தங்க ளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உரு மறைப்புச் செய்திருந்தனர்.

துப்பாக்கிகளைத் தவிர தொலைத் தொடர்புக் கருவிகள் எதனையும் வைத்திருக்கவில்லை. அது அந்த மிருகத்துக்குத் தேவையாய்ப் படவில்லை. தொடர்புகள் எடுக்கையில் ஒலி அல்லது ஒளி இனங்காட்டும் என்பதற்காய் அதனைத் தவிர்த்தான். அனைவரும் பிரிந்து சென்று மீண்டும் ஒன்றாகையில், இனம் காண்பதற்காக பரிபாசையை அனைவருக் கும் கூறினான்.

காட்டுப் பகுதியை அவர்கள் கடந்ததும் சிறுவெளியொன்றுவந்தது. அந்த வெளியில் இருந்துதான் அவர்கள் பிரிந்துசெல்ல வேண்டும். அந்த இரவு நேரத்தில் அந்த வெளியை உற்றுப்பார்த்தான். அந்த வெளி யின் மையத்தில் ஒரு மரம் நின்றது. பெரிசாய் அல்ல, குடில் அளவாய். அந்த மரத்தடிக்குச் சென்றுதான் அவர்கள் பிரிந்துசெல்ல வேணும். மீண்டும் திரும்புகையில் அந்த மரத்தை அடையாளப்படுத்தித்தான் வரவேணும் என்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

பதை அனைவருக்கும் அந்த மனித மிருகம் தெளிவுபடுத்தினான். அனைவரையும் அந்த மரத்துக்கு நகர்த்தவேணும். முதலில் ஒருவர் நகர்ந்த பின்தான் மற்றவர் நகரவேணும். கொண்டுவந்த கயிற்றுப்பந்தை முதலில் ஒருவனிடம் கொடுத்தான். அவன் ஊர்ந்து செல்கையில் அந்த மனிதமிருகம் கயிற்றை இழுக் கிக்கொண்டிருப்பான். இடையில் கயிறு இழுபடவில்லை யென்றால் ஏதும் தடைகளாயிருக்கும். மரத்தடிக்குச் சென்றதும் கயிற்றை கைவிடவேணும். இழுக்க கயிறு வந்தால் மரத்தடிக்குச் சென்றதாகக் கருதப்படும் என்பதை ஐவருக்கும் விளங் கப்படுத்தினான்.

முதலில் ஒருவனிடம் கயிற்றைக் கொடுத்தனுப்பினான். அவன் எந்தத் தடங்கலுமற்றுப் போய்ச்சேர்ந்தான். அதன்படி ஐவரையும் அனுப்பினான்.

அவனும் இறுதியாக கயிற்றைச் சுற்றித் தோழில் போட்டுக் கொண்டு அந்த மரத்தை அடையாளப்படுத்தி ஊர்ந்துசென்றான்.

கால்கள் கடுத்தது. அவனுக்கு முழங்கால்களில் வலி எடுக்க அப்படியே கைகளில் முகத்தைப் புதைத்துப் படுத்தான். ஓய்வெடுத்தபின் மீண்டும் ஊர்வதற்காய் மரத்தைப் பார்த்தான். மிகவும் அண்மையாய் எட்டித்தொடும் தூரத்தில் நின்ற மரம் அசைந்தது.

அவன் அதிர்ந்துபோனான். பூகம்பம் வெடித்து, பூமிப் பிளவுக்குள் தான் நசுக்கப்படுவதாய் இருந்தது அவனுக்கு. உடல் பதறி உடைகள் ஈரமாகின. உயிர் பற்றிய ஆசை கெட் டெறிந்து மரமாகியது அவனில், அப்படியே விழிகளை அகட்டி யபடி மரத்தைப் பார்த்தான். மரம் அசைந்து அசைந்து நெடுந் தூரத்தில் போய் நின்றது. அவனில், அந்த ஐவரினது நிழல்கள் வினாக்குறிகளாகியது. விழிகள் அவர்களைத் தேடின. அவர் களைத் தேடிக்கண்டு பிடிக்கும் நிலையில் அவன் இல்லை. அவ் விடத்தைவிட்டு விலகலிலேயே மனம் நின்றது. மீண்டும் மரத்தைப்பார்த்தான். மரம் அசைந்து வந்தது. அச்சம் ஊற்றெடுத்து அவனை நனைத்தது.

அங்குமிங்குமாய் விழிகளைச் சுழற்றினான். எதிரே ஏதோ கறுப்பாய் தெரிந்தது. அது குற்றியாய் அவனுக்குத் தெரிந்தது. அந்தக் குற்றியோடு மறைவதற்காய் மெதுவாக ஊர்ந்தான். அந்தக் குற்றியின் அடிப்பாகத்தைத் தொட்டான். விரல்கள் குளிர்ந்தன. விரல்களை மூக்கடியில் வைத்தான். நெடில் வீசியது. அது இரத்த நெடிலாய் இருந்தது. நினைவுகள் விரிந்தன. அந்த ஐவரையும் நினைத்தான். பயம்பீச்ச மீண்டும் அதைத்தொட்டான். அது குற்றியலை மனித உடல் என்பதை உணர்ந்தான். யார் என அறியும் ஆதங்கம் கிளைபரப்ப கிட்ட ஊர்ந்து முகத்துக்கு நேரே பார்வைகளை எறிந்தான்.

அது அந்த ஐவரில் ஒருவன் மிகவும் திறமைசாலி என அவனால் அடையாளம் காணப்பட்டவன். கழுத்து நறுக்கிய நிலையில் கிடந்தான்.

அவனுக்கு முன்னால் நான்கு குற்றிகளாய் மிகுதி நால்வரும் கிடந்தனர். உணர்வுகள் விறைத்து பயம் அவனை அடுத்த சிந்தனையில் விரியவிடாமல் மனதைத் தடுத்தது. மரத்தைப் பார்த்தான். காணவில்லை, விறைத்த உணர்வுகள் தளர்ந்தன. வீசுங்காற்று அவனுக்கு இதமாகியது. அச்சம் தொலைந்த நினைவில் தப்புவதற்காகத் திரும்பினான்.

அவன் வந்த பாதைகள் எங்கும் புதிது புதிதாய் மரங்கள் நின்றன. சிறிதும் பெரிதுமாயும் கெட்டெறிந்த மரங்களுமாய் அவைகள் இருந்தன. கிட்டவும், எட்டவுமாய் நின்ற மரங்கள் காற்றுக்கு அசைந்தன. அந்த பெருவெளிக்காற்றில் அந்த மரங்களின் ஓசைகள் பயங்கர ஒலியைக் கிழப்பின. அந்த ஒலிகள் அவனில் பாம்பாய் ஊர்ந்தன. அந்த ஒலிகள் அவனின் உணர்வுகளை விழுங்கிவிட்டன. அவனால் அசையமுடிய வில்லை. அப்படியே கிடந்தான். அந்தமரங்கள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தன.

# புதிய சகாப்தம்

**'உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பிற்காக நாங்கள் மாதாமாதம் குறிப்பிட்ட தொகைப்பணத்தை உதவித் தொகையாகத் தர எண்ணியிருக்கிறோம்'**

**"இல்லை, எனக்கு அந்த உதவித் தொகை வேண்டாம். அதற்குப் பதில் எனக்கு ஏதேனும் வேலை எடுத்துத் தாங்கோ. எனது பிள்ளைகளை நானே உழைத்துப் பராமரிப்பதில் இருக்கும் நிறைவும், நிம்மதியும் உதவித் தொகை பெறுவதில் இருக்காது அதைவிட எத்தனை காலத்திற்கு இந்த உதவியை உங்களால் செய்ய முடியும். எத்தனை பேருக்குச் செய்யமுடியும்? அது சாத்தியமில்லை என்ர தன்னம்பிக்கையையும் அது அழித்துவிடும், தங்கி வாழும் இயல்பு தொற்றிவிடும். நான் இலங்கை கைப்பணி சபையில் ஆசிரியையாக வேலை செய்திருக்கிறேன், அந்த தகுதிக்கேற்ப ஒரு வேலையைப் பெற்றுத் தந்தால் பிரயோசனமாயிருக்கும்"**

சற்றே ஆச்சரியமான உரையாடலாக இருக்கின்றதா? பெண்களில் அந்தத் தன்னம்பிக்கை என்பது, இன்னொருவரைச் சார்ந்து வாழ்தலே இன்றுங்கூட நடைமுறையிலே உள்ள எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை ஆச்சரியமான விடயமே.

இந்தத் தன்னம்பிக்கைப் பெண்மணி திருமதி. உமா அவர்கள் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இலங்கை கைப்பணி சபையில் ஆசிரியையாகக் கடமையாற்றியவர். இரண்டு பெண் குழந்தைகளுக்கும் வயிற்றில் கருவாக இருக்கும் சிசுவுக்கும் தாயான திருமதி. உமா தற்போது ஸ்கந்தபுரத்தில் வசித்து வருகிறார்.

தமிழீழப் போராட்டத்தின் புதிய திருப்புமுனையாக முகம் காட்டி நிற்பது கிராமிய, எல்லை, சிறப்பு எல்லைப் படைகளின் தோற்றமே. சாவு வந்து முத்தமிடும் களங்களில், களக்கரைகளில் கண்விழித்திருக்கும் கடமை போராளிகளுக்கு மட்டுமே என்ற நிலை மாறி மக்கள் அந்தக் கடமையை, சுமையை தம் தோளேந்தி நிற்கும் இந்த வரலாற்றுத் தருணத்தில் தாமும் பங்கேற்க வேண்டும் என்ற அவா திருமதி. உமாவிற்கும் அவரது கணவரான அப்பன் அவர்களுக்கும் இருந்தபோதும் அப்பன் அவர்களே முதலில் தயாராகிறார். எல்லைப்படையாக களமிறங்கிய அப்பன் அவர்கள் ஒரு புதிய வரலாற்றை ஆரம்பித்து வைத்த பெருமையுடன் எல்லைப்படையின் முதல் மாவீரராக வீரச்சாவைத் தழுவிக் கொள்கிறார்.

ஈடு செய்யவே முடியாத இந்த இழப்பில் இருந்து மீளுதல் என்பது திருமதி. உமாவைப் பொறுத்தவரை சாத்தியமற்ற விடயமே. எனினும் தனது கணவனின் உயிர்த் தியாகத்தை தேசவிடுதலையின் தேவைக்கு தனது குடும்பம் கொடுத்த பங்களிப்பாகவே எண்ணித் தனதும், குழந்தைகளினதும் எதிர்காலத்திற்காகத் திட்டமிடுகிறார். எம் தேசத்தின் தேவைகள் மாலதிகள், நளாயினிகள் மட்டுமல்ல உமாக்களும்தான்.

www.tamilanangam.net

# அடைகாத்த வ...
# அலை எழுந்...

சென்ற இதழ் தொடர்ச்சி....

லெப். பிரபாவைப்போல மிகக் கடுமையாக வேலை செய்யக்கூடியவர்களைத் தேடித்தான் பிடிக்கவேண்டும். ஒருமுறை பாரப் பொதிகளுடன் 20 கிலோமீற்றர் ஓடிமுடிய, சூட்டுப்பயிற்சிக்காக தளத்திலிருந்து ரவைகளைக் கொண்டுவர வேண்டியிருந்தது. உடனேயே பிரபா ஓடிப்போய் (பயிற்சியிடத்திலிருந்து தளம் நீண்ட தூரத்துக்கப்பால்) எடுத்து வந்தார். அவரின் சோர்வில்லாத இயல்புக்கு இதுவொரு சிறு எடுத்துக்காட்டு. 1997 ஆனையிறவு-பரந்தன் ஊடுருவித் தாக்குதலில் காலில் காயமுற்ற இவர், ஒரு நல்ல ஓட்டக்காரி, போட்டிக்காக ஓடிக்கொண்டிருக்கும் போது எப்போதும் முதலாவதாக ஓடும் இவரை தற்செயலாக யாரும் முந்திவிட்டால், உடனேயே ஓட்டத்தை நிறுத்திவிடுவார். கப்டன் இளவரசியின் பதுங்கிச்சுடும் உதவியாளராக இவர் பணியாற்றினார். இவர் முதன் முதலாகத் தன் பதுங்கிச்சுடும் துப்பாக்கியால் சுட்டு விழுத்தியதே எதிரியின் பதுங்கிச் சூட்டாளன் ஒருவனைத்தான்.

எத்தனை தோழிகள் உன் நிழலில் விழிமூடினர். எங்கள் அருமையான அடர் வனமே!

மிகத் திறமான சண்டைகளையெல்லாம் நீ அருகிருந்து பார்த்திருக்கின்றாய். உன்னிடம் வந்து சண்டை பழகியவர்களும், உன் மடியில் கண்ணுறங்கியவர்களும் உனது பெறுமதியை விலைமதிக்க முடியாததாக உயர்த்திவிட்டிருக்கிறார்கள். நீ எங்களுக்கு நிழல் தந்தாய். நாங்கள் உனக்கு நிகரில்லாத பெருமையைத் தந்தோம்.

லீமா 07 பாசறைப் போராளிகளை நீ நிச்சயம் மறந்திருக்கமாட்டாய். காடு பற்றிய பயத்தை நீதான் அவர்களிடம் இல்லாமலாக்கினாய். ஆனாலும், நீ சற்று மோசம் தான். அரை இருட்டில் உன்னிடத்துக்கு அவர்களை அழைத்து வந்த நாம், அவரவருக்குரிய நிலைகளில் ஒவ்வொருவரையும் விட்டபோது முழு இருட்டு. புதியவர்களிடம் நீ சற்று விட்டுக்கொடுத்து நடந்திருக்கவேண்டும். உனக்கு அந்த யோசனையே வரவில்லை. அவர்களுக்கு அவர்களின் பாட்டிகள் சிறு வயதில் அறிமுகப்படுத்திய ஒற்றைக்கால் முனிபோலவும், உம்மாண்டி போலவும் பாவனை காட்டி, விடிந்தாலும் வெளிச்சம் வராத பாதாள மொன்றில் நிற்பதுபோல் பிரமை ஊட்டி, இரவிரவாக அவர்களை நீ படுத்திவிட்டபாடு இருக்கிறதே அப்பப்பா!

ஆனால் விடியும் சூரியனின் தலையைக் கண்டதும் உன்னை ஒருமுறை மேலும் கீழும் பார்த்துவிட்டு,

'அட! இதுதானோ காடு!'

என்று அவர்கள் கேட்டபோது உன் முகம் போன போக்கு இருக்கிறதே, ஒன்றுமே உன்காதில் விழவில்லை என்பதுபோல் உன் பாட்டுக்கு நிற்க நீ முயற்சித்ததும், ஆனால், உன் கிளைகள் நேராக நிற்கமாட்டாமல் ஒன்றுடன் ஒன்று உரசி ஒலி எழுப்பி உன் பதட்டத்தை எங்களுக்கு வெளிப்படுத்தியதுவும், நீ தாங்கவே முடியாமல் உன் காய்ந்த இலைகளை உதிர்த்துக் கொட்டி அசடு வழிந்ததும், இலகுவில் மறந்து போகக்கூடிய விடயங்களில்லை. எங்கள் இனிய நண்பனே, எல்லாம் உனக்கும் எங்களுக்குமிடையில் மட்டும்தான்.

வந்த புதியவர்களில் இன்குறிஞ்சியையும் இன்பச்சுடரையும் உனக்கு நினைவிருக்கின்றதா?

1998-06-17 அன்று அவதானிப்பு நிலையில் நின்ற 2ம் லெப். இன்குறிஞ்சி முதலில் எதிரியைக் கண்டு அடியைத் தொடக்கி விட்டார். இவரின் அடியைத் தொடர்ந்து பின்னாலிருந்த காவலரண் போராளிகளும் அடிக்கத் தொடங்கினர். இன்குறிஞ்சி அவதானிப்பு நிலையில் நின்றவாறே முழு ரவைகளையும் அடித்துவிட்டு நெஞ்சில் பட்ட காயத்துடன் எழும்பி காவலரணுக்கு ஓடிவந்து விழுந்தவர் எழும்பவில்லை.

இதற்கிடையில் தன் நிலையில் முன் குவிந்து நின்ற எதிரிமீது எறிகணை வீசுவதற்காக நோக்கு கணிப்பாளரை அழைத்துவரவென வெளியே வந்த வீரவேங்கை இன்பச்சுடர் ஒருமுறை திரும்பிப் பார்க்கவும், எதிரியின் RPG எறிகணை ஒன்று அவரைத் தேடி வரவும் சரியாக இருந்தது.



இரண்டு போராளிகளின் இழப்புடன் எதிரி நடவடிக்கையை நாம் முறியடித்த அன்றைய நாள் உன்னிலும் கலகலப்பு இருக்கவில்லைத்தான். எங்கள் உணர்வோடு ஒன்றிவிட்ட உன்னைவிட்டுச் சிலகாலம் நாங்கள் பிரிந்திருக்க நேரிட்டது. ஓயாத அலைகள் -2க்காகக் கடும் பயிற்சி எடுத்து, பேரலையாய் சுழன்றெழுந்து, கிளிநொச்சியில் குடிகொண்டிருந்த பகையைத் துடைத்தழித்து, உரிமை நிலத்தை மீட்ட பூரிப்பில் உன்னைச் சிலகாலம் மறந்துதான் போனோம்.

மறுபடியும் உன் மடிக்கே வந்தோம். இப்போது லீமா பாசறைப் போராகளிகள் புதியவர்களாய் உன்னிடம் வந்தார்கள். இரவிரவாக நிலைகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். எதிரிக்கு எதுவுமே தெரியாது. காலையில் வழமைபோல உலாவந்த மூவர் இவர்களிடம் வகையாக வாங்கிக்கட்டிக் கொண்டு பறந்துவிட்டார்கள்.

அவ்வளவு நாளும் இல்லாது திடீரென வந்திறங்கிய நாம் எங்கெங்கே நிலை கொண்டிருக்கின்றோம் என்று பார்த்துவரும் இராணுவத்தினரோடு ஏற்படும் சிறு சிறு மோதல்களில் பங்குகொண்ட புதியவர்கள், சண்டைக்குப் பழையவர்கள் ஆனார்கள்.

பெரிய சண்டைகள் என்று இல்லாததால் மறுபடியும் ஆறுதலாயிருந்து ஆயிரம் கதைகள் கதைத்தோம். காலத்துக்குக் காலம் நீ காட்டிய கோலங்களில் ஆச்சரியமும் வியப்பும் அடைந்தோம். உன்னுடைய இரகசியங்கள் சிலவற்றை அந்த மழைக் காலத்தில் தெரிந்து கொண்டோம்.

காட்டில் ஒரு கிலோ மீட்டருக்கும் அப்பால் பெய்தவாறு வந்து கொண்டிருக்கும் மழையின் சத்தம் இருக்கின்றதே. அதை ரசித்தோம். தலைக்கு மேலேயே மழை பெய்தபோது நனைந்தோம். தற்காலிகமாக நாம் அமைத்த குடில்களின் கதியால்களை வெள்ளம் அசைத்து விழுத்த கூரையைக் கைகளால் பிடித்தவாறு நின்று எங்களை நினைத்துச் சிரித்துக்கொண்டோம். மழைவிட்டதும் புதிய கதியால்கள் வெட்டுகிறோம் பேர்வழி என்று உன்மேல் கத்தியை ஓங்கிய ஒவ்வொரு தடவையும் இலைத் தண்ணீரில் நனைந்தோம்.

போகும்போது அமைதியாக ஓடிக்கொண்டி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# ...ழும் ...விதமும்

...ருந்த அருவி, திரும்பி வரும்போது எங்கோ பொழிந்த மழையால் திடீரெனப் பெருகிய விடயம் புரியாமல் அரை இருட்டில் சடாரென இறங்கி பாதணிகளைப் பறிகொடுத்ததும், சில நேரம் ஆளே விழுந்து புரண்டு அவஸ்தைப்பட்டதும்.....

போகும்போது, சாதாரணமாயிருந்த இடத்தில் திரும்பி வரும்போது அருவியாகத் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்க, திகைத்துப் போய் பாதை மாறிவிட்டோமா என்ற பயத்திலேயே பாதை மாறி அலைந்து....

மிக அருகில் தேங்கி நிற்கும் தண்ணீரை இரவில் விலங்குகள் வந்து 'சளக் சளக்' என்று குடிக்கும் ஒலியை மெல்லிய பயத்தோடு கேட்டு...

வசந்தகாலத்தில் நீ புதிய பச்சையாடையுடன் கம்பீரமாக நின்றதைப் பார்த்துச் சற்றுப் பொறாமைப்பட்டு....

எம்மோடு குறும்பு செய்வதற்காக என்றே புதிதாக நீண்டு தொங்கிய உன் கொடிக் கரங்களை கிளைகளின் பின்னால் வளைத்துவிட்டு, நேர்ந்த காட்டு வாசிகளைப்போல வாழப் பழகிக்கொண்டோம். உன்னூடே கேட்கும் எதிரியின் ஒலிகளை வைத்து, அவன் பெரும் எடுப்பு ஒன்றுக்குத் தயாராகப் போகின்றான் என்று புரிந்துகொண்டோம். எதிர்கொள்ள நாமும் தயாரானோம்.

பகைவரை எதிர்கொள்ள வருமாறு எல்லோரையும் கேட்டோம். போராட்டத்திலிருந்து இயல்பு வாழ்வுக்குத் திரும்பியிருந்தோரையும் வருமாறு கேட்டோம். முடிந்தளவு பலத்தைத் திரட்ட முடியுமானவரை முயன்றோம்.

வந்தவர்களில் 2ஆம் லெப். நிஷாந்தி வித்தியாசமானவர். 'நெருக்கடி தீரும் காலம்வரை பணியாற்றிவிட்டு திரும்பிச் செல்ல விரும்புகிறேன்' என்று சொல்லியவாறு வந்தார். லீமா 06 பாசறையில் பயிற்சி எடுத்து, சோதியா படையணியில் PKLMGயுடன் சண்டைக்குப்போய், காயமடைந்து வீடுசென்று, பின் அமைப்புடன் இணைந்து LMGயுடன் களங்களில் நின்று வீடுசென்றவர், மறுபடியும் எம் அழைப்பை ஏற்று வந்திருந்தார். அணியொன்றின் 2ஆவது பொறுப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். எப்போதும் சிரித்துக்கொண்டேயிருக்கும் சந்தோஷமான போராளி அவர்.

1999-06-08 அன்று காலை காவல் உலா போய்க்கொண்டிருந்த அணியின் முன்னணியில் நகர்ந்து கொண்டிருந்த நிஷாந்தி முதலில் எதிரியைக் கண்டு, பின்னால் வந்தவர்களுக்குச் சைகை காட்டிவிட்டு அடிக்கத் தொடங்கினார். பின்னால் வந்தவர்களும் அடிக்க, அதற்குள் மேஜர் சிவகுமாரியும் தன் PKயுடன் ஓடிவந்து அடிக்க, எதிரி சுட்டுச் சுட்டுக்கொண்டே ஓடிவிட்டான். துப்பாக்கியைத் தன்கீழே வைத்துப் படுத்தவாறு வீரச்சாவடைந்திருந்த நிஷாந்தியின் நெஞ்சில் 7 ரவைகள் பாய்ந்திருந்தன.

அடர்வனமே! உன்னை மட்டுமல்ல, எங்களையும் நிஷாந்தியின் இழப்பு உலுப்பிவிட்டிருந்தது. மாலதி படையணியின் கடைசி அரணில் நின்ற நிஷாந்தி தனக்கு அடுத்துள்ள அரண்களுக்குரிய ஆண் போராளிகளின் பொறுப்பாளர் தன்னை நேசித்த போராளி என்பதை கடைசி நாட்களில் மிகத் தற்செயலாக அறிந்துகொண்டதையும், அதன் பின்னர், ஓரிரு தடவைகள் சந்திக்க நேர்ந்த போதும்கூட பார்த்தும் புன்னகைப்பதுடன், நின்றுவிட்டதாகவும், தனக்கு மேற்பட்ட பொறுப்பாளர் தன்னை நம்பி ஒரு பணியை ஒப்படைத்திருக்கும்போது வழமையான நடைமுறைகளை மீறி, தான் நடக்கக்கூடாது என்று தன்னுடன் நின்றவர்களிடம் சொன்னதாகவும் தாமதமாக அறிந்து சிலிர்த்துப் போனோம் அம்பகாமக் காடே.

நிஷாந்தியைப் போலவே 2ம் லெப். அத்தியரசியும் அவசர அழைப்பையேற்று வந்தவர்தான். காப்பரணுக்குரிய மற்றவர்கள் ஒவ்வொரு வேலைக்குமாகத் தள்ளித் தள்ளிப் போய்விட, காவற்கடமையில் தனியாக நின்ற அத்தியரசி பின்புறமாகப் போய்க்கொண்டிருந்த எதிரியைக் கண்டு சுடத்தொடங்கினார். எதிரியும் சுட ஆரம்பித்தான். தூரத்தில் நின்ற எம்மவர்கள் சத்தம் கேட்டு ஓடிவந்து சுடத்தொடங்க, தனக்கு பின்புற அடி விழத் தொடங்கியதும், எதிரி அத்தியரசி நின்ற நிலைக்கு மேலால் பாய்ந்து தன் பகுதியை நோக்கி ஓட முற்பட்டான். தனியாக நின்று கொஞ்ச நேரம் சண்டை பிடித்ததால் தன்னுடைய ரவைகள் முழுதும் முடிவடைந்த நிலையில் பின்னால் நடந்த சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த அத்தியரசி, சண்டையை நிறுத்திவிட்டு தன்னை நோக்கி இராணுவம் ஓடிவரத் தொடங்க, சயனைட்டை உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். (1999-08-12)

தற்செயலாக்கூட, எதிரி தன்னை பிடித்துச் செல்லக்கூடாது என்று தன்னை அழித்துக் கொண்ட அத்தியரசியும் உன் மடியில்தான் கண் மூடினார் அம்பகாம அடர்வனமே!

எதிரி ஏதோ அமர்க்களப்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்பது எமக்கு மிக நன்றாகப் புரிந்துவிட்டதால், என்ன நடக்கின்றது என்று நிலமை பார்த்துவர எம்மவர்கள் புறப்பட்டார்கள். எதிரியின் எல்லையை வெவ்வேறு இடங்களால் போய்ப்பார்த்து வந்தார்கள். எதிரியின் வெளிப்புற அமைப்பு ஓரளவு புரிந்துவிட்டது. அன்று எதிரியின் தடைக்கம்பிச் சுருளை நேரடியாகப் போய்த் தொட்டு நிலமை பார்த்து வரவென மேஜர் பரா புறப்பட்டார்.

சட்டெனக் கோபம் வருகின்ற, மிக மென்மையான, கடும் இறுக்கமான அதேநேரம் இரக்கமான மேஜர் பராவும் அவரின் சகோதரி கப்டன் ஹேமாவும் 1990இல் ஒன்றாகவே அடிப்படைப் பயிற்சி எடுத்து, ஒன்றாகவே கனரக ஆயுதப் பயிற்சிக்குப் போனார்கள். FN MAG உடன் 1995இல் மணலாற்றில் அமைந்திருந்த 5 சிறுதளங்கள் மீதான தாக்குதலுக்குப் போன கப்டன் ஹேமா தன் சகோதரியிடம் திரும்பி வரவில்லை. பிறண் LMGயுடன் நின்ற பரா, தங்கையின் வீரச்சாவின் பின் போர்ப் பயிற்சி ஆசிரியரானார். 1997 ஆனையிறவு-பரந்தன் ஊடுருவித் தாக்குதல், ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கைச் சமருக்கான தயார்ப்படுத்தல், ஓயாத அலைகள்-2 என்பவற்றுக்கான போர்ப் பயிற்சிகளைக் கொடுத்து, நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டார். ஒரு இடத்தில் இருக்கவே மாட்டார். ஓடித்திரிந்து வேலை செய்து கொண்டேயிருப்பார். கொம்பனிப் பொறுப்பாளராக அவரின் பின்னே அவரது அணியும் மிகச் சுறுசுறுப்பாக இயங்கும்.



தொடரும்..



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# தெரு

பனை மரங்கள் அசைவற்று நின்றன. ஒரு மரங்கொத்தி வட்ட மரத்தை அலகால் குத்திப் பொந்து போட்டுக் கொண்டிருந்தது.

'வயிறு நோகுதப்பா.... என்னால தாங்க முடியுதில்லையே.....'

விம்மிக்கொண்டே கண்ணீர் தலையணையை நனைக்க, பாயில் புரண்டு துடித்தாள் அவள்.

பிள்ளைப் பேறு.

ஊரெல்லாம் வீட்டுச் சுவருக்குள்ளே அடைபட்டுக் கிடந்த அந்த 1987 கார்த்திகையில், அவன் வெளியே எட்டிப் பார்த்தான். வானம் இருண்டு கிடந்தது.

எங்கோ பத்து வீடு தள்ளி இந்திய வெறிப் படையின் பீரங்கிக் குண்டு விழுந்து வெடித்த போது, எழுந்த பேரோசையில் நடுங்கியவனாய், மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தான். வயிற்றைப் பொத்திப்பிடித்தபடி அவனை அண்ணாந்து பார்த்து 'ஓ' என்று அழுதாள் அவள்.

புத்தூரில் இருந்து யாழ்ப்பாணம் மருத்துவ நிலையத்திற்கு பத்துக்கட்டை போயாக வேண்டும். இந்த நேரத்தில் எப்படிப்போவது? எவன் காரை வடகைக்கு விடப்போகிறான்? வழி நெடுகிலும் இந்தியப் படை வெறியர்கள் நிற்கிறார்களாம். யாழ்ப்பாண மருத்துவ நிலையம்கூட இப்போது அவர்கள் கையில்தானாம், தலை சுற்றி, முகமெல்லாம் அவனுக்கு வியர்த்துக்கொட்டியது.

புத்தூரில் அது புதுக்குடும்பம். இதுதான் அவளுக்குத் தலைப்பிள்ளைப் பேறு. அறுவடை நேரத்தில் நெற்பயிர் ஒன்று கதிர் கருகிவிடும் போல சுருண்டு வளைந்து துடித்துப் போராடுகிறது. தமிழீழம் முழுவதையும் எரித்துக் கொண்டிருக்கும் நெருப்பின் அலைகள் ஓங்கி வீசுகின்றன.


புலிப்படை பழையபடி தலைமறைவு இயக்கமாகி விட்டதாம். இந்தியப் படைக்கு நல்ல அடியாம். நூற்றுக்கணக்கில் இந்தியப்படை வெறியர்களின் பிணங்கள் விமானங்களில் போகின்றனவாம். இந்தியப்படைபோடும் வெறியாட்டத்துக்கு புலிகள் வேறு எப்படித்தான் பரிசு கொடுப்பார்கள்? பெண்களை எல்லாம் அம்மணம் ஆக்கி- கெடுத்து- கணவன்மார்களைக் கொன்று - மொத்தத்தில் மகாத்மாகாந்தியையே இந்தியப்படை கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

புத்தூரில் தெரிந்த நாலு 'கார்'க்காரர்களை அணுகி, 'அவளுக்கு நோவு தொடங்கிற்றுது பாருங்கோ- யாழ்ப்பாணம் போக வேணும்....' என்று கலங்கிய கண்களோடு கெஞ்சினான் அவன். எல்லோரும் துடித்தார்கள். ஆனால், உதவுவதற்கு அவர்கள் மனம் விரும்பினாலும், விட்டுவிட்டு அதிரும் அந்தத் துப்பாக்கிகளின் கொடுமையான வேட்டோசை... பாவம்.... அவர்களும் மனிதர்கள்... 'இந்த நேரத்தில் எப்படியப்பா' என்று முனகினார் ஒரு கிழவர்.

அவன் தொங்கிய தலையோடு வீடு திரும்பினான்.

வாசலை நெருங்கும்போதே அலறல் ஓசை கேட்டது. அவள் துடிக்கிறாள்... துடியாய்த் துடிக்கிறாள்... யாழ்ப்பாணத்துச் செம்பாட்டு மண்ணைப் போல் முகமெல்லாம் சிவந்தது.

பெட்டியோடு சிற்றுழவுப்பொறி ஒன்று தோட்டத்துக்குப் பக்கத்தில் நின்றது. 'லான்ட் மாஸ்டர்' என்ற பெயரில், உழவுக்கு ஒரு காலத்தில் சிறீலங்கா அரசு அறிமுகப்படுத்திய உழவுவண்டி அது.




மனைவியை இதில் ஏற்றிக்கொண்டால் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து விடலாம். ஓடிப்போய் அதில் ஏறி, அவனே வண்டியை வாசலில் கொண்டுவந்து நிறுத்தினான். அவனுக்கு அதை ஓட்டத் தெரிந்திருந்தது.

வீட்டுக்குப் பக்கத்தில் ஆடுகள் தெருவோரத்தில் காய்ந்துபோய்ப் படுத்துக் கிடந்தன. ஆடுகளுக்குப் பலா இலைச் சருகு பொறுக்கிப்போடும் கிழவர் எங்கே போனாரோ தெரியவில்லை. யார்தான் தெருவில் இருக்கிறார்கள்....? மனிதர்களே இல்லாத 'வெறிச்,சென்ற பாலைவனம் தெருவாகிக் கிடக்கிறது.

போன ஓர் ஆண்டு காலத்தில் இந்தத் தெருவால் அவனும் அவளும் பலமுறை பயணம் போயிருக்கிறார்கள். அது புலிகள் கையில் யாழ்ப்பாணம் இருந்தகாலம். திருமணம் ஆகி குனிந்த தலை நிமிராமல் இதே தெருவால் தானே அவள் போனாள்.... ஒருமுறை, சிங்களப் படைவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப் புலித்தளபதி லெப். கேணல் ராதாவின் வீர உடல் இதே தெருவால் ஊர்வலம் போனபோது, அவள் தெருவில் நின்று கண்கலங்கியிருக்கிறாள். அப்போது அவளைப் பார்த்துச் சொன்னது அவனுக்கு நினைவிருக்கிறது.

'நமக்குப் பக்கத்துலை இந்தியா இருக்கிறதைச் சிங்களவன் மறந்திட்டான்... இந்தியப்படை ஒருநாள் இங்கைவந்து நம்மை எல்லாம் காப்பாத்தும்... இருந்து பார்!'

பெரிய வெடிகுண்டு ஒன்று எங்கோ அதிர்ந்து வெடித்தது. உழவு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தவன் அசைந்து திரும்பிப் பார்த்தான். அவள் காதைப் பொத்தியபடி பெட்டியில் நடுங்கிக் கொண்டிருந்தாள். 'இந்தியப் படை சுடுகுது போலை..... பயமா இருக்குதப்பா. ஐயோ வயிறு நோகுதே...!' அவளின் ஓலம் வண்டி இரைச்சலிலும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

ஒரு கட்டை தூரத்தை வண்டி தாண்டி ஆயிற்று, தொலைவில் காக்கி உடைகளின் நடமாட்டம் தெரிவதை இப்போது அவன் கவனித்தான். இந்தியப்படை தடை போட்டிருக்கிறதுபோலத் தெரிகிறது. வேகத்தை மெல்லக் குறைத்து நத்தையைப்போல் வண்டியைச் செலுத்தினான். என்ன நடக்கும்? உடல் படபடக்கத் தொடங்கிற்று.

'ஸ்ராப்!' ஆங்கிலத்தில் யாரோ கத்தினார்கள்.

வண்டியை நிறுத்தினான். துப்பாக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

கிகளோடு நாலு திசைகளிலும் இருந்து நூற்றுக் கணக்கில் திடுதிடு என்று இந்தியப் படை வெறியர்கள் ஓடிவருவது தெரிந்தது. இத்தனைபேர் யாழ்ப்பாணத்திலா! ஒரு மீசைக் காரன் துப்பாக்கி முனையை நேரே மார்பில் வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டான். என்ன செய்வது? தளதளத்த குரலில் அவன் முனகினான்....

'இவள் கர்ப்பிணி ஐயா... பிள்ளைப் பேறு... யாழ்ப்பாணம் ஆசுபத்திரிக்குப் போக வேணும்...' ஒரு முரடன் 'ஓ!!' என்று வாய் கிழியச் சிரித்தான். அவர்கள் எல்லோரும் உழவுப்பொறியின் பின்னால் இருந்த பெட்டியை மொய்க்கத் தொடங்கினார்கள்.

வெறிபிடித்த காக்கிச் சட்டைக்காரன் ஒருவன் அவள் மார்பைக் கையால் இழுத்துப் பிடிக்க, அடுத்தவன் அவள் முகத்தைத் தடவத் தொடங்கினான். 'அம்மா' என்று கத்திக் கொண்டே மயங்கி விழுந்தாள் அவள். அவ னும் கூடவே 'அம்மா!' என்று கூச்சலிட்டான்.

அமைதி நிலவிற்று. தோய்த்துக் கசக்கிப் போட்ட துணியைப் போல் அவள் சுருண்டு கிடந்தாள்.

நெஞ்சில் இருந்த துப்பாக்கியைத் தளர்த்தி அவனைப் பார்த்து, 'சரி, நீ போகலாம்' என்று கட்ட ளையிட்டான் மீசைக்காரன். மெதுவாக வண்டி தடை தாண்டி நகரத் தொடங்கிற்று. 'இது என்ன கொடுமை!' வண்டியை ஓட்டியவன் கண்களில் ஆறாக நீர் பொங்கிப் பாய்ந்தது.

ஒரு கட்டை தூரம் தாண்டித் தெருவோரத் தில் வண்டியை நிறுத்திவிட்டு, பக்கத்து வீட் டில்போய் தண்ணீர் வாங்கிவந்து அவள் முகத் தில் தெளித்தான் அவன். மெதுவாகக் கண் களைத் திறந்தவள், வயிற்று நோவால் மீண்டும் 'ஓ' என்று அலறத் தொடங் கினாள். தண்ணீர் கொடுத்த வீட்டுக்காரக் குடும்பம் வீட்டுக்கு வெளியே வராமல், வேலிக்கு உள்ளேயே நின்று இரங்கி முனகியது.

'பல்லைக் கடிச்சுத் தாங்கிக்கொள்.... எப்ப டியோ யாழ்ப்பாணம் போயிடலாம்....' என்று தலையை வருடிவிட்டான் அவன். 'வேணா மப்பா.... வீட்டுக்கே போயிடுவம்... இந்த மிரு கங்களை இன்னொரு தடவை பார்க்கக் கூடாது... ஐயோ!' வயிற்றைப் பொத்திக் கொண்டு அவள் மீண்டும் கத்தினாள்.

அவன் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

அவளுடைய உடல்நிலை அவனுக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தை நோக்கி வண் டியைச் செலுத்தினான். முரட்டுவேகத்தில் வண்டி இயங்கிற்று, ஆற்றலுக்கு மேலே வண் டியின் சில்லுகள் சுழன்று கதறின. தொடர்ந்து வந்த மூன்று தடைகளையும் அவர்கள் நெருப் பைக் கடப்பது போலவே தாண்டினார்கள். ஒரு தடையில் அவள் வயிற்றை தடியன் ஒருவன் விரல்களால் அமுக்கிப் பார்த்த போது, அவள் இரண்டாவது தடவை மயங்கி விழுந்ததைக் கண்டு அவன் விம்மிவிம்மி அழுதான். இம்முறை அவள் தானாகவே மயக்கம் தெளிந்தாள். ஐந்து கட்டைத் தூரத்தை எப்படியோ கடந்து, கோப்பாயை இப்போது அவன் வண்டி நெருங்கிக்கொண்டிருந்தது.

பாதிவழிப் பயணம் முடிந்தாயிற்று. கண்க ளைக் கூர்மையாக்கிக்கொண்டு நன்றாக உற் றுப்பார்த்தான். தூரத்தில் தெளிவாகத் தெரிந் தது. மீண்டும் வேகத்தைத் தொடங்கினான்... இங்கே என்ன நடக்கும்? முந்திய தடைகளில் கண்ணுக்கு முன்னாலேயே மனைவிக்கு நிகழ்ந்த கொடுமைகள் நெஞ்சை உலுக்கி எடுத்தன. புயலைநோக்கி அவன் வண்டியைச் செலுத்துகிறானா? தெருஓரத்தில் ஒரு சொறி நாய் பட்டப்பகலில் மாறிமாறி ஊளையிட்டது. தடைமுகாமுக்குப் பக்கத்தில் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான் அவன்.

ஆங்கிலமும் - இந்தியும் ஏதேதோ கூச்ச லுமாய் அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து வருவதை இப்போது அவர்கள் பார்த்தார்கள்.

இந்திய வெறிப்படை தன் வழமையான காட்டுமிராண்டித்தனத்தில் இறங்கிற்று. வான த்தை நோக்கி ஒரு முரடன் துப்பாக்கி வேட்டுக்களை மளமளவென்று தீர்த்தான். கூட்டமாக அவர்கள் வண்டியை மொய்த்துக் கொண்டார்கள். 'பாரத் மாதா கீ ஜெய்!' வான த்தை இடித்த முழக்கத்தோடு ஒருவன் துப்பாக் கியால் ஓங்கி முகத்தில் அடிக்க, கீழே விழுந்த கணவனைப் பார்த்து, 'அவரை அடி யாதீங்கோ!' என்று முழுவலிமையையும் திர ட்டிக் கூச்சலிட்டாள் அவள். சண்டாளர்கள் அவள் பக்கம் திரும்பினார்கள்.

கையைக்கொடுத்து ஒருவன் அவளை வெறித்தனமாகப் பெட்டியில் இருந்து கீழே இறக்கினான். 'அவள் கர்ப்பிணி பாருங்கோ, அவளைத் தொடாதீங்கோ!' நிலத்தில் இரத் தம் தோய்ந்த முகத்தோடு கிடந்து கத்திய அவன் குரலை யாருமே பொருட்படுத்திய தாய்த் தெரியவில்லை. 'சேலைக்குள்ளே குண்டு இருக்குதா?' ஒரு வெறியன் குடி போதைச் சிரிப்போடு, அரைகுறைத் தமிழில் அவளைப் பார்த்துக் கேட்டான். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

'சேலையை உயர்த்து!' என்று கத்தினான் ஒருவன். 'பாவிகளே ஐயோ! ஐயோ?' என்று அவள், தலையில் அடித்து ஓலமிட்டாள். எல்லாம் முடிந்துவிட்டது. வதைகளைச் சுமந்த சடலமாய் அவள் வானத்தை விறைத்துப் பார்த்த கண்கள் மூடாமல் அசை வற்றுக்கிடந்தாள்.

முகத்தைக் கைகளால் பொத்திப் பிடித் துக்கொண்டு, ஒரு சின்னஞ்சிறு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் அவன் தேம்பித்தேம்பி அழுதான்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net





# இலக்கிய

# இடர்நடுவே எ

நாட்டார் இலக்கியம் உலகின் எல்லா இனங்களிடையேயும் பேணப்பட்டுவருகின்றது. பாரம்பரிய கலை வடிவங்கள் இந்த நாட்டார் இலக்கியங்களிலிருந்தே பிறந்துள்ளன.

தமிழீழத்தின் நாட்டார் இலக்கியங்கள், இசை, நாடகம், கூத்து, கதை, பழமொழி, விடுகதை எனப்பல வடிவங்களில் பேணப்பட்டு வருகின்றன. தமிழர், இசையோடு பிறந்து, இசைபட வாழ்ந்து, இசையோடு இறக்கும் மாண்புள்ளவர்கள். பிறந்தபோது தாலாட்ட, தவழும்போதும், நடக்கும்போதும் பாட்டு, பாலர் பாட்டு, கும்மி, கோலாட்டம், பந்தாட்டம், ஊஞ்சலாட்டம், வேலை செய்யும் போதும் பாடல், கல்யாணப்பாடல், வாழ்த்துப் பாடல், வழிபாடல், இறந்தால் ஒப்பாரி இப்படி இறுதிவரை பாடல் தமிழரின் உயிரோடு ஒன்றியுள்ளது. இசையோடு பிறந்த அசைவே நாடகமாகி துடிப்பான அசைவில் கூத்தாக மருவியது.

பாடசாலைகள் இல்லாத காலத்து, குருகுல முறைக்கல்வியின் எச்சமாகவே இவை இருந்தன எனலாம். நமது தமிழ்ப் பாரம்பரியத்தில் வளர்ந்த நாட்டார் இலக்கியங்களுள் பல சரித்திர நிகழ்வுச் சான்றுகள் பொதிந்தவை. காலங்காலமாக எம்மை அடக்கியாண்ட அன்னியரின் செயற்பாடுகளால் இற்றுப்போன கலைவடிவங்களுடன், ஆவணங்களும் அடங்கிப்போயின. ஆனால், வாய்வழி பேணப்பட்ட இலக்கியங்களே இவற்றைப் பாதுகாத்து எமக்களித்தன என்பது ஒரு உண்மை. இது இப்படியிருக்க, வாய்மொழி இலக்கியம், வாய்மொழியாகவே இருக்கவேண்டும் என்ற கருத்தும் இதுவே நாட்டார் இலக்கியத்துக்கான வரையறை என்பதும் நிலவிவருகின்றது.

இவை வளரும் களங்களாக கோவில்கள், வீதிகள், வேலைத்தலங்கள் என்பன அமைந்தன. நாட்டு நடப்புகள் பெரும்பாலும் பாடல்களாயின. வெள்ளையர் ஆட்சியிலேயே அதிக பாடல்கள் உருவாயின. தொடர்ந்து மலையக மக்களின் துயரங்கள் பாடல்வரிகளாயின.

**'சுண்ணாகச் சந்தையிலே பறங்கிக்கு**
**முன்னூறு கோழிமுட்டை'**

போன்ற பாடல்கள் வெள்ளையரின் வரவை வியந்தும்

**'பாசிமணி ஊசியெலாம்**
**வாங்கலையோ ஆயாளு'**

என்ற பாடல்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மக்களையும் குறிப்பதுபோல், உழைக்கும் மக்களின் அகவாழ்வுச் செம்மையின் சான்றாக பள்ளு இலக்கியங்களும் எழுந்தன. இலங்கை சுதந்திரம் பெற்றது. தொழில் தேடியும் வெள்ளையரால் அழைத்து வரப்பட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் மலையகப்பகுதியில் குடியேறினர். இவர்களை சிறீமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் நாட்டிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நூறு வருடங்களுக்கு முற்பட்ட பரம்பரையினர் பலர் இலங்கைப் பெண்களையோ ஆண்களையோ திருமணம் செய்து குழந்தைகளும் பெற்றிருந்தனர். அவர்கள் ஈவிரக்கமின்றிப் பிரிக்கப்பட்டனர். இலங்கையில் பிறந்த குழந்தைகள் இலங்கையிலும், இந்தியாவில் பிறந்த பிள்ளைகள் இந்தியாவுக்கும் அனுப்பப்பட்டனர். இது சார்பாக ஏராளமான நாட்டார் பாடல்கள் உருவாயின. காதலன் ஒருவன் 'கள்ளத் தோணி' எனப் பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்படும் நேரம், தன் காதலியிடம் விடைபெறுகிறான். கப்பல் துறைக்கு மன்னார் ரயிலில் புறப்பட மனமில்லாமல் பாடுவதாக அமைந்த பாடல்

**'மன்னாருக் கோச்சியேற**
**மனசு சரியில்லே – என்**
**மனசுக்குகந்த கண்ணே உன்னை**
**மறக்கமுடியவில்லை – அடி**
**வாழவந்த பெண்ணே – என்னை**
**மதிமயக்கிய கண்ணே!**
**பூமரத்துச் சிட்டே! – என்**
**புனுகுச் சாந்துப் பொட்டே...'**

எனத் தொடர்கின்றது. இவை காலத்துக்குக் காலம் இயற்றப்பட்ட பாடல்களேயாம். சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள், கூத்துக்களின் இடையே வரும் பாத்திரங்களால் பாடப்பட்டுப் பரப்பப்பட்டன.

**'கள்ளுச் சாராயம்**
**குடியாதே – அபின்**
**கஞ்சா மதுவையும் கொள்ளாதே**
**உள்ளம் மயங்கிடும் கண்ணும்**
**சிவந்திடும்.**
**ஓட்டாண்டியாகுவாய்**
**மானிடனே'**

இது மானிடக்கும்மி என்ற பாடல் வரிசையில் வரும் பந்தியாகும். அம்பாப்பாடல்கள் கடற்தொழில் சார்ந்த பாடல்கள் ஆகும். 'அம்பி' என்பது படகினைக் குறிக்கும் சொல். படகுத் தொழில் பாடல்கள் 'அம்பிப்பாடல்கள்' என வழங்கி அம்பாப் பாடல் என மருவிவிட்டது. தொழில்சார் பாடல்களில் சந்தம், தரு என்பன தொழிலின் இசைவுக்கேற்ப அமைந்துவரும். வலையிழுக்கும்போது 'ஏலையா', 'ஐலசா' போன்ற தரு ஒலிகள் வருவதுண்டு. அந்தோனி, சந்தியா போன்ற பெயர் இறுதிகளும் பாடல்களில் அமைந்துள்ளன.

கிராமியப் பாடல்களில், வன்னிவள நாட்டின் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. வனத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த பாடல்கள், தொழில்சார் பாடல்களாக வழக்கிலிருந்தன. அருவிவெட்டுப்பாடல், ஏற்றப் பாடல், வண்டிப்பாடல், உழவுப்பாடல், சூடு மிதிக்கப்பாடல் என ஏராளமாக உண்டு. வன்னி வழக்கிலுள்ள பாடல்கள் பல தொகுக்கப்பட்டு புத்தகவடிவிலும் வந்துள்ளன. இப்பாடல்களில் ஏராளமான சரித்திரச் சான்றுகளும் உள. உதாரணமாக குருவிச் சிந்தில்

**'கொச்சிமலை குடகுமலை கோலமலை**
**நீலமலை, கொக்குளாய் செம்மலை**
**குருந்து மலை கண்டல்....' என்றும்**
**கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார்**
**கும்மியில் 'கோட்ட கேணி விநாயகர்**
**தானுமோ**
**கொக்குத் தொடுவாயின் அந்தமடி....'**
**என்றும், கோதையே சொல்லின்**
**அமரிவயல்' –என்றும்**
**கோதையே சொல்லில் குமுழமுனை–**
**என்றும்**

பல இடங்களில் எமது கிராமங்களின் சிறப்பு பேசப்படுகின்றது. சமய வழிபாட்டோடமைந்த நாட்டார் இசைகளே மிகுதியாகக் காணப்படுகின்றது.

யாத்திரை செல்வது பண்டைத்தமிழர் பண்பாடு. தமிழீழத்திலும், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவ தினத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



# வாசல்

தில் அங்கே யாத்திரீகர் கூடி வைகாசி விசாக தினத்தில் வற்றாப்பளை அம்மன் சந்நிதியில் சேர்ந்து கரையோரமாக குமணை, உகந்தை வழியே கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்வார்கள். அந்தச் சம்பவங்களும் இன்று கனவாகிவிட்டாலும் பாடல்கள் உண்டு.

**ஆண்:**

**கதிர்காமத்துக்குக் காவடி எடுத்து**
**காது குத்தி மொட்டையடித்து**
**கடன்செலுத்தப் போகவேண்டும்**
**கண்ணே ரஞ்சிதமே–விரைந்து**
**கட்டுச்சோற்று மூடையைக்**
**கட்டு மனோரஞ்சிதமே!**

**பெண்:**

**இருக்கிற பிள்ளை இடுப்பிலுமுண்டு**
**நடக்கிற பிள்ளை கையிலிருக்கு**
**சுமப்பதும் நடப்பதும் கஷ்டந்தானே**
**அத்தான் ஒரு காரு பிடிச்சா போவது**
**சுகந்தானே**

**ஆண்:**

**கால்நடைப் பயணம் யாத்திரைக் கழகு**
**காரு பிடிச்சா காசுக்குச் செலவு**
**கைவீசி நடந்து போவோம் கண்ணே**
**ரஞ்சிதமே!**
**கவலையும் வேண்டாம் கடுகி**
**நடப்போம் மனோரஞ்சிதமே!**

கதிர்காம யாத்திரை பற்றியது போலவே மலையக மக்களும் தம் வழி வழி வரும் துன்பதுயரங்களைப் பாடிவைக்க மறக்கவில்லை. இந்த வரிசையில் சிவனு, லட்சுமணன் போன்ற தியாகிகளின் வரலாறும் பாடப்பட்டுள்ளன.

திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், வானொலி போன்றவற்றின் தோற்றமும் வளர்ச்சியும், எமது பாரம்பரியவழக்கிலிருந்த தாலாட்டு, ஒப்பாரி, வேலைப் பாடல்கள் என்பவற்றின் மாறான வடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த போதிலும், காலப்போக்கில் அவ்வூடகங்களே இவற்றைப் பயன்படுத்துவதும் எமது போராட்டச் சூழலில், தமிழர் கலைகள் புனரமைப்பு, அதாவது மறுபிறவி எடுத்துள்ளதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். போராட்டச் சூழலில் கூத்துவடிவங்களில் 'களத்தில் காத்தான்', 'வெற்றிக்களத்தில் வேங்கைகள்', யாழ், வன்னியிலும், மன்னாரின் 'வேங்கை மைந்தர்கள்', பாஷையூர் 'இரத்தச் சுவடு' போன்றவை உருவாகி வெற்றிபெற்றன. வீதி நாடகங்கள் ஏராளமானவை உருவாகி அரங்கேறி வந்தன, வருகின்றன. இவற்றில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டுவரும் போர்க் கள நிலைகளும், மக்கள் நிலையும், தெளிவாகச் சித்தரிக்கப்பட்டன. சில பாடல்கள் சிரஞ்சீவியாகவும் மாறிவிட்டன. குறிப்பாக,

**போராடு போராடு தமிழீழ நாடு**
**என்ன வளம் இல்லை எங்கள் தமிழீழ**
**மண்ணில் இன்று.....**
**வேலி போட்ட கறளிரும்பு....**
**பூநகரி வெற்றியைப்**
**பாடிக்கொண்டாடு...**
**இது எங்கள் சமுதாயம்....**

போன்ற நாடகப் பாடல்களும், புதுவை அன்பனின் புகழ்பெற்ற இசைநாடகமான 'கதியை வென்ற சாவுகள்' நாடகப் பாடல்களும் நினைந்து போற்றத்தக்கவை. கேணல் கிட்டு அவர்களின் மரணம், அதன் தன்மை, இந்தியப்படையின் 'அக்கிரமம்' என்பவை பாரம்பரிய நாட்டார் இசைமெட்டிலும், நாட்டார் கலைகளான 'கும்மி', 'அம்பா' கூத்துவடிவங்களிலும் பூரணமான மண்வாசனையைக் கொண்டிருந்தது. நாட்டின் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரிமாறப்படும் கலைவடிவம் வீதி நாடகம். அரங்குகளைத் தேடி மக்கள் வராமல், அரங்கேற்றம் மக்கள் கூடுமிடங்களில் நடத்தப்படுவதால் பெருந்தொகையான மக்களால் கண்டு ரசிக்கப்படுகின்றது. இவை மட்டக்களப்பு, மன்னார், வன்னி, முல்லை, மணலாறு, யாழ்ப்பாணம் என எங்கும் பரந்துள்ளது.

மட்டுநகரின் கூத்து, இசை என்பன புகழ்பெற்றவை. இவை தனித்துவமான உணர்வாழம் மிக்க மொழிநடையைக் கொண்டனவாகவும் உள்ளன. இவ்வகைக் கூத்துக்களில் இன்று எழுத்து வடிவில் அச்சேறியுள்ளது, விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு. மேலும் தெம்மாங்கு, ஒப்பாரி, தாலாட்டு வயந்தன் என்பவையும் இங்கு பாடப்படுகின்றன.

மன்னாரின் கூத்துக்கள் பெரும்பாலும் கத்தோலிக்கக் கூத்துக்களாகும். எனினும், இன்றைய காலகட்டத்தில் புலவர் குழந்தை, புலவர் கோமேதகம், கலைமேகம், ஞானசீலன் போன்றோர், அரிய கிராமிய இலக்கியங்களை ஆக்கி வருகின்றார். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் கலைவடிவங்கள் நவீன உத்திகளாலும், பெரும்பாலும் மரபுசார்ந்த படிமங்களுடான படைப்புகளாகவும் இருப்பதால் அவை எமது மண்வாசனையைப் புதிய வடிவங்களில் வெளிக்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. நாட்டார் கலை என்பதை தனித்துப் பார்க்கின் பூரணா வேலுப்பிள்ளை, புதுவை அன்பன் ஆகியோருடன் வடமராட்சிக் கலைஞர்களையும் அது உள்வாங்கியுள்ளது.

முல்லை, மணலாறு, வன்னி என்பவற்றின் பாரம்பரியம் இன்றும் கெடாதுள்ளது. அண்ணாவி முறைகள் அழியாது பேணப்பட்டு வருகின்றன. முல்லை மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் வீதி நாடகங்கள், கூத்துக்கள் நடாத்தப்படுகின்றன. முல்லைச் செல்வனின் அருமையான பாடல்களும் சரித்திரச் சான்றாகப் பேணக்கூடியவையே. இன்னும் கிளிநொச்சி, பரந்தன் போன்ற இடங்களிலும் இவை வளர்ந்துள்ளன.

இப்படியான அரிய கலைவடிவங்களைக் கொண்ட நாட்டார் இலக்கியங்கள் வரலாற்றைச் சுமந்துவந்தாலும், வெள்ளையர் போனபின் இன்றுவரையான காலப்பகுதியில் தோன்றியிருந்த சகல நாட்டார் இலக்கியங்களும் பத்தறுந்து போயிற்று. இதற்கு நாட்டார் இலக்கியம் என்பதற்கு நாங்கள் விதித்திருந்த தவறான வரையறையும் ஒரு காரணமாகும். தொடர்ந்தும், எதிரிகளால் எத்தனை நூலகம் எரிக்கப்பட்டாலும், எத்தனை கோவில்கள் இடிக்கப்பட்டாலும், எவ்வளவு நகரங்கள் அழிக்கப்பட்டாலும், கிராமிய மக்களின் உணர்வுகளில் கலந்துவிட்ட இக்கலைப் பண்பு அவற்றை மீட்டுத்தர வல்லதாய் என்றும் நிலைத்திருக்கும். ஆனாலும் இவை அச்சுவாகனமேறி பவனி வருதலும் அவசியமாகும். நாமும், எமது அருமையான வாழ்நிலத்தின் வரலாற்றிலிருந்து தோற்றம் பெறும் செப்பரிய மண்வாசனையோடுகூடிய இலக்கிய கலை வடிவங்களைப் பாதுகாப்பது எம் சந்ததிக்குச் செய்யவேண்டிய முக்கிய கடமையாகும்.

# ...ழம் கலைகள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# வன்னியின் மருத்

**வன்னிப்பகுதியின் சுகாதார நிலைமை குறித்து கிளிநொச்சி முல்லை மாவட்ட பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் அவர்கள் வழங்கிய செவ்வி.**

**எமது பகுதியில் உள்ள அரச வைத்தியசாலைகள் பூரணமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியாது இன்னல்களை அனுபவிப்பதற்குக் காரணம் என்ன?**

வன்னிப் பகுதியில் நிரந்தரமாக இருப்போருக்கும், இடம்பெயர்ந்து வந்து தங்கியிருப்போருக்குமாக இரண்டு ஆதார வைத்தியசாலைகள் இருக்கவேண்டும். ஆனால், இங்கு ஒரு ஆதாரவைத்தியசாலைகூட இல்லை. நிரந்தரமாக வசிப்பவர்களைவிட மூன்று மடங்கு அதிகமாக இடம்பெயர்ந்தவர்கள் தற்போது வசித்து வருகின்றனர். இங்குள்ள நிரந்தரமானவர்களுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய அளவுக்கே வைத்தியசாலைகள் இருக்கின்றன. வைத்தியர்களை எடுத்துக்கொண்டால், இங்கு கடமையாற்றுவதற்கு வைத்தியசாலைகளில் இரு டாக்டர்களே இருக்கின்றார்கள். அதே நேரம், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா ஆதாரவைத்தியசாலையை எடுத்துப் பார்த்தால் அங்கு முப்பத்தியிரண்டு வைத்தியர்கள் கடமையாற்றுகின்றார்கள். இங்குள்ள வைத்தியசாலைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது வவுனியா ஆதாரவைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சுமார் நூறு பேர் அளவிலேயே கூடுதலாக சிகிச்சை பெறுகின்றார்கள். உள்நோயாளர் பிரிவைப் பொறுத்தவரை இங்குள்ளவர்களைவிட முப்பது வீதத்தினரே கூடுதலாகச் சிகிச்சை பெறுகின்றனர்.

ஊழியர் பற்றாக்குறையை நோக்கும்போது, இங்குள்ள எல்லா வைத்தியசாலைகளுமே இந்த நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு வைத்தியசாலையை எடுத்துநோக்கினால், இன்னும் எட்டு டாக்டர்களுக்கு வெற்றிடம் உள்ளது. தற்போது நான்குபேரே கடமையில் இருக்கின்றனர். தாதியர்களைப் பொறுத்தவரை இருபத்தொரு பேருக்கு வெற்றிடம் உள்ளது. பரிசாரகர்களைப் பொறுத்தவரை முப்பத்தாறு பேர் இருக்கவேண்டும். ஆனால், பதின்மூன்று பேர் மட்டுமே உள்ளனர். இருபத்தாறு பேருக்கு வெற்றிடம் உள்ளது. சாதாரண தொழிலாளர்களைப் பொறுத்தவரை இருபத்தியிரண்டு பேருக்குப் பதிலாக பதினொரு பேர் மட்டுமே உள்ளனர். மொத்தத்தில் எழுபத்தொரு ஊழியருக்கு வெற்றிடம் உள்ளது. இந்த விபரம் இந்த மாவட்ட வைத்தியசாலை நிரந்தரவாசிகளுக்குக் கடமையாற்றுவதற்கு உள்ள வெற்றிடமே. ஆனால், இங்கு சிகிச்சை பெறும் மொத்த நோயாளரை வைத்துப் பார்க்கும் போது இந்த அளவு மேலும் அதிகமாகும். இதேபோன்ற நிலையே இங்குள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கும் உண்டு.

இவ்வளவு ஊழியர்களை வைத்துக் கொண்டு நோயாளர்களுக்கு பூரணமான சேவை வழங்குவது என்பது இயலாத காரியம். ஆனால், டாக்டர்களுக்குரிய சில பணிகளை தாதியர்களும், தாதியர்களுக்குரிய பணிகளை பரிசாரகர்களும், பரிசாரகர்களது பணிகளை அதற்குக் கீழுள்ள ஊழியர்களுமாகச் சேர்ந்து செய்வதன் மூலமே நாம் எமது முடிந்தளவு சேவையினை புரிந்துணர்வு அடிப்படையில் வழங்கி வருகின்றோம்.

சிறீலங்காவில் உள்ள வைத்தியசாலைகளை எடுத்துநோக்கினால் ஒரு மாவட்ட வைத்தியசாலையில் ஆகக்கூடிய வெளிநோயாளர்களாக இருநூறு பேரும், உள்நோயாளர்களாக ஐம்பது நோயாளர்களுமே சிகிச்சை பெறுவார்கள். ஆனால், இங்குள்ள மாவட்ட வைத்தியசாலை ஒன்றில் வெளிநோயாளர் பிரிவில் சராசரி ஆயிரம்பேரும், உள்நோயாளர் பிரிவில் இருநூற்றைம்பது பேரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். உண்மையில் இங்குள்ள சிகிச்சை பெறுவோர் தொகை ஆதார வைத்தியசாலைத் தரத்துக்கு உள்ளது. ஆனால், இங்கு பணியாற்றும் ஊழியர் தொகை மாவட்ட வைத்தியசாலையின் தேவையின் அரைப்பங்கிற்குக்கூட இல்லை. தெற்குப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் ஒரு விடுதிக்கு நான்கு டாக்டர்கள் வீதம் உள்ளனர். ஆனால், இங்கு ஒரு டாக்டரே ஆறு விடுதிகளைக் கவனிக்கவேண்டியுள்ளது. இவ்வாறான நிலைமை இருந்தும், எமது ஊழியர்கள் திருப்தியாகத் தமது பணியினைச் செய்து வருகின்றார்கள்.

இங்குள்ள இடம்பெயர்ந்த, நிரந்தர சனத்தொகையின் அளவு அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் சுகாதார விடயத்தில் அரசு பாராமுகமாகவே உள்ளது. இதனை விட, முக்கியமான விடயம் எமது பகுதியைச் சொந்த இடமாகக்கொண்ட டாக்டர்களும் ஏனைய ஊழியர்களும் தென்பகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். அவர்களை இங்கு கடமையாற்ற வரும்படி கேட்டால் அவர்களும் வருவதாக இல்லை. அத்துடன், இங்கிருக்கின்ற ஊழியர்களும் ஒவ்வொருவராக இங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள்கூட எம்முடன் ஒத்துழைத்தால் இப்பிரச்சினைகள் ஓரளவு குறைவடையும்.

**ஊழியர் வெற்றிடங்களை நிரப்பும்படி நீங்கள் அரசிடம் கோரிக்கைகள் விடுத்திருக்கின்றீர்களா?**

ஊழியர் வெற்றிடங்களை நிரப்பும்படி பல முறை கோரிக்கைகள் விடப்பட்டும் அவை பூர்த்திசெய்யப்படவில்லை. அதேவேளை, இங்கிருந்து மாற்றம் கேட்டுச் செல்பவர்களுக்கு ஊக்குவித்து மாற்றங்களை வழங்குகின்றார்கள். எமது மாவட்டத்துக்கென இங்கிருந்து பயிற்சிக்குச் செல்பவர்களே பயிற்சி முடிந்ததும் தென்பகுதிக்கு நியமனம் கேட்டுச் சென்றுவிடுகின்றனர்.

எமது பகுதிக்கு ஆதாரவைத்தியசாலை ஒன்று கிடைக்கவேண்டுமாயின் இங்குள்ள ஊழியர் வசதிகள், கட்டட வசதிகள், நோயாளர் தொகை என்பவற்றை எடுத்துக் காட்டவேண்டும். இங்கு நோயாளர் தொகை இருந்தாலும் ஏனைய வசதிகள் எதுவும் இல்லை.

**மருந்துப் பொருட்கள் எமது பகுதிக்கு உரிய காலத்தில் முழுத்தொகையும் வராதிருப்**



செவ்வி கண்டோர்
– ஜெயகுமார்
– தவரட்ணம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# ...த் தேவையை அரசு பூர்த்தி செய்து தருவதாயில்லை

www.tamilanangam.net

...பதற்குக் காரணம் என்ன?

மருந்துவகைகள் எமது பகுதிக்கு உரிய காலத்துக்கு வராததற்கும், சில மருந்துகள் முற்றாகவே அனுப்பப்படாதிருப்பதற்கும் பல காரணங்கள். எமது பகுதிக்குத் தேவையான மருந்துவகைகளின் கோரல்கள் முன்னைய காலங்களில் உரியகாலத்தில் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப் படவில்லை. அவ்வாறு அவை சென்றடைந்து சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பகுதிக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டு, பாதுகாப்பு அமைச்சு அனுமதித்தபின்னரே மருந்துவகைகளை எமது பகுதிக்குக் கொண்டுவரமுடியும். இவற்றில் ஏற்படும் காலதாமதமே மருந்துப் பொருட்கள் உரிய காலத்துக்கு எமது பகுதிக்கு வந்தடையாமைக்குக் காரணம் ஆகும்.

எம்மால் கோரப்படும் மருந்துப் பொருட்களில் ஒரு தொகுதி சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப்பகுதியினால் வெட்டப்படுகின்றது. அதன்பின், பாதுகாப்பு அமைச்சுக்குச் செல்லும்போது அங்கு இன்னொரு பகுதி வெட்டுக்குள்ளாகின்றது. இதன்பின் அனுமதிக்கப்படும் மருந்துவகைகளில் மருந்துக் களஞ்சியத்தில் இல்லாத மருந்துவகைகளும் வெட்டப்பட்டு ஏனையவையே அனுப்பிவைக்கப்படுகின்றன.

**இதனைத் தீர்க்க தற்போது நீங்கள் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?**

நான் கிளி.முல்லை. பிரதிச் சுகாதார சேவைப் பணிப்பாளராகப் பணியேற்ற பின் இங்கிருந்து உரியகாலத்தில் தேவைப்பட்டியல் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். ஆயினும், சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவிலும், பாதுகாப்பு அமைச்சிலும் அனுமதி கிடைப்பதற்கு இரண்டு மாதங்கள் வரை காலதாமதம் ஏற்படுகின்றது.

ஆனால், கிளிநொச்சி, முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைக்கு இந்த நடைமுறை இல்லை. அவர்கள் நேரடியாக மருந்துக் களஞ்சியத்துக்குச் சென்று தமக்குத் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுச் செல்லமுடியும்.

இனிவரும் காலங்களில் எமக்குரிய மருந்துப்பொருட்களை உரியகாலத்தில் எடுத்து வருவதற்கான தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன். அத்துடன், மருந்துக் களஞ்சியத்தில் இல்லாததைக் கொண்டுவருவதற்கு அனுமதிக்கப்பட்ட மருந்துப் பொருட்களை கொழும்பில் வெளியில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதியினையும் பெற்றுள்ளேன்.

**அரசு முற்றாகத் தடைவிதித்துள்ள அல்லது மிகக் குறைவாக அனுப்பும் மருந்துகள் எவை?**

சிறிய சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தக்கூடிய குளோறபோம், ஆபத்தான வேளைகளில் உயிர்காக்கப் பயன்படும் ஒட்சிசன் போன்றவை பூரணமாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இவை எமக்குக் கிடைப்பதில்லை. இவை இல்லாமல் இங்கு நிறைய இறப்புக்களும் இடம்பெற்றுள்ளன. ஒரு மாரடைப்பு நோயாளிக்கு சிறிதளவு ஒட்சிசன் கொடுத்தாவது சிகிச்சை அளிக்கமுடியும். ஆனால், இவற்றின் மீதான தடையினால் இதனைக்கூட இங்கு மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

மிகவும் குறைந்தளவில் காயங்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்கள், கட்டுத்துணிகள், பன்டேஜ் போன்றன அனுப்பப்படுகின்றன. இதனால், தற்போது சேலையை நாங்கள் இங்கு கொள்வனவு செய்து கட்டுத்துணிகளாகப் பயன்படுத்தவேண்டிய நிலையுள்ளது. மற்றும் வைத்தியசாலை சுத்திகரிப்புக்குரிய மருந்துகள், மூட்டுக்குப் பயன்படுத்தப்படும் வென்ரொலின் என்பனவும் குறைந்தளவில் அனுப்பப்படுகின்றன.

**வைத்தியசாலையில் உள்ள சுகாதாரப் பிரச்சினைகள் எவை?**

எமது பகுதியில் உள்ள வைத்தியசாலைகளின் மலசலகூடங்கள் சுண்ணாம்பினால் கட்டப்பட்டுள்ளன. அவை குறிப்பிட்ட சிறிது காலத்தில் இடிந்து விழுந்துவிடுகின்றன. இப்பகுதிக்கு சீமெந்து அனுப்பப்படுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாலேயே தேவையான மலசலகூடங்களை சுண்ணாம்பினால் கட்டவேண்டிய நிலை உள்ளது. சர்வதேச தொண்டர் நிறுவனங்களாக இப்பகுதியில் கடமையாற்றுபவர்கள் தங்களுடைய தேவைக்குரிய சீமெந்தை இப்பகுதிக்குக் கொண்டு வந்து பயன்படுத்துகின்றார்கள். எனவே, இவ்வாறான சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் சீமெந்தினை பெற்றுவந்து, மிக முக்கியமாகத் தேவைப்படும் வைத்திய சாலைகளுக்குரிய மலசலகூடத்தினையாவது சீமெந்தினால் அமைப்பதற்கு திட்டங்களை வகுத்து செயற்பட முன்வரவேண்டும்.

**தொண்டர் அடிப்படையில் பணிபுரிபவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வாய்ப்புண்டா?**

எம்மிடையே நிலவும் ஆளணிப் பிரச்சினையை ஈடுசெய்வதற்கென தொண்டர் அடிப்படையில் சேவை நோக்கில் எமது பகுதிகளில் பலர் கடமையாற்றி வருகின்றனர். இவர்களது சேவை எமக்குப் பேருதவியாக உள்ளது. இவர்களுக்குக்கூட கியூடெக் போன்ற ஓரிரு நிறுவனங்கள் முன்வந்து மிகக்குறைந்தளவு கொடுப்பனவினை வழங்கி வருகின்றன. இந்தத் தொண்டர்களாகப் பணிபுரிபவர்களுக்கு முடிந்தளவு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் எவையும் முன்வரவில்லை.

இந்தத் தொண்டர் நிறுவனங்கள் எல்லாவற்றிடமும் வேண்டுகோள் விடுத்தும், அவை இவர்களுக்கு உதவி செய்யத் தயங்குவது மிகவும் கவலையளிக்கின்றது.

எமது ஆளணித்தேவைப் பட்டியலை சுகாதார அமைச்சுக்கு அறிவித்து மேலதிகமாக ஆட்கள் தேவைப்படுவதை தெரியப்படுத்தியுள்ளோம். பரிசாரகர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பயிற்சியினை தாதியர்கள் வழங்க வேண்டும். தாதியர் சங்கத்திற்கும், பரிசாரகர் சங்கத்திற்கும் உள்ள பிரச்சினையால் தாதியர் சங்கம் இந்தப் பயிற்சியினை வழங்கப் பின்னடித்து வருகின்றது. இந்தப் பிரச்சினை தீர்ந்து, பயிற்சி வழங்கப்பட்டால் தொண்டர்களாகப் பணிபுரிபவர்களுக்கு படிப்படியாக நியமனம் கிடைக்கவாய்ப்புண்டு.

**சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதில் இப்பகுதி வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?**

எமது பகுதிகளில் கட்டிகளை அகற்றுதல், கருத்தடை போன்ற சிறிய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு அனுமதியுண்டு. இதனைவிட, சில அவசர சத்திரசிகிச்சைகளைச் செய்வதற்கும் அனுமதி உண்டு. இவ்வாறான சத்திரசிகிச்சைகளும் மேற்கொள்ளாதுவிடின் இங்கிருந்து வவுனியாவுக்கு மேலதிக சிகிச்சைக்கு நோயாளிகளை அனுப்புவதற்கு மாவட்ட வைத்தியசாலை ஒவ்வொன்றுக்கும் குறைந்தது நான்கு அம்புலன்ஸ் வண்டிகள் வேண்டும். ஆனால், வன்னிப் பகுதியில் மொத்தமாக மூன்று அம்புலன்ஸ் வண்டிகளே உள்ளன. அம்புலன்ஸ் வண்டி என்பது ஓரிரு நோயாளிகளை கொண்டு செல்வதற்கென உருவாக்கப்பட்டது. ஆனால், தற்போது பதினைந்து நோயாளிகள் வரை இதில் ஏற்றிச்செல்ல வேண்டிய இக்கட்டான நிலையுள்ளது. அம்புலன்ஸ் வண்டிகள் பஸ் வண்டிகளாகவே செயற்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு அம்புலன்ஸ் வண்டியும் வவுனியா சென்று திரும்பும்வரை இங்கிருந்து அவசர நோயாளிகள் எவரையும் வவுனியாவுக்கு அனுப்பமுடியாத நிலையுள்ளது. இதனால், பல உயிரிழப்புச் சம்பவங்களும் இடம்பெறும் நிலைமைகளும் ஏற்கனவே தோன்றியுள்ளன.

எமது பகுதிக்கென வரவேண்டிய மேலும் மூன்று அம்புலன்ஸுகள் வவுனியாவில் இருக்கின்றன. இதனை, இங்கு கொண்டுவருவதற்கு பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்துள்ளது. இந்த அம்புலன்ஸுகள் வவுனியா ஆதாரவைத்தியசாலையில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன.

இதனைவிட இங்குள்ள ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து நோயாளர்களை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமாயின் அவர்கள் தமது சொந்தச் செலவிலேயே எடுத்துச் செல்கின்றனர். இதற்கான அம்புலன்ஸ் வசதிகள் எதுவும் இல்லை.



www.tamilanangam.net

இதில் காலதாமதம் ஏற்படுவதால் பல பிரச்சினைகள் தோன்றி இருக்கின்றன.

**நோய்த் தடுப்பு தொடர்பான பொதுச்சுகாதார நடவடிக்கைகளில் உள்ள பிரச்சினைகள் எவை?**

பொதுச்சுகாதார நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இங்கும் ஊழியர் பற்றாக்குறை மிக அதிகமாக உள்ளது. பொது இடங்கள் சுத்திகரித்தல், பராமரித்தல் நடவடிக்கைகள் பிரதேச சபையினாலும், பொதுச்சுகாதார பிரிவினராலும் இணைந்து மேற்கொள்ளப்படுவது, இந்தச் செயற்பாடுகள் நடைபெறுவதில்லை. இதற்கு பிரதேச சபை தம்மிடம் நிதி இல்லையென கடந்த காலங்களில் தெரிவித்திருந்தது. இதனால், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் தொற்று நோய்கள் அதிகரிக்கும் நிலைதோன்றி இருக்கின்றன.

விசர்நாய்களை ஒழிப்பதற்கான நஞ்சு மருந்துகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. இதனால் நாய்களை உயிருடன் கூட்டில் அடைத்து நீரில் மூழ்கடித்து இறக்கவைக்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கும் ஆளணி வசதிகள் இல்லை.

மலேரியா நோய்த் தடுப்பிற்கான மலத்தியோன் மருந்துகள் தேவையினைவிட குறைவாகவே அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனால், இந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படாததால் இதற்கான சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு வருவோர் தொகை அதிகமாகவே உள்ளது.

தற்போது உலக வங்கியினால் 'மலேரியா நோயை பின்தள்ளுதல்' என்ற பெயரில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை பூராவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கின்றது. ஆனால், எமது பகுதிக்கு இந்த நடவடிக்கைக்கான ஒத்துழைப்பு எவ்வாறு இருக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. எமது பகுதியில் முழுமையான நடவடிக்கையினை மேற்கொள்ளாது ஏனைய பகுதிகளில் முழுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதன் பூரண பலனை அடையமுடியாது. ஒரு பிரதேசத்தில் மலேரியாவை ஒழித்து இன்னொரு பிரதேசத்தில் ஒழிக்காது விடுவதன்மூலம் ஒரு பிரயோசனமும் இல்லை.

இந்த பொது நிலைப்பாட்டை விளங்கிக் கொண்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைக்க முன்வரவேண்டும். உலக வங்கியும் இந்தச் செயற்பாடு எமது பகுதிகளில் பூரணமாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

**குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ள முடிகின்றதா? அதிலுள்ள பிரச்சினைகள் எவை?**

குழந்தைகளுக்கான நோய்த்தடுப்புக்கான தடுப்பூசிகள் உரியகாலத்தில் செலுத்தப்படவேண்டும். குழந்தையின் மூன்றாவது, ஐந்தாவது, ஏழாவது மாதத்தில் இது கட்டாயமாகச் செலுத்தப்படவேண்டும். இதனை வழங்காதுவிடுவது உண்மையில் மனிதாபிமானமற்ற செயல். இந்த மருந்துவகைகளைக் கொண்டுவருதில் கடந்த காலங்களில் பல நிர்வாகச் சிக்கல்கள் இருந்தன. இதனால், இவை உரியகாலத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படவில்லை. நான் பொறுப்பெடுத்ததும் முதல் மேற்கொண்ட நடவடிக்கை இது சம்பந்தமானதே.

இந்தத் தடுப்பு மருந்துகளை ஒரே தடவையில் கொண்டுவந்து, இங்கு குளிரூட்டிகளில் வைத்துப் பராமரிக்க முடியாத நிலையுள்ளது. இதனால், பகுதி பகுதியாக எடுத்துவந்து இதனை வழங்க வேண்டி உள்ளது. எனவே இவ்வாறான மருந்துகளை மொத்தமாகக் கொண்டுவந்து குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கும் வசதி எமக்கிருப்பின், இதன் பலனை பூரணமாக மக்களுக்கு வழங்க முடியும். குளிரூட்டிகளை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் தடை உள்ளது. எனவே, எமக்குத் தேவையான குறைந்தது சூரிய ஒளியில் இயங்கக்கூடிய குளிரூட்டிகளை யாவது பெற்றுத்தருவதற்கு இங்குள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தீவிர அக்கறை செலுத்தவேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன். குழந்தைகளின் உரிமை பற்றிப் பேசும் சர்வதேச நிறுவனங்கள் இங்குள்ள குழந்தைகளின் நலனையும் கருத்தில் கொண்டு அதனை தீர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

**கண், பல் சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் உள்ள பிரச்சினைகள் என்ன?**

கண் சம்பந்தமான, பல் சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான வைத்தியர்கள் எவரும் நிரந்தரமாக எமக்கில்லை. ஒப்பந்த அடிப்படையிலேயே சிலர் தற்பொழுது கடமையாற்றுகின்றார்கள். அதே நேரம், இந்த நோய்க்குரியவர்களை அதிகமாக மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவுக்கு அனுப்பவேண்டாம் என எமக்கு எழுத்து மூலமான கடிதங்கள் பல தடவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் பல சிரமங்கள் உள்ளன.

**சுகாதாரம் தொடர்பாக மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

எமக்கு நோய் வந்தால் அதற்குச் சிகிச்சையளிப்பதற்கான பூரண வசதிகள் இங்கில்லை. ஆகையால், இங்குள்ள மக்கள் தாங்கள் தாங்களே தனிநபர் சுகாதாரத்தை பூரணமாகக் கடைப்பிடிக்கவேண்டும். மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு, வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை மேற்கொள்ளவேண்டும். அத்துடன், கொதித்தாறிய நீரைப் பருகுதல், சாப்பிட முன், மலம்கழித்தபின் கைகளை சுத்தமாக கழுவுதல் நன்கு கொதிக்க வைத்த, சமைத்த உணவுகளைச் சாப்பிடுதல். தொற்றுநோயாளிகளை பிரித்துவைத்துப் பராமரித்தல். இவ்வாறான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் நோய்வருவதை ஓரளவு தடுக்கமுடியும்.

பாம்புக்கடி, பிள்ளைப்பிரசவம் போன்ற நேரங்களில் மக்கள் தற்போதும் மூடநம்பிக்கையுடன் வீடுகளிலே சிகிச்சையினையும், பிரசவத்தினையும் மேற்கொள்கின்றனர். இது மிகவும் ஆபத்தானது. இவ்வாறான பிரசவங்கள் மூலம் பல உயிரிழப்புக்கள் ஏற்கனவே ஏற்பட்டுள்ளன. இதனை பொதுமக்கள் முற்றாக விடுத்து வைத்தியசாலை செல்லவேண்டும். பாம்புக்கடியில் பத்து வீதத்தினரே ஆபத்தான நிலையினை அடைவார்கள். ஏனைய தொண்ணூறு வீதத்தினரும் அவ்வாறான நிலையை அடைவதில்லை. ஆயினும், நூறுபேரும் வைத்தியசாலைக்கு வருவதன் மூலமே அவர்களது நிலையினை அறிந்து சிகிச்சை அளிக்கமுடியும். இவ்வாறானவற்றுக்கு வைத்தியசாலைக்குச் செல்லாது ஊரில் விசக்கடி வைத்தியம் பார்ப்பதைத் தவிர்ப்பது அவர்களுக்கே நல்லது. இவற்றுக்கான மருந்துகளும் எம்மிடம் உள்ளது.

**நீங்கள் இந்தப் பகுதிக்குச் சேவையாற்ற வந்ததற்குக் காரணம் என்ன?**

பொதுவாகவே எனக்கு வெளிநாட்டுமோகம் இல்லை. எமது சொந்த மாவட்டத்தில் பணிபுரியவேண்டும் என்ற ஆர்வம் எனக்குண்டு. நான் இப்பகுதிக்கு வரும்போது, இங்கு யாழ்ப்பாண இடப்பெயர்வு ஏற்பட்டு பெருமளவு மக்களும், பல சுகாதாரப் பிரச்சினைகளும் இருந்தன. வைத்தியத்துறை சார்ந்த ஊழியர்கள் இங்கிருந்து தென்பகுதிக்கு ஓடிக்கொண்டிருந்த காலம் அது. குறைந்தது ஐந்து வருடமாவது சேவை யாற்றவேண்டும் என்ற நோக்குடனேயே நான் இங்குவந்தேன். அதனைப் பூர்த்தி செய்து விட்டேன். தொடர்ந்தும் இங்கிருந்து சேவை யாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# நிரந்தரமாய் சிறையில்?

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச்சட்டம் என்பனவற்றில் கைதாகி, தடுப்புமுகாமில் உள்ள சுமார் 2500 பேரை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புவது குறித்து சிறீலங்கா சட்டமாஅதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகின்றமையானது, சிறீலங்கா அரசு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரிந்துகொண்டும் அவர்களைத் தண்டிக்க மேற்கொள்ளும் முயற்சியின் வெளிப்பாடேயாகும்.

தடுப்புக்காவலில் உள்ளவர்களில் 99 வீதமானவர்கள் தமிழர்கள் என்பதும், அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் என்பதும் வெளிப்படையானதொன்று. ஆகையினால் அரசின் தடுப்புமுகாம் முயற்சியானது தடுப்புமுகாமில் உள்ள தமிழ்இளைஞர்களை வெளியில்விடும் அதாவது, விடுதலை செய்யும் நோக்கம் அற்றதன் விளைவேயாகும்.

இத்தனைக்கும் சிறீலங்கா ஆட்சியாளர்கள் தடுப்புமுகாமில் உள்ளோரை விரைவில் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதெனவும், அல்லது விடுதலை செய்வதெனவும் பல தடவைகள் வாக்குறுதிகள் அளித்திருந்தனர். அதிலும் குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இவ்வாறானதொரு வாக்குறுதியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே கொடுத்திருந்தார். தேர்தல் முடிவுற்று மூன்று மாதத்திற்குள் தடுப்புமுகாமில் உள்ளவர்கள் தொடர்பான பிரச்சினை முடித்துவைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

தடுப்புமுகாமிலுள்ள தமிழ் இளைஞர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பல்வேறு வேளைகளிலும் கைதுசெய்யப்பட்டவர்கள் ஆகும். இவர்களின் கைதுகள் யாவும் சந்தேகத்தின் அடிமட்டத்தில் அமைந்தவையாகும். வேறுவிதமாகக் கூறுவதானால் தமிழர் என்பதினால் குற்றம் செய்ததற்கான ஆதாரம் எதுவுமற்ற நிலையிலும் கைதுசெய்யப்பட்டவர்களாகும்.

ஆகையினால், இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு பொலிசாரிடம் போதிய சான்றுகள் இல்லை. சித்திரவதைகள் மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் மட்டுமே பொலிசாரிடம் இவர்கள் மீது குற்றம் சுமத்துவதற்குரிய தாகவுள்ள ஆதாரமாகும்.

ஆனால், இவ்வாறான வாக்குமூலங்கள் நீதிமன்றின் முன் ஏற்கப்படுபவையாக இருக்கமாட்டாது. ஆகையினால், வாக்குமூலங்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு வழக்குத்தாக்கல் செய்யப்படின் நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்படுபவர் விடுதலை செய்யப்படுதல் தவிர்க்கமுடியாததாகிவிடுகின்றது. இதுவரையில் பொலிசார் தாக்கல்செய்த பெரும்பாலான வழக்குகளில் இவ்வாறே நடந்துள்ளது.

ஆகையினால் தடுப்புமுகாம்களில் உள்ளவர்களை நீதிமன்றம் கொண்டு செல்வதை சிறீலங்கா பொலிசார்/ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. இதே சமயம், தடுப்புமுகாமில் உள்ளவர்கள் அடிக்கடி தம்மை விடுதலைசெய் அல்லது நீதிமன்றில் விசாரணைசெய் எனப் போராட்டங்கள் நடாத்தி வருகின்றனர்.

இந்த விவகாரம் அரசிற்குத் தலைவலி கொடுக்கும் ஒன்றாகவும் மாறியுள்ளது. அத்தோடு, இவ் விவகாரத்தில் மனித உரிமை அமைப்புக்கள் காட்டிவரும் அக்கறையும் அண்மைக்காலத்தில் தடுப்புமுகாம்களில் இடம்பெற்றுள்ள வன்முறைகளும் அரசிற்குச் சில நிர்ப்பந்தங்களைக் கொடுத்துள்ளது என்றே கூறலாம்.

இந்நிலையில்தான் தடுப்புமுகாம்களில் உள்ள கைதிகளைப் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பிவைக்க சந்திரிகா அரசு முயற்சித்து வருகின்றது. அதாவது குற்றச்சாட்டுக்களை சுமத்தி தண்டிக்க முடியாதவர்களைப் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்ப அது முனைகின்றது. இதன்மூலம் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக குற்றம் இழைக்காதவர்களையும் அரசு தண்டிக்க முனைகின்றது.

அதாவது, புனர்வாழ்வு முகாம்கள் குற்றம் இழைத்தவர்களைச் சீர்திருத்தும் நோக்கில் அமைக்கப்படுபவையே ஆகும். ஆனால், குற்றம் இழைக்காதபோதும் புனர்வாழ்வு முகாமிற்கு இளைஞர்களை அனுப்ப அரசு முனைகின்றது எனின், அவர்களை வெளியில்விட அரசாங்கம் விரும்பவில்லை என்பதே அர்த்தமாகும்.

இந்தவகையில் பார்க்கையில், தடுப்புமுகாம்களுக்குப் புதிய பெயர்களைக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றே கூறலாம். இது அப்பாவித் தமிழ் இளைஞர்களைத் தொடர்ந்து வதைக்கும் நடவடிக்கையே ஆகும். இதன் மூலம் இத்தமிழ் இளைஞர்களின் வாழ்க்கையை தடுப்புமுகாமிலேயே முடக்கிவிட அரசு முனைகின்றது. அதாவது, தமிழ்ச் சமூகத்தின் செயற்பாட்டில் இருந்து அவ் இளைஞர்களைப் பிரித்துவிட அரசு முனைகின்றது.

# ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும்

-கருணாகரன்.

ஜனவரி இதழ் தொடர்ச்சி.

தொடர்ந்து திரைப்பட வெளியீட்டுப்பிரிவு வீடியோப்படத் தயாரிப்பில் ஈடுபட்டது.

பின்பு 'நிதர்சனம்' நிறுவனம் குறும்படங்களைத் தயாரிக்கத் தொடங்கியது. அது வெளியிடும் ஒளிவீச்சு சஞ்சிகையில் இணைப்பதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தப் படங்கள் உருவாக்கத்தில் ஞானரதன், பொ.தாசன், கேசவராஜா ஆகியோருடன் பல போராளிகளும் ஈடுபட்டனர். தொடர்ந்தும் இந்தச் செயற்பாடு நிகழ்ந்து வருகின்றது.

இந்தப்படங்களுக்கான இசையினை இசையமைப்பாளர் யாழ் ரமணன், முரளி, தமிழீழ இசைக்குழு, சிறீகுகன், இசைப்பிரியன் என்போர் வழங்கியுள்ளனர். ஒலிப்பதிவுகளை கிருபா, வீரா, மலையவன் ஆகியோர் செய்துள்ளனர்.



ஈழ விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த முகத்தினைக் காட்டும் வீடியோப்பட முயற்சிகள் எமது சினிமா சார்ந்த அனுபவத்திற்கு மிக முக்கியமானதாக அமைகின்றது. அத்துடன் பரந்த அளவில் மக்களைச் சென்றடைந்து அவர்களிடையே விழிப்புணர்வையும், ரசனை விரிவாக்கத்தையும் ஏற்படுத்தியும் இவை விரித்துரைக்கின்ற அதேவேளையில் கலை பற்றிய ஒரு பார்வையையும் உருவாக்கி இருக்கின்றன.

இவற்றோடு வானொலியூடாகவும் எமது போராட்டத்திற்காக கலை இலக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வானொலியில் நாடகம், கவிதைகள், சித்திரங்கள் கலை பற்றிய வேறுபல நிகழ்ச்சிகள் என இதில் இடம்பெறுகின்றன. 'புலிகளின் குரல்' வானொலியில் 1990 தொடக்கமான பத்து வருடத்தில் இந்தப்பணி தொடர்கிறது. இவற்றிலும் பல கலைஞர்களும் அறிஞர்களும் பங்குபற்றி வருகின்றனர்.

தமிழர்களின் தொன்மைமிக்க பாரம்பரியக் கலையான சிற்பக் கலையின் ஒரு வடிவத்தில் எமது போராட்ட வரலாற்றினை செதுக்கி வருகிறார் திரு. விக்கினேஸ்வரன். இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட சிற்பங்களை இவர் வடிவமைத்துள்ளார். ஓவியர் ரமணியும் சிலைவடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

ஈழ விடுதலைப் போராட்டக் கலை, இலக்கியப் பதிவுகள் மிக பரந்த அளவில் கடந்த ஐம்பது வருடமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரையில் இந்த மாபெரும் வரலாற்றுச் செயற்பாட்டில் பலர் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். தம்மை அர்ப்பணித்திருக்கின்றார்கள். தம்மாலான அளவிற்கு உழைத்திருக்கின்றார்கள். பலர் இவ்வாறான செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டும் வருகின்றனர். இது ஒரு தேசியப்பணியாகவே அமைகின்றது. தேசத்தின் சுதந்திரத் திற்காகவும் இன விடுதலைக்காவும் செய்யப்படும் இந்தப் பணியில் கலைஞர்களும் இலக்கியப்படைப்பாளிகளும் அறிஞர் களும் ஆற்றிவரும் பங்கு கவனங்கொள்ளத்தக்கது. இத்தகைய தொடர்ச்சியான பணியையும் பங்களிப்பையும் விரிந்த செயற்பாட்டையும் காலம் நிச்சயம் கணக்கிட்டுக் கொள்ளும். இங்கே இக்கட்டுரையில் ஒரு அறிமுக அளவிலேயே இவை இதுவரையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. விடுதலைப் பயணத்தின் வழிநெடுக இந்தக் கலாச்சாரப் பங்களிப்பின் சுவடுகள் தொடர்ந்தும் இருக்கட்டும். அதற்கு நாமனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

முற்றும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

# [illegible] ஐ.நாவை நோக்கி அமைதிப் பேரணி

### சுயநிர்ணய உரிமைக்கான தமிழீழ மக்களின் பேரணி

ஐரோப்பிய நாடுகளில் வழும் தமிழீழ மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தும் விதமாய் ஐ. நாவை நோக்கிய அமைதிப் பேரணி 02.04.2001 அன்று சுவிற்சர்லாந்து ஜெனீவா நகரில் நடைபெற்றது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொண்ட இப்பேரணி யானது ஜெனீவா தொடரூந்து நிலையத்தில் ஆரம்பமாகி ஐ.நா முன்றலில் முடிவடைந்தது. பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மனித உரிமை ஆர்வலர்கள், சுவிற்சர்லாந்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் உரையாற்றினார்கள்.

### அமைதிப் பேரணியில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள்

- தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- சிறீலங்கா அரசால் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தமிழர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை நீக்கி பேச்சுவார்த்தைக்குரிய சுமூக சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
- தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து, அதன் அடிப் படையில் போராட்டத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும்
- ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தைக்குத் தயாராக நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்த நாள் தமிழ் மக்களாகிய எங்களுக்குத் துக்கநாளாகும். இச்செயலானது தமிழ் மக்களாகிய எமக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுக்கின்றது.
- தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரித்தானியாவும் மற்றைய நாடுகளும் நீக்கி, நோர்வேயின் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.
- சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கெதிராகத் தன் அரசபயங்கரவாதச் செயல்களை உடன் நிறுத்த, அதற்கு அழுத்தங்கள் கொடுக்க, ஐக்கிய நாடுகள் சபையும், அனைத்துலகச் சமூகமும் முன்வரவேண்டும்.
- கொடுமையான யுத்தத்தின் அகோரத் தன்மையால் தம் சொந்த மண்ணைவிட்டு வெளியேறி, புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களை, இலங்கைத்தீவில் நிரந்தரத் தீர்வும், அமைதியும் ஏற்படும்வரை திருப்பி அனுப்பக்கூடாது.











தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net



## முல்லைக் கடலில் மோதல்

16.04.01 அன்று அதிகாலை 1.45 மணியளவில் முல்லைக் கடற்பரப்பில் நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்புலிகளின் படகுகளை சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோறாப் பீரங்கிக் கலங்கள் வழிமறித்துத் தாக்குதல் மேற்கொண்டன. இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்த சண்டையில் சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோறாப் பீரங்கிக்கலம் ஒன்று கடும் சேதத்திற்குள்ளானது. ஏழு கடற்படையினர் படுகாயமடைந்தனர். இரு கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர். யுத்தநிறுத்த காலப்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் சிறீலங்காக் கடற்படையின் கடற்படைக்கலங்கள் பிரவேசித்துத் தாக்குதலை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு மணித்தியாலங்கள் நீடித்த கடற்சமர்

20.04.01 அன்று அதிகாலை 2.00மணியளவில் முல்லைக் கடற்பரப்பில் நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்புலிகளின் படகுகளை சிறீலங்காக் கடற்படையின் 12 அதிவேகடோறா பீரங்கிக் கலங்கள் வழிமறித்துத் தாக்குதலை மேற்கொண்டன. நான்கு மணித்தியாலங்கள் நீடித்த கடற்சமரில் கடற்படைக்கு உதவியாக விமானப்படையின் கிபிர், மிக் 27 விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன. இச்சமரின்போது சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோறா பீரங்கிக் கலங்கள் இரண்டு கடும் சேதத்திற்குள்ளாகின. இதில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. எமது தரப்பில் 6 கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

## போர்நிறுத்தம் மேலும் நீடிக்கப்படமாட்டாது!

தமிழீழ விடுதலைப் புலிகள் 24.04.2001 நள்ளிரவுடன் முடிவடையும் தமது ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் நீடிக்கப்படமாட்டாது என அறிவித்துள்ளனர். இது சம்மந்தமாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் 23.04.2001 அன்று விடுத்துள்ள அறிக்கையின் சாரம் வருமாறு, "சிறீலங்கா அரசாங்கத்தின் கடும்போக்கான, விட்டுக்கொடாத நிலைப்பாடு காரணமாகவே நாம் இப்பிடியான வேதனைக்குரிய முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சிங்கள அரசானது எமது சமாதான நல்லெண்ண முயற்சியை நிராகரித்து வந்ததுடன் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலிருந்தும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, எமது தரப்பில் பெருமளவிலான உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தி வந்தது. எதிர்த்தாக்குதலைத் தவிர்த்து, வெறும் தற்காப்புப் போர் உத்திகளால் எதிரியின் இராணுவத்தாக்குதல்களை எதிர்கொள்வது முடியாத காரியமாக இருந்தது. எமது நல்லெண்ண சமிக்ஞையை எதிரி தனது இராணுவ அனுகூலத்திற்குப் பயன்படுத்துவதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது"

## விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அந்தஸ்த்து அவசியம்



"பேச்சுவார்த்தைகளுக்கு முன்னராகப் போருக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதும் புலிகள் இயக்கம்மீது விதித்துள்ள தடையை சிறீலங்கா அரசாங்கம் நீக்க வேண்டும் என்பதும் புதிய நிபந்தனைகளல்ல. இதனை நீண்டகாலமாகவே நாம் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றோம். சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நிலையான அத்திவாரத்தை இடும் அவசியமான ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இதனைப் பார்க்க வேண்டும்" என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 17.04.2001 அன்று தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய நீண்ட செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது "விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை சிறீலங்கா அரசு நீக்கிவிடவேண்டும் என்பதனை, நான் பகிரங்க மேடைப்பேச்சின்போதும், பத்திரிகைச் செவ்விகளிலும் எடுத்துரைத்திருந்தேன். தடைசெய்யப்பட்ட, சட்டவிரோதமான ஒரு அமைப்பாக நாம் பேச்சுக்களில் பங்குபற்றினால் அப்பேச்சுக்களின் பயனாகப் பெறப்படும் அரசியற்தீர்வும் சட்டவிரோதமான ஒரு பொருளாகவே கருதப்படும். நிரந்தரமான அரசியல் தீர்வு காணும் நோக்கத்துடன் எம்முடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த சிறீலங்கா அரசு விரும்பினால், எமது மக்களின் உண்மையான அதிகாரபூர்வமான பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அரசியல் அந்தஸ்த்து வழங்கப்படுவது அவசியம்" என்றும் வலியுறுத்தினார்

## அக்கினிச்சுவாலை -1 இன் முதுகெலும்பு உடைக்கப்பட்டது

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் முடிவடைந்த சில மணித்தியாலங்களினுள் சிறீலங்கா இராணுவத்தால் அக்கினிச்சுவாலை எனும் பெயரிலான படை நடவடிக்கையொன்று யாழ் குடாநாட்டில் நடை முறைப்படுத்தப்பட்டது. அக்கினிச்சுவாலை நடவடிக்கைக்காக நன்கு தயார்ப்படுத்தப்பட்ட 52வது, 53வது, 55வது படைப் பிரிவுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான துருப்பினர் யுத்த டாங்கிகள், கவசவாகனங்கள், மிக்-27, கிபீர் குண்டு வீச்சு வீமானங்கள், எம்.ஐ 24 உலங்குவானூர்திகள் என்பனவற்றின் உதவியுடன் நீண்டதூர வீச்சுக் கொண்ட ஆட்லறிகள், பல்குழல் எறிகணை செலுத்திகள் என்பனவற்றின் ஆதரவுடன் எறிகணைகளை மழைபோலப் பொழிந்தபடி கிளாலி எழுதுமட்டுவாள் பகுதிகளில் மூன்று முனைகளுக்கூடாக தமது முன்னேற்ற முயற்சிகளை 25.04.2001 அன்று அதிகாலை 3.00மணியளவில் ஆரம்பித்தனர்.



விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை உடைத்துக் கொண்டு உட்புக முயன்ற சிறீலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகளின் பல்வேறு படையணிகள் ஆட்லறிகள் மற்றும் பீரங்கிகளின் துணையுடன் தாக்குதலைத் தொடுத்தன. புலிகளின் படையணிகளுக்கு உதவியாக விசேட எல்லைப்படை, எல்லைப்படை, துணைப்படை, கிராமியப்படை முதலான படையணிகளும் தாக்குதலில் ஈடுபட்டன.

விடுதலைப் புலிகள் மூன்று நாட்களாக மேற்கொண்டு வந்த உக்கிரமும் ஆவேசமும் நிறைந்த தாக்குதல்கள் காரணமாக 400க்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். 2000க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். 75போராளிகள் இவ்வெற்றிகர முறிய டிப்புச் சமரில் வீரச்சாவடைந்தனர். இராணுவம் வந்த இடத்திற்கே பின்வாங்கி ஓடியது. விடுதலைப் புலிகளால் நூற்றுக் கணக்கான இராணுவத்தினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டு நல்லநிலையிலுள்ள 93 சடலங்கள் செஞ்சிலவைச் சங்கத்திடம் கட்டம் கட்டமாக ஒப்படைக்கப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# அணையாத தீபம்


லெப்.கேணல் கிறேசி
கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை
இல.187, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி
19.08.1960 - 19.04.1991




மருதம், முல்லை, பாலை, நெய்தல், குறிஞ்சி எனப்படுகின்ற ஐவகை நிலங்களிலே மருத நிலம் மிக நிறைந்த பூமி கிளிநொச்சி. கிளிநொச்சியின் தலைசிறந்த விவசாயக் கிராமங்களில் ஒன்றுதான் வட்டக்கச்சி. வட்டக்கச்சி மண்ணில் கணபதிப்பிள்ளை தம்பதியருக்கு 19.08.1960இல் ஆண்மகவு ஒன்று பிறந்தது. கோபாலபிள்ளை என்ற இயற்பெயரோடு அவதரித்த குழந்தையே கிறேசி என்ற பெயரோடு ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக, தனது தாய் நிலத்தின் விடியலுக்காக செங்களமாடியது.

லெப்.கேணல் கிறேசி, தமிழீழ தேசத்தில் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் நிலைகொண்டுள்ளதோ அங்கெல்லாம் அவரது சுடுகலனும் கனன்றிருக்கும். களமுனைகளில் தொடர்ச்சியாக ஓய்வுளச்சல் இன்றி சுழன்றடித்த வீரன் அவர். செய்வோம் அல்லது செத்து மடிவோம் என்ற வசனத்தை அடிக்கடி சொல்பவர், அதனைச் செயலிலும் செய்து காட்டியவர். எந்த நேரமும் இயக்கத்தின் நலனையே சிந்தித்து செயலாற்றிய மண்ணின் மைந்தன் அவர். கிளிநொச்சிப் பிரதேசத்தில் எண்பதுகளின் நடுப்பகுதி தொடங்கி, தொண்ணுாறுகளின் ஆரம்பம் வரைக்கும் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிரான அனைத்துத் தாக்குதல்களிலும் காத்திரமான பங்கை லெப். கேணல் கிறேசி வகித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு யூலை மாதம் வடமராட்சியில் நெல்லியடி முகாம் தகர்ப்பில் அணியொன்றின் பொறுப்பாளனாகக் கலந்து கொண்டார். அதன் பின்னர் லெப்.கேணல் கிறேசி அவர்கள் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்திய இராணுவக் காலத்தில் கிளிநொச்சி நகரில் கூடாரமிட்டிருந்த இந்தியப்படைகளுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். கிளிநொச்சியின் எல்லாமூலையிலும் இந்திய இராணுவம் தாக்கப்பட்டது. கூலிகள் அடித்து விரட்டப்பட்டனர். களமுனைகளில் நேருக்குநேர் கிறேசியினதும் அவரது அணியினரதும் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாத ஈ.பி.ஆர்.எல்.எவ் துரோகிகள் இவரது தந்தையாரான கணபதிபிள்ளை அவர்களை சுட்டுக்கொன்றனர். தந்தையாரின் இறுதிச்சடங்கிற்கு தனயன் வருவான் அப்போது வேட்டையாடுவோம் என ராஜீவின் இராணுவமும் துரோகக் கும்பலும் காத்திருந்ததாம். தனது விடுதலைப் பயணத்தில் எண்ணிறைந்த இடர்களையும், இழப்புக்களையும் சந்தித்த வேளையிலும் சலியாது கொண்ட கொள்கையில் உறுதி தளராத உரம் படைத்த நெஞ்சம் லெப்.கேணல் கிறேசியினுடையது.



இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகிய வேளையில் மண்டைதீவுப் பகுதியூடாக முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்ச்சமரின் போது விழுப்புண்ணடைந்தார். அவ்வேளையில் விழுப்புண்ணடைந்து துடித்ததை விட இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த சக போராளிகளின் நினைவில் துடித்தார்.

19.04.1991 அன்று மன்னர் பரப்புக்கடந்தான் பகுதியூடாக சிங்கள இராணுவம் முன்னேற முற்பட்டது. சிங்களத்தின் அம்முன்னேற்ற முயற்சியை முறியடிக்கும் நோக்கில் சென்ற விடுதலைப் புலிகளின் அணிகளுக்கு கட்டளைத் தளபதியாக களமுனையில் பணியாற்றிக் கொண்டிருந்தார் கிறேசி. எதிரியிடம் ஒரு அங்குல நிலம்தானும் பறிபோய்விடக்கூடாது என்ற உறுதியோடு தனது அணியினரை வழிநடத்தி சமராடிக் கொண்டிருந்த வேளையில் எதிரி ஏவிய குண்டொன்றினால் கிறேசி இந்த மண்ணைவிட்டுப் பிரிந்தார்.

1990.05.25ஆம் திகதி லெப்.கேணல் கிறேசி அவர்களுக்கு திருமணம் நடந்தது. திருமணம் நடைபெற்று ஒரு வருடம்கூட நிறைவடையாத நிலையில் களமுனையின் முன்னிலையில் நின்று களமாடி தனது குடும்பம் என்ற சிறுவட்டத்தில் நில்லாது, தமிழீழத் தாயகம் என்ற பெரும் குடும்பத்தின் விடியலுக்காய் விழுதாகிப் போனார் லெப்.கேணல் கிறேசி. இவர் அணையாத தீபமாகிய பத்தாம் ஆண்டு நினைவில் நினைந்துறைவோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# மீள்பார்வை 2001

## மார்ச்-2001

**01.03.2001**

மன்னார் சவளக்காட்டைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான கந்தையா உதயகுமார் என்பவர் சிங்களக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

**02.03.2001**

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த 47 வயதுடைய சந்திரபால, 37 வயதான அஜித் குமாரதுங்கா ஆகிய இரு சிங்கள மீனவர்கள் மனிதாபிமான அடிப்படையில் சமதான முன்னெடுப்பிற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலை செய்யப்பட்டனர்.

**08.03.2001**

சிறீலங்காவின் இவ்வாண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் இறுதி வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் எட்டாயிரம் கோடி ரூபா யுத்தத்திற்குச் செலவிடப்படவுள்ளதாக சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**10.03.2001**

சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் கைவிட்டுச் சென்ற மிதிவெடியில் சிக்கி மாங்குளப் பகுதியில் நான்கு பொதுமக்கள் கால்களை இழந்தனர்.

**12.03.2001**

பத்து வருடங்களின் பின்னர் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா கல்வியியல் கல்லூரியில் முதலாம் வருட தமிழ் மாணவன் ஒருவரை பகிடிவதை என்ற பெயரில் தாக்க முற்பட்ட சிங்கள மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் கல்லூரி விடுதிக் காப்பாளரும் ஒன்பது மாணவர்களும் காயமடைந்தனர்.

**15.03.2001**

கடந்த மாதம் மடுவிற்குச் சென்று திரும்பிய சர்வமதத் தூதுக்குழுவினருக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் தம்வசமிருந்த நான்கு சிங்கள விவசாயிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்.

**16.03.2001**

வன்னிப் பெருநிலப்பரப்பில் மிக்-27 ரக விமானங்கள் பலதடவைகள் பொதுமக்கள் வாழிடங்கள் மீது குண்டு வீசியதில் பலகோடிப் பெறுமதியான மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 22 வயதான யோகராசா உதயகுமார் என்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

**18.03.2001**

தமிழீழத் தேசியத் தலைவரின் முன்னிலையில் தமிழீழத்தின் உச்ச நீதிமன்ற நீதியாளர்கள், மேல் நீதியாளர்கள், மாவட்ட நீதியாளர்கள், சட்டவாளர்கள் ஆகியோர் உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

சிறீலங்கா இராணுவத்தால் சகோதரன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், வறுமை மற்றும் பசிக்கொடுமை தாங்காமல் 21 வயதுடைய வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த மணிவாசகம் மணிமேகலை என்ற இளம்பெண் அலரி விதையை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

**10.03.2001**



தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழத்திற்கு வெளியே முதன்முறையாக தமிழீழத்தின் உயர்விருதான மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் எலியேசர் அவர்கள் தமது 82வது வயதில் அவுஸ்திரேலியவின் மெல்போர்ண் நகரில் காலமானார்.

**19.03.2001**



மீன்பிடித் தொழில் மீது சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் விதித்துள்ள தடைகளை நீக்கக் கோரி பருத்தித்துறை அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்னால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மன்னாரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சிவமதி அர்ச்சுனன் என்ற இளம் தாய் அவரது ஐந்து வயது மகன் முன்னிலையிலும் திருமதி விஜிகலா நற்குணம் என்ற இளம் பெண்ணும் நிர்வாணமாக்கப்பட்டு குற்றத் தடுப்புப் பொலிசாரால் கூட்டாக பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டனர்.

**21.03.2001**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் மீது தாக்கமுற்பட்ட சிங்களக் கடற்படையினர் மீது கடற்புலிகள் திருப்பித் தாக்கினர். இதன்போது இடம்பெற்ற கடுமையான கடற்சமரின்போது இரு டோறாக் கலங்கள் மூழ்கடிக்கப்பட்டன. இரு கலங்கள் சேதமடைந்தன. 9ற்கும் மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவை அண்டிய கரையோராப் பகுதிகளில் சிங்கள விமானப் படையினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். 11 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

**22.03.2001**

விடுதலைப் புலிகள், மார்ச் 24 தொடக்கம் ஏப்ரல் 24 வரையான ஒரு மாதகாலத்திற்கு ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை நீடிப்பதாக அறிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் 'சிறீலங்கா அரசு போர் நடவடிக்கைகளையும், விமானத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தினால் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைக் கைவிட நேரிடுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது'

மட்டக்களப்பு கோரக்கல்மடுப் பகுதியில் பதுங்கியிருந்த சந்திவெளி படைத்தளத்தைச் சேர்ந்த சிங்களப் படையினர் சுட்டத்தில் 49 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான பி.நல்லராசா என்ற அப்பாவிக் குடும்பஸ்த்தர் பலியானார்.

**26.03.2001**

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 57வது கூட்டத் தொடரில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஆர்ச் பிசப் டெஸ்மன் டுட்டு அவர்கள் ஆற்றிய உரையில் அடக்கப்பட்ட நாடுகளின் போராட்டங்களை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரினார். அவரைச் சந்தித்த தமிழர் மனித உரிமை மையத்தின் பிரதிநிதிகளிடம் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டதோடு தமிழ் மக்கள் மீதான தமது கரிசனையையும் குறிப்பிட்டார்.

**31.03.2001**



20000 ஆசிரியர்கள் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 27வது வருடாந்த மாநாடு திருமலையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...




குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

தபாற்பெட்டி செய்த
தவறு என்ன அரக்கனே?
தன்மானத்தை இழந்து
தாய் மண்ணில் துடிப்பதேன்?
தவிக்கும் உள்ளங்களின்
தாகத்தை தீர்த்தது குற்றமா?
தமிழ் மண்ணில் தலை நிமிர்ந்து
நிற்பது குற்றமா?
சடப்பொருட்களுக்கு இந்த நிலை என்றால்
தமிழ் மக்களின் நிலையை சொல்ல
வேண்டுமா?

என்.பாலஜனா
பாரிஸ், பிரான்ஸ்

குண்டு வீழ்ந்ததால்
தபால் பெட்டியே
இன்று நீ தரைமட்டம்!
தொந்தரவு தராத உனக்கே
நாற்சந்தியை விட்டு நகராத உனக்கே
இக்கோலம் என்றால்
சந்ததியைப் பெருக்கும் மனிதனுக்கு!
சந்திக்குச் சந்தி நகரும்
பொது மக்களுக்கு!
சிந்திக்க வேண்டும் எம் எதிரிகள்
நல்ல மனிதனாக வரப் பிரார்த்திப்போம்.

மகா
இவ்றி சூ செயின்- பிரான்ஸ்

சிதைந்தது தபால் பெட்டி மாத்திரமல்ல
எம் தமிழர் வாழ்வும் கூடவே
புதைந்து போன பண்டைத் தமிழர் வாழ்வு
மீண்டும் மலரக் களத்தில்
குலையாத தமிழர் தானை தயார்
மீட்கப்படும் தேசத்தில் மீளவும்
ஒரு அஞ்சலகம் அமைப்போம்
முதலில் தேசம் மீட்டிடும் சமரிற்கு
தோள் கொடுத்திடு தமிழா.

இ.சேந்தன்
லண்டன்- ஐக்கிய இராச்சியம்

எங்கள் உறவுகள் மட்டுமா
உருக்குலைக்கப்பட்டார்கள்?
எம் உறவுகளோடு
உறவுகொள்ள உதவுகின்ற
உன்னையும் விட்டுவைத்தார்களா?
சிங்களத்தின் விழிகளிலே
எம்மூரில் தெரிவதெல்லாம்
அழிப்பதொன்றே வேலையென்றே..
நீயும் ஊமையாய் குமுறுவது தெரிகிறது
என்றாலும் உறுதியாய் நிற்கின்றாய்
முடிந்தவரை ஊருக்கு உதவிடவே!

மா.பாஸ்கரமூர்த்தி
லண்டோ- ஜேர்மனி

நெஞ்சமதில் நெறி தவறிய
வஞ்சகச் சிங்களத்தால்
நஞ்சாகியது எம் இருப்பு மட்டுமல்ல
அஞ்சல் பெட்டியும் கூடவே

வி.குணசீலன்
பாரிஸ்- பிரான்ஸ்

போர்க்களத்தில் நீயும் போரிட்டதற்காகவா
இத்தனை காயங்கள்?
உறவுக்குப் பாலமாக இருந்தவனே
உன்னையுமா
குண்டுகள் விட்டுவிடவில்லை.
சிங்களப் பேரினவாதத்தால் இங்கு ஒரு
தூசிக்கும் கூடவா
சுதந்திரமில்லை
இத்தனை அறிந்தும் அறியாமலா
எமக்கும் தடை?
சிங்களம் தடையை உடைத்தும்
தடையை உடைக்காமல் இருந்த
எமக்கும் தடையை நீக்கும் காலம்
வெகு தூரமில்லை.

இசைஞானவதனி செல்வராஜா
எல்ஸ்டோவ்-ஜேர்மனி

செப்பிவரும் நலமெல்லாம்
தப்பாமல் சேர்த்து வந்த
அப்பாவித் தபாற்பெட்டி
தன்நிலை தப்பியது
துப்பாக்கியினாலா?
புத்தம் புதுப் புத்த மத
தத்துவ முத்தினாலா?
சித்தம் செத்துவிட்ட
இதய சுத்தியற்ற- இன
வாதப் புத்தியினாலா?

இந்திரன்
சூரிச்-சுவிஸ்

சின்னஞ் சிறியதொரு ஊரில்
சன்னந் துளைத்த தபால்பெட்டி
பென்னம் பெரிய கைவண்ணம்
இன்னும் நிறைய பல சின்னம்
தென்னை என்னும் எங்கள் வாழ்வில்
கன்னம் வைப்பவரின் எண்ணம்
மின்னும் ஒரு நொடியிலேயே
சின்னாபின்னமாவது திண்ணம்.

எம்.கிருஸ்ணர்
சூரிச்- சுவிஸ்


## 2001 பெப்ரவரிக்கான...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net




சிறுகதைகள்
கவிதைகள்
மற்றும்

சமூகவியல், வரலாறு, தத்துவம்,
மொழியியல் இலக்கியக் கட்டுரைகள்
எல்லாவற்றையும்
தாங்கிவரும்

## எரிமலை

கலை பண்பாட்டு அரசியல்
சமூக சஞ்சிகை.
இவ்விதழ் சார்ந்த தொடர்புகளுக்கு -

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

இணையதளத்தில்: www.erimalai.com

Fax: (33) 1 43 58 11 91 Email: editor@erimalai.com

# எரிமலை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilanangam.net

